562

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகள் செயலக
# வெளியீடு

தொகுதி-14 எண்-1

ஜனவரி 30. 1992

V211,31 N92
N92.14.1
161502

வெளியீடு 23-7-1992 Issued 23-7-1992

26 அக் 2

562

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜனவரி 30, 1992 - தொகுதி 14 - எண் 1
Thursday the 30th January, 1992 - Volume 14 No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

விலை ரூ. 3-00] [Price Rs. 3-00

உள்ளடக்கம்.

30—1—1992

| | பக்கங்கள். |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | iii—v |
| Personnel of the Government of Tamil Nadu | vii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் | xi–xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் பட்டியல் (அகர வரிசைப்படி) | xv —xxvi |
| 1. இரங்கற் குறிப்புகள்— | |
| முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து | 1—3 |
| 2. இரங்கல் தீர்மானம்— | |
| முன்னாள் கல்வியமைச்சர் திரு. டி. எஸ். அவிநாசி லிங்கம் செட்டியார் மறைவு குறித்து | 3—5 |
| 3. வினாக்கள்-விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 5—50 |
| 4. அறிவிப்புகள்— | |
| (அ) இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துதல் குறித்து | 50—51 |
| (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 51 |
| (இ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் | 53 |
| (ஈ) முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப் படம் 31—1—1992 ஆம் நாளன்று பேரவையில் திறக்கப்பெறும் விழா நடைபெறுவது குறித்து | 118 |
| 5. சிறப்புக் குறிப்புகள்— | |
| (அ) வினாப் பட்டியலிலுள்ள இரு வினாக்கள் எடுக்கப் பெறாதது பற்றி அறிவிப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து | 51 |

டி 2 53-414A

பக்கங்கள்.

(ஆ) மின் கட்டணைவயர்வு குறித்து அவையில் அறிவிக்காமல் வெளியே அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து ... 5.

6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்— ... 54—

* திரு. மு. தென்னவன் ... 54—64

திரு. எஸ். டேனியல்ராஜ் ... 64—73

திரு. வி. பி. சந்திரசேகர் ... 73—81

திரு. ஆர். ஈஸ்வரன் ... 81—86

... 86—94

டாக்டர் ச. சுந்தரராஜ் ... 94—98

திரு. சி. ஞானசேகரன் ... 98—104

* திரு. தேனி பன்னீர்செல்வம் ... 104—108

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் ... 108—112

* திரு. வி. கோ. லட்சுமணன் ... 113—117

7. அரசினர் தீர்மானம்—

விதி 32-ஐத் தளர்த்துதல் குறித்து ... 117

6 பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் ... 119—130



161508
600 008
D
V2ll,31 'N92
N92.141




## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்—திரு. பீஷ்ம நாராயண் சிங்.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், இந்திய காவல் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், இலஞ்ச ஒழிப்பு, தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்துறை, சர்க்கரைப் பாகு கழிவு, பிற்பட்டோர் நலம், சிறுபான்மையினர் நலம், இந்துசமய அறநிலையத் துறை, செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுரங்கம் மற்றும் கனிம வளம், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, |
| 2. நிதி அமைச்சர் .. | மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நிதி, திட்டம், தேர்தல்கள், சட்டமன்றம். |
| 3. சட்ட அமைச்சர் .. | மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றிய சட்டம் இயற்றுதல் உட்பட), கம்பெனிகள் பதிவு, |
| 4. வருவாய்த் துறை அமைச்சர் .. | மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை, முத்திரைச் சட்டம், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம் மற்றும் கிராம தானம், பயண இசைவுச் சீட்டு, வணிக வரிகள். |

5. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : கல்வி, தொழில் நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்ப வியல், விளையாட்டு மற்றும் இளைஞர் நலம், தொல் பொருளியல், முன்னாள் இராணு வத்தினர் நலம்.

6. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: தொழிலாளர், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர்ப்புற மற்றும் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கு.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி, குடும்ப நலம், சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல், மின்னணுவியல், இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: போக்குவரத்து, அரசுடைமையாக் கப்பட்ட போக்குவரத்து, இயக் கூர்திகள் சட்டம், துறைமுகங்கள், வனங்கள் மற்றும் சின்கோனா.

9. கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

10. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப் பணிகள், பாசனம் (சிறு பாசனம் உட்பட), நெடுஞ்சாலை கள், மின்சாரம், மரபுசாரா எரி சக்தி வளர்ச்சி.

11. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், கிராமப் புறக் கடன் சம்பந்தப்பட்டவை. நகர்ப்புற மற்றும் கிராமப் புறக் குடிநீர் வழங்கல்.



12. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: உணவு, கூட்டுறவு, நுகர் பொருள் வழங்கல், விலைவாசிக் கட்டுப்பாடு, புள்ளி விவரங்கள்.

13. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கு. ப கிருஷ்ணன் : வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, சர்க்கரை வரி மற்றும் சர்க்கரை வளர்ச்சி

14. வீட்டு வசதி-நகர்ப் புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : வீட்டு வசதி, குடிசை மாற்றுத் திட்டம், ஊரக வீட்டு வசதி வளர்ச்சி, இடவசதிக் கட்டுப்பாடு, நகர அமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,

15. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. முகமது ஆசிப் : சிறு தொழில்கள், ஊரகத் தொழில் கள் (குடிசைத் தொழில்கள் உட் பட), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம், வக்ஃப்.

16. சமூக நலத்துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : சமூக நலம் (மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உட்பட), சத் துணவு, பிச்சைக்காரர் விடுதிகள், அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

17. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர், கால்நடை பராமரிப்பு பால், பால் பெருக்குத் திட்டம்.

18. மீனளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மீனளம்,

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

**Thiru BHISHMA NARAIN SINGH**

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister ..**The Hon. Dr. J. JAYALALITHA :**

Public, General Administration, I Administrative Service, Indian Service and other All-India Se District Revenue Officers, Police, vention of Corruption, Indu Prohibition and Excise, Mo Backward Classes, Minorities, Religious and Charitable Endow Information and Publicity, Technology, Cinematograph Tourism and Tourism Develo Corporation, Mines and Mi Tamil Development and Tamil C

2. Minister for Finance..**The Hon. Dr. V.R. NEDUNCHEZHI**

Finance, Planning, Elections and lature.

3. Minister for Law ..**The Hon. Thiru K. A. KRISHNASAI**

Law, Courts, Prisons, Legislation Weights and Measures, Debt including Legislation on Money le Chits and Registration of Compa

4. Minister for Revenue..**The Hon. Thiru S.D. SOMASUNDAI**

Revenue, District Revenue Establis Deputy Collectors, Registration, Act, Indians Overseas, Refugees Evacuees, Stationery and Pr Government Press, Bhoodan Gramdan, Passports and Comr Taxes,

5. Minister for Education. The Hon. Thiru ERAAMA VEERAPPAN:

Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology and Welfare of Ex-Servicemen.

6. Minister for Labour .The Hon. Dr. C. ARANGANAYAGAM:

Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes and Census.

7. Minister for Health ..The Hon. Thiru S. MUTHUSAMY:

Health, Medical Education, Family Welfare, Environmental Pollution Control, Electronics, Iron and Steel Control and Newsprint Control.

8. Minister for Transport..The Hon. Thiru K.A. SENGOTTAYAN:

Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports, Forest and Cinchona.

9. Minister for Handlooms and Textiles. ..The Hon. Thiru E. MADHUSUDHANAN:

Handlooms and Textiles.

10. Minister for Public Works. ..The Hon. Thiru S. KANNAPPAN:

Public Works, Irrigation including Minor Irrigation, Highways, Electricity and Non-Conventional Energy Development.

11. Minister for Local Administration. ..The Hon. Thiru ALAGU THIRUNAVUKKARASU:

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes Rural Indebtedness. and Urban and Rural Water Supply.



12. Minister for Food and Co-operation. ..The Hon. Thiru G. VISWANATHAN:

Food, Co-operation, Civil Supplies, Price Control and Statistics.

13. Minister for Agriculture. ..The Hon. Thiru Ku. Pa. KRISHNAN:

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture and Sugar, Cess and Sugar Development.

14. Minister for Housing and Urban Development. ..The Hon. Thiru T. M. SELVAGANAPATHY:

Housing, Slum Clearance, Rural Housing Development, Accommodation Control, Town-Planning, Urban Development, Madras Metropolitan Development Authority

15. Minister for Rural Industries. ..The Hon. Thiru MOHAMED ASIF:

Small Scale Industries, Rural Industries including Cottage Industries, Khadi and Village Industries Board and Wakf.

16. Minister for Social Welfare. ..The Hon. Thirumathi R. INDIRAKUMARI:

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meals, Beggar Homes, Orphanages and Correctional Administration.

17. Minister for Adi-Dravidar Welfare. ..The Hon. Thiru M. ANANDAN:

Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. Animal Husbandry, Milk, Dairy Development,

18. Minister for Fisheries. ..The Hon. Thiru D. JAYAKUMAR:

Fisheries,

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு திரு. இரா. முத்தையா.

பேரவைத் துணைத் தலைவர் :

பேராசிரியர் க. பொன்னுசாமி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

1. திரு. ம. சின்னசாமி
2. திரு. வ. சத்தியமூர்த்தி
3. திரு. ஆர். சிங்காரம்
4. திரு. வே. தம்புசாமி
5. திரு. நா. சா. பழனிசாமி

செயலாளர். :

திரு. செ. க. ஜானகிராமன்

## பேரவையின் முக்கிய அலுவலர்கள் (அகர வரிசைப்படி).

| | |
|---|---|
| இராமச்சந்திரன், திரு. ரெ. கு., பி.ஏ., பி.எல். | இணைச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சண்முகநாதன், திரு. சோ., பி.காம். | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. | துணைச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி., பி.எல். | துணைச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல்.,டி.பி. மற்றும் பி.ஏ. | துணைச் செயலாளர். |
| கிருஷ்ணமூர்த்தி, திரு. சு., பி.எஸ்ஸி. | குழு அலுவலர். |
| வெங்கடராமன், திரு. ப. சீ., பி.காம். | குழு அலுவலர். |
| அப்துல் சத்தார், திரு. ஜே., பி.ஏ., பி.எல். | சார்புச் செயலாளர். |
| இராசாராமன், திரு. வி., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| உமா, திருமதி வி. நா., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| கண்ணன், திரு. கே., பி.எஸ்ஸி., பி.எல். | சார்புச் செயலாளர். |
| சாயிநாதன், திரு. கி., பி.ஏ., பி.ஜி.எல்., | சார்புச் செயலாளர். |
| பவானி சுப்பையா திருமதி பி.ஏ., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |

| | |
|---|---|
| பானுமதி அனந்தராஜன், திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி பி.எஸ்ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| கணேசன், திரு. க. பி. ஏ., பி. ஜி. எல். | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம்.ஏ. | தலைமை நிருபர். |
| துரைபாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ. | தலைமை நிருபர். |
| ஜெயதேவ் திரு., பி. சி. | தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) பெயர்களும் தொகுதிகளும்.

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 1. அண்ணாமலை, திரு. எஸ். | ஆலந்தூர். |
| 2. அபரஞ்சி, திரு. பெ. | அரூர் (செ.வ.). |
| 3. அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | மயிலாடுதுறை. |
| 4. அமர்நாத், திரு. ஓ. எஸ். | மதுரை கிழக்கு. |
| 5. அம்மமுத்து பிள்ளை, டாக்டர் மு. | கன்னியாகுமரி. |
| 6. அரங்கநாதன், திரு. ஆர். டி. | விருத்தாசலம். |
| 7. அரங்கநாயகம், டாக்டர் செ. | தொண்டாமுத்தூர். |
| 8. அர்ச்சுனன, திரு. க. | வீரபாண்டி. |
| 9. அழகிரி, திரு.ச. | சிதம்பரம். |
| 10. அழகு திருநாவுக்கரசு, திரு. | ஒரத்தநாடு. |
| 11. அறிவழகன், திரு. ஆ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 12. அன்பழகன், திரு. எஸ். | நாமக்கல் (செ.வ.). |
| 13. ஆூசமணி, திரு. எஸ். | குத்தாலம். |
| 14. ஆண்டி அம்பலம், திரு. எம். | நத்தம். |
| 15. ஆண்டித் தேவர், திரு. எஸ். | திருப்பரங்குன்றம். |
| 16. ஆரோக்கியசாமி, டாக்டர் ச. | திருச்சிராப்பள்ளி-1 |
| 17. ஆறுமுகம், திரு. செ. | வானூர் (செ.வ.). |
| 18. ஆனந்தன், திரு. எம். | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 19. இந்திரகுமாரி, திருமதி இரா. | நாட்ராம்பள்ளி. |
| 20. இராசமாணிக்கம், திரு. க. வெ.வீ. | மேலூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயர் | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| 21. இராசாராமன், திரு. சோ. | .. | பாபநாசம். |
| 22. இராசாராம், திரு. க. .. | .. | பனமரத்துப்பட்டி. |
| 23. இராதாகிருஷ்ணன், திரு. த. க. | .. | திருமங்கலம். |
| 24. இராமகிருஷ்ணன், டாக்டர் இ. | | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 25. இராமசாமி அம்பலம், திரு.கே.ஆர். | | திருவாடனை. |
| 26. இராமசுவாமி, திரு.சி. .. | .. | சங்கராபுரம். |
| 27. இராமச்சந்திரன், திரு. மா.கா.மா. | | இளையான்குடி. |
| 28. இராமச்சந்திரன், திரு. ஓ. ஆர். | .. | கம்பம். |
| 29. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | | சாத்தூர். |
| 30. இராமச்சந்திரன், திரு. ச. | .. | பண்ருட்டி. |
| 31. இராமதாஸ், திரு. எஸ்.எஸ்.ஆர். | | செஞ்சி. |
| 32. இராமநாதன், திரு. இராம. | .. | கும்பகோணம். |
| 33. இராஜமன்னார், திரு. சு. சே. | | ஓட்டப்பிடாரம் (செ.வ.). |
| 34. இராஜன்பாபு (எ) தணிகைபாபு, திரு. ஓ. | | திருத்தணி. |
| 35. இராஜேந்திரன், திரு. பி.வி. | .. | வேதாரண்யம். |
| 36. இராம வீரப்பன், திரு. .. | .. | காங்கேயம். |
| 37. இலதா பிரியகுமார், திருமதி | .. | அரக்கோணம் (செ.வ.). |
| 38. இளம்வழுதி, திரு... .. | .. | எழும்பூர் (செ.வ.). |
| 39. ஈஸ்வரமூர்த்தி, திரு. பி. .. | .. | தாராபுரம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| 40. ஈஸ்வரன், திரு. ஆர். .. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 41. ஏகாம்பர ரெட்டி, திரு.எ. | .. | பள்ளிப்பட்டு. |
| 42. கண்ணப்பன், திரு. எஸ். | .. | திருப்பத்தூர். |
| 43. கண்ணன், திரு. வே. .. | .. | திருவண்ணாமலை. |
| 44. கந்தசாமி, திரு. கே. .. | .. | தலைவாசல் (செ.வ.). |
| 45. கருப்புசாமி, டாக்டர், எம். | .. | குன்னூர் (செ.வ.). |
| 46. கலியபெருமாள், திரு. ப. | .. | திருவையாறு. |
| 47. கலைச்செல்வி, திருமதி கே. எம். | | காட்பாடி. |
| 48. கவிநிலவு தர்மராஜ், திருமதி | .. | மொடக்குறிச்சி. |
| 9. கற்பகம் இளங்கோ, திருமதி. | .. | காரைக்குடி. |
| 50. கனகவல்லி, திருமதி என். சி. | .. | விளாத்திகுளம். |
| 51. காஞ்சி பன்னீர்செல்வம், திரு. | .. | உத்திரமேரூர். |
| 52. காந்திராஜன், திரு. ச. .. | .. | வேடசந்தூர். |
| 53. காளன், திரு. கோ. .. | .. | வில்லிவாக்கம். |
| 54. காளிராஜன், டாக்டர் மு. | .. | சமயநல்லூர் (செ.வ.). |
| 55. கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. | .. | ஆயிரம்விளக்கு. |
| 56. கிருஷ்ணன், திரு. எஸ். எம். | .. | தாம்பரம். |
| 57. கிருஷ்ணன், திரு. கு. ப. | .. | ஸ்ரீரங்கம். |
| 58. கிருஷ்ணன், திரு. சி. .. | .. | [illegible] |
| 59. குப்புசாமி, திரு. க. .. | .. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 60. குமரி அனந்தன், திரு. .. .. | சாத்தான்குளம். |
| 61. குமாரதாஸ், டாக்டர் தே. .. | கிள்ளியூர். |
| 62. குழந்தைவேலு, திரு. சி. .. | குளத்தூர் (செ.வ.). |
| 63. கோடிமாரி, திரு. ஆர். ... .. | நாகப்பட்டினம். |
| 64. கோபால கிருஷ்ணன், திரு. வே. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 65. கோபால், டாக்டர் க. .. ... | நன்னிலம் (செ.வ.). |
| 66. கோவிந்தராசு, திரு. மா. .. | ரிஷிவந்தியம். |
| 67. சக்குபாய், திருமதி ரா. .. | கும்மிடிப்பூண்டி. |
| 68. சக்குபாய் தேவராஜ், திருமதி டி... | திருவள்ளூர். |
| 69. சஞ்சய் ராமசாமி, திரு. .. .. | விருதுநகர். |
| 70. சண்முகநாதன், திரு.எஸ். .. | ஆலங்குடி. |
| 71. சண்முகம், திரு. எஸ்.வி. .. | மதுரை மேற்கு. |
| 72. சத்தியமூர்த்தி, திரு. வ. .. | கடலாடி. |
| 73. சந்திரசேகர், திரு. வி.பி... .. | பொள்ளாச்சி. |
| 74. சம்பத், திரு. எ. — .. | வாணியம்பாடி. |
| 75. சரஸ்வதி, திருமதி அ. தி.... .. | சத்தியமங்கலம். |
| 76. சரஸ்வதி, திருமதி ப. .. .. | கபிலர்மலை. |
| 77. சரோஜா, டாக்டர் வெ. | சங்கரி (செ.வ.). |
| 78. சாத்தையா, திரு. தி. .. .. | இராஜபாளையம் (செ.வ.). |
| 79. சாவித்திரி அம்மாள், திருமதி ஆர். | முசைபூர். |
| 80. சிங்காரம், திரு. ஆர். .. ... | பேராவூரணி. |



| | |
|---|---|
| 81. சிங்காரம், திரு. கே. .. .. | சொரப்பூர் |
| 82. சிங்கை கோவிந்தராசு, திரு. | சிங்காநல்லூர். |
| 83 சியாமளா, திருமதி ரெ. | கோவில்பட்டி. |
| 84. சிவசுப்பிரமணியன், திரு. கு | குறிஞ்சிப்பாடி. |
| 85. சிவபதி, திரு. என். ஆர். .. .. | தொட்டியம். |
| 86. சின்னசாமி, திரு. ம. .. .. | கரூர். |
| 87. சின்னசாமி, திரு. கா. .. .. | சேந்தமங்கலம் (ப.ப.). |
| 88. சின்னசாமி, திரு. வி.கே. | பவானிசாகர் |
| 89. சின்னப்பன், திரு. கே. கே. | ஜெயங்கொண்டம். |
| 90. சீனியம்மாள், டாக்டர் மு. | அவினாசி (செ.வ.) |
| 91. சீனிவாசன், திரு. ஆ. கு. | பெரணமல்லூர். |
| 92. சீனிவாசன், திரு. கு. | மன்னார்குடி. |
| 93. சுதர்சனம், திரு. டி. | பூந்தமல்லி. |
| 94. சுந்தரசாமி, திரு. எம். | கலசப்பாக்கம். |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு. |
| 96. சுந்தரம், திரு. எம். கே. | தண்டராம்பட்டு. |
| 97. சுந்தரராஜ், டாக்டர் எஸ். | பரமக்குடி (செ.வ.) |
| 98. சுந்தரவேல், திரு. ஏ.கே.சி. | திருப்பத்தூர். |
| 99. சுந்தராம்பாள், திருமதி செ. | மேட்டூர். |
| 100. சுப்பிரமணியம், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.). |
| 101. சுப்பிரமணியன், திரு. வி. என். | பெருந்துறை. |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயர் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 102. சுப்பிரமணியன், திரு. வி. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 103. சுப்புரத்தினம், திரு. ஆ. | பழனி (செ.வ.). |
| 104. சுலோசனா, செல்வி எல். | மேட்டுப்பாளையம். |
| 105. சுவாமிநாதன், திரு. சி. | புதுக்கோட்டை. |
| 106. செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிசெட்டி பாளையம். |
| 107. செல்லக்குமார், டாக்டர் அ. | அண்ணா நகர். |
| 108. செல்லசாமி, திரு. ஏ. டி. | ஒட்டன்சத்திரம். |
| 109. செல்லத்துரை, திரு. ஆ. | திருச்செந்தூர். |
| 110. செல்வகணபதி, திரு. டி. எம். | திருச்செங்கோடு. |
| 111. செல்வராசன், திரு. அ. | துறைமுகம். |
| 112. செல்வராஜ், திரு. கே. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 113. செழியன், திரு. தா. | பெரம்பலூர் (செ.வ.). |
| 114. சேகர், டாக்டர் எம். பி. | பெரம்பூர் (செ.வ.). |
| 115. சேகர், திரு. எம். ஜி. | பாலக்கோடு. |
| 116. சொக்கலிங்கம், திரு. பி. | மதுராந்தகம். |
| 117. சோமசுந்தரம், திரு. எஸ். பி. | தஞ்சாவூர். |
| 118. ஞானசேகரன், திரு. சி. | வேலூர். |
| 119. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| 120. தங்கமுத்து, திரு. கு. | திருவோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 121. தங்கராஜ், திரு. ஆர். | ஆண்டிமடம். |
| 122. தங்கவேல், திரு. எம். | முசிறி. |
| 123. தண்டாயுதபாணி, திரு. வி. | குடியாத்தம். |
| 124. தமிழரசன், திரு. செ.கு. | வந்தவாசி (செ.வ.). |
| 125. தமிழரசு, திரு. வெ. | ஆத்தூர். |
| 126. தம்புசாமி, திரு. வே. | திருவாரூர் (செ.வ.) |
| 127. தர்மலிங்கம், திரு. கி. | அணைக்கட்டு. |
| 128. தர்மலிங்கம், திரு. பே. | பாளையங்கோட்டை |
| 129. தவசி, திரு. கே. | ஆண்டிப்பட்டி. |
| 130. தனபால், திரு. ம. | திருப்போரூர் (செ.வ.). |
| 131. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 132. தாமோதரன், திரு. சி. | நெல்லிக்குப்பம். |
| 133. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி. |
| 134. துரை, திரு. எஸ். எம். | ஆத்தூர். |
| 135. துரைமுருகன், திரு. கு. சு. | பல்லடம். |
| 136. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில். |
| 137. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை மத்தி. |
| 138. தென்னவன், திரு. மு. | இராமநாதபுரம். |
| 139. தேவராஜ், திரு. அ. | செய்யாறு. |
| 140. தேனி பன்னீர்செல்வம், திரு. | போடிநாயக்கனூர் |
| 141. நடேசன், திரு. இரா. | திருவட்டாறு |
| 142. நடேசன், திரு. மு. | சேலம்-2. |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 143. நடேசன், பால்ராஜ் திரு. வெ. | நாங்குநேரி. |
| 144. நாகூர் மீரான், திரு. எஸ். | கடையநல்லூர். |
| 145. நிர்மலா, செல்வி பி. | திண்டுக்கல். |
| 146. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | தேனி. |
| 147. பஞ்சவர்ணம், திருமதி கே. | வலங்கைமான் (செ.வ.). |
| 148. பட்டாபிராமன், திரு. கா. ப. | காஞ்சிபுரம். |
| 149. பரந்தாமன், டாக்டர் ஜெ. | பேரணாம்பட்டு (செ.வ.). |
| 150. பரம்சிவம், திரு. ஆர். பி. | சின்னசேலம். |
| 151. பரமசிவன், திரு. ஏ. எம். | சோழவந்தான். |
| 152. பல்ராமன், திரு. உ. | பூங்காநகர். |
| 153. பழனிசாமி, திரு. இரா. | தாரமங்கலம். |
| 154. பழனிசாமி, திரு. க. | எடப்பாடி. |
| 155. பழனிசாமி, திரு. நா. சா. | கிணத்துக்கடவு. |
| 156. பழனிசாமி, திரு. வெ. | திருப்பூர். |
| 157. பழனிசாமி, திரு. ஜி. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 158. பழனியம்மாள், திருமதி க. | ராசிபுரம். |
| 159. பன்னீர்செல்வம், திரு. என். | திருவிடைமருதூர். |
| 160. பன்னீர்செல்வம், திரு. சா. | திண்டிவனம். |
| 161. பன்னீர்செல்வம், திரு. ஜெ. | திருநாவலூர். |
| 162. பாண்டியம்மாள், திருமதி இரா. | உசிலம்பட்டி. |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 163. பாப்பா சுந்தரம், திரு. அ. | குளித்தலை. |
| 164. பாலகங்காதரன், திரு. ஜெ. | சிவகாசி. |
| 165. பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 166. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | பொங்கலூர். |
| 167. பாலசுப்பிரமணியன், திரு. கி. | பட்டுக்கோட்டை. |
| 168. பாலன், திரு. எம். கே. | சைதாப்பேட்டை. |
| 169. பாலையா, திரு. ஆ. | குளச்சல். |
| 170. பீட்ரிக் டி. சோசா, டாக்டர் (திருமதி). | நியமனம் |
| 171. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | தென்காசி. |
| 172. புதுநயினார் ஆதித்தன், திரு. இரா. | சேரன்மகாதேவி. |
| 173. புரட்சிமணி, திரு. ச. | மங்களூர் (செ.வ.). |
| 174. புருஷோத்தமன், டாக்டர் வெ. | பெண்ணாகரம். |
| 175. பூராசாமி, திரு. எம். | பூம்புகார். |
| 176. பெரியசாமி, திரு. வே. | அந்தியூர் (செ.வ.). |
| 177. பெரியவீரன், திரு. எம். | பெரியகுளம். |
| 178. பெருமாள், திரு. செ. | ஏற்காடு (ம.ப.). |
| 179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.). |
| 180. பொன்னுசாமி, பேராசிரியர், க. | மருங்காபுரி. |
| 181. பொன்னுசாமி, திரு. பெ. | தருமபுரி. |
| 182. பொன்னுவேலு, திரு. ஏ. தா. | வரகூர் (செ.வ.). |
| 183. போளூர் வரதன், திரு. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.). |
| 184. மணிமேகலை, டாக்டர் சு. | அரியலூர். |
| 185. மணிமேகலை, திருமதி வி. ஜி. | அருப்புக்கோட்டை. |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 186. மணிவாசகம், திரு. கே.பி. | உடுமலைப்பேட்டை. |
| 187. மதுசூதனன், திரு.இ. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 188. மரியம் உல் ஆசியா, திருமதி கே. | அரவக்குறிச்சி. |
| 189. மல்லிகா, செல்வி கோ. | புவனகிரி. |
| 190. மனோகரன், திரு. கே.ஏ. | ஓசூர். |
| 191. மாணிக்கம், திரு.சி. | ஈரோடு. |
| 192. முஹமது ஆசிப், திரு. | திருவல்லிக்கேணி. |
| 193. மாலா, டாக்டர் (செல்வி) ஜி.ஆர். | திருச்சிராப்பள்ளி-2. |
| 194. முத்துசாமி, திரு.சு. .. | பவானி. |
| 195. முத்தையா, திரு.இரா. .. | சேடப்பட்டி. |
| 196. முருகானந்தம், திரு. [illegible], ஆர். .. | சிவகங்கை. |
| 197. முருகையா பாண்டியன், திரு. ஆர். | அம்பாசமுத்திரம். |
| 198. முனிரத்தினம், திரு. ஏ. எம். .. | சோளிங்கர். |
| 199. முனிவெங்கடப்பன், திரு. கே. .. | கிருஷ்ணகிரி. |
| 200. முனுசாமி, திரு. கா.பூ. .. | காவேரிப்பட்டிணம் |
| 201. மூர்த்தி, திரு.து. .. | சீர்காழி (செ.வ.). |
| 202. மோசஸ், டாக்டர் எம். .. | நாகர்கோவில். |
| 203. ரகுபதி, திரு. செ. .. | திருமயம். |
| 204. ரங்கநாதன், திரு .ப. .. | புரசைவாக்கம். |
| 205. ரங்கராஜன், திரு. டி.எம். .. | மயிலாப்பூர். |
| 206. ரத்தினவேல், திரு. த. .. | திருவெறும்பூர். |



| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | தொகுதியின் பெயர் |
|---|---|
| 207. ரமணி நல்லதம்பி, திருமதி .. | ராதாபுரம். |
| 208. ரமேஷ், திரு. வி. பி. ஆர். .. | தூத்துக்குடி. |
| 209. ரவிக்குமார், திரு.ஏ. .. | பொன்னேரி (செ.வ.). |
| 210. ரவிச்சந்திரன், திரு.வி. .. | உப்பிலியாபுரம் (ம.ப.). |
| 211. ராமசுப்பு, திரு. எஸ். எஸ். .. | ஆலங்குளம். |
| 212. ராஜு, திரு. எச்.எம். .. | உதகமண்டலம். |
| 213. ராஜு, திரு. கே. ஆர். .. | கடலூர். |
| 214. ராஜு, திரு. கே.பி . .. | பேரூர். |
| 215. ராஜேந்திரன், திரு. எஸ்.ஆர். | காட்டு மன்னார் கோவில் (செ.வ.) |
| 216. லட்சுமணன், திரு. வி. கே. .. | கோயம்புத்தூர். (கிழக்கு). |
| 217. லாரன்ஸ், திரு. கு. .. | பத்மநாபபுரம். |
| 218. லோகாம்பாள், திருமதி ஜெ. .. | லால்குடி. |
| 219. வரதராஜன், திரு. செ.து. .. | செங்கல்பட்டு. |
| 220. விசுவநாதன், திரு. ஜி. .. | ஆற்காடு. |
| 221. வீரபாண்டியன், டாக்டர் பெ. .. | செங்கம் (செ.வ.) |
| 222 வெங்கடராம ரெட்டி, திரு. மூ. .. | தளி. |
| 223. வெங்கடேசன், திரு. பி. ஆர். எஸ். | கடலூர். |
| 224. வேடியப்பன், திரு. தா. .. | போளூர். |
| 225. வேணுகோபால், திரு. என். ஜி. .. | ராணிப்பேட்டை. |
| 226. வேலையா, திரு. டி. .. | திருநெல்வேலி. |
| 227. ஜனார்த்தனன், திரு. தே. .. | விழுப்புரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினரின் பெயரும் | | தொகுதியின் பெயர் |
|---|---|---|
| 228. ஜானகிராமன், திரு. கோ. | .. | மேல்மலையனூர். |
| 229. ஜீனத்சர்புதீன், திருமதி | .. | சேப்பாக்கம். |
| 230. ஜெயக்குமார், திரு. எஸ். | .. | தியாகராய நகர். |
| 231. ஜெயகுமார், திரு. டி. | .. | ராயபுரம். |
| 232. ஜெயராமன், திரு. எஸ். ஆர். | .. | சேலம்-1. |
| 233. ஜெயலலிதா, டாக்டர் ஜெ. | .. | பர்கூர். |
| 234. ஜெய்சன் ஜேக்கப், டாக்டர் | .. | ஆரணி. |
| 235. ஸ்ரீதரன், டாக்டர் அ. .. | ... | வால்பாறை (செ.வ.). |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

| | | |
|---|---|---|
| சுப்பிரமணியன், திரு. கே. | .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 16, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023.

1992, ஜனவரி 30, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்"

வரப்போவதை முன்னரே அறிந்து அவற்றிலிருந்து காத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும் அறிவுடைய வர்களுக்கு, அவர்கள் நடுங்கும்படியாக வரக்கூடிய துன்பம் ஏதும் இல்லை.

### 1. இரங்கற் குறிப்புகள்.

#### முன்னாள் உறுப்பினர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான, திரு. ஏகால் மு. நடேசன் அவர்கள் 27—7—1991 ஆம் நாளன்றும், திரு. கே. அனந்த நம்பியார் அவர்கள் 11—10—1991 ஆம் நாளன்றும், திரு. ஏ. பெருமாள் அவர்கள் 21—10—1991 ஆம் நாளன்றும், திரு. கோ. ரகோத்தமன் அவர்கள் 2—11—1991 அன்றும் திரு. என். ரங்கசாமி ரெட்டியார் அவர்கள் 4—11—1991 அன்றும், திரு. சி. பழனி அவர்கள் 17—1—1992 அன்றும் மற்றும் திருமதி பார்வதி அர்ச்சுனன் அவர்கள் 27—1—1992 ஆம் நாளன்றும் மறைவுற்றதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏகால் மு. நடேசன் அவர்கள் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை தென்னார்க்காடு மாவட்டம் நெல்லிக்குப்பம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றி உள்ளார்.

[1992 ஜனவரி 30

திரு. கே. அனந்த நம்பியார் அவர்கள் 1946 ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டு வரையில் இரயில்வே டிரேட் யூனியன் தொழிலாளர் சட்டமன்றப் பேரவை தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார். அவர் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரையிலும், 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரையும் மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ. பெருமாள் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தனித் தொகுதியிலிருந்தும், மற்றும் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை திருச்சுழி தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. கோ. ரகோத்தமன் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை தென்னார்க்காடு மாவட்டம் முகையூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றி உள்ளார்.

திரு. என். ரங்கசாமி ரெட்டியார் அவர்கள் 1946 ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டு வரை தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறை ஊரகத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றி உள்ளார்.

திரு. சி. பழனி அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை சேலம் மாவட்டம் ஓமலூர் தனித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி உள்ளார்.

திருமதி பார்வதி அர்ச்சுனன் அவர்கள் 1962 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை பெரியார் மாவட்டம் தாராபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றி உள்ளார்.



1992 ஜனவரி 30]

அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலைப் பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித் துளிகள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

முற்பகல் 9-35

## 2. இரங்கல் தீர்மானம்.

### முன்னாள் கல்வியமைச்சர் திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார், முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள் மறைவு குறித்து கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பேரவைமுன் வைக்கிறேன்:

"தலைசிறந்த விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் கல்வி அமைச்சருமான திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் 21—11—1991 அன்று மறைவுற்ற செய்தி கேட்டு இப்பேரவை மிகவும் வருந்துகிறது.

மறைந்த திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் 1946 ஆம் ஆண்டு முதல் 1951 ஆம் ஆண்டு வரை கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். 1946 ஆம் ஆண்டு முதல் 1949 ஆம் ஆண்டு வரை கல்வி அமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.

அன்னாரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது."

மறைந்த திரு. டி. எஸ். அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் 1903 ஆம் ஆண்டு மே திங்கள் 5 ஆம் நாள் கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூரில் பிறந்தார். வழக்கறிஞராக தனது வாழ்க்கையைத் துவங்கிய அவர், தனது 27-வது வயதில் தேசிய இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, 1930 ஆம் ஆண்டு தனது வழக்கறிஞர் பணியை விட்டுவிட்டு, காந்தியடிகளின் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்றார். மேலும், விடுதலை இயக்கப் போராட்டங்களில் ஈடுபட்டமைக்காக, பல்வேறு நேர்வுகளில் சிறை தண்டனையையும் அனுபவித்தார். 1935 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை மத்திய சட்டமன்றப் பேரவை உறுப்பினராகவும், 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை மக்களவை உறுப்பினராகவும், 1958 ஆம் ஆண்டு முதல் 1964 ஆம் ஆண்டு வரை மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். 1946 ஆம் ஆண்டு முதல் 1949 ஆம் ஆண்டு வரை தமிழகத்தின் முதல் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த காலத்தில், பள்ளிகளில் முதன்முதலாக தமிழ் வழிப் பாட மொழியை நடைமுறைக்குக் கொண்டு வந்தார். அடிப்படைக் கல்வி முறையை அறிமுகப்படுத்தியதோடன்றி, உயர்நிலைக் கல்வி முறையையும் சீரமைத்த பெருமையை உடையவர் அவர். மேலும், முதன்முறையாக நூலகங்கள் சட்டம் அவரால் அறிமுகப்படுத்தப் பட்டது. கல்வி சீர்திருத்தத்தில் பேரார்வம் கொண்ட அவர், தற்போது ஒரு சீரிய பல்கலைக் கழகமாகத் திகழ்கின்ற "ஸ்ரீ இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா"வினை நிறுவிய பெருமை கொண்டவர். முதல் தமிழ் அகராதியை வெளியிட்ட தமிழ் வளர்ச்சிக் கழகத்தினை நிறுவியவரும் அவரே. அன்னாரது பல்வேறு தமிழ்ப் படைப்புகள் இந்திய அரசினால் நூல்களாக வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், கல்வி வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய சீரிய தொண்டிற்காக 1970 ஆம் ஆண்டு அவருக்கு "பத்மபூஷன்" விருது, இந்திய அரசால் வழங்கப்பட்டது. அவரது மறைவு, தமிழகத்திற்கும், இந்தியத் துணைக் கண்டம் முழுமைக்கும் ஒரு பேரிழப்பாகும். அவரது குடும்பத்தாருக்குப் பேரவை சார்பிலும், என் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித் துளிகள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித் துளிகள் மௌனமாக எழுந்து நின்றதன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.)

## 3. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள்; வினா எண் 1, திரு. ஆ. சுப்புரத்தினம், மாண்புமிகு நிதி அமைச்சர்.

1—

**நிர்வாகச் செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தல்.**

* 4082—திரு. ஆ. சுப்புரத்தினம்:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அரசு நிர்வாகச் செலவுகளில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

**விவர அறிக்கை.**

(அ) ஆம்.

(ஆ) அதன் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. திட்டம் மற்றும் திட்டம் சாரா இனங்களின் கீழ் தோற்றுவிக்கப்படுகின்ற புதிய பணியிடங்களுக்கு ஆகும் செலவினங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

2. அரசு வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் எரி பொருளுக்கு உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

3. புதிய அறை கலன்கள் வாங்குவதற்குத் தடை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. தொலைபேசி இனங்களுக்கு ஒதுக்கப்படும் செலவினங்களுக்குச் சில வரைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

5. அலுவலகச் செலவினங்களின் கீழ் வருகின்ற சிற்றுண்டி மற்றும் விருந்து ஏற்பாடுகள், விளம்பரம், விழாக்கள், சுற்றுலா, பயணங்கள், பயிற்சி, கருத்தரங்க நிகழ்ச்சிகள், கட்டிடப் பராமரிப்புச் செலவுகள் மற்றும் சில்லறைச் செலவினங்களின் கீழ் ஆகும் கூலிச் செலவு ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது பற்றிய வரன்முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

முற்பகல் 9-40

**திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விவர அறிக்கை அவையில் வைக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இருந்தபோதிலும், அரசாங்க அலுவலகங்களைப் பார்க்கும் போது, வேலை நேரம் முடிந்த பிறகும்கூட, அங்கு இயங்கக்கூடிய மின் விசிறிகளைப் பொறுப்பற்ற நிலையில் சிலர் நிறுத்துவது கிடையாது. தொலைபேசியை முறையற்ற வகையிலும் மித மிஞ்சிய அளவும் சிலர் பயன்படுத்தக் கூடிய நிலையில் அரசாங்கச் செலவானது விரயம் ஆகிறது. இவற்றையெல்லாம் சற்றுக் கட்டுப்படுத்தினால் சிறப்பாக இருக்கும் என்ற அளவில் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கன நடவடிக்கைகளாகப் பல்வேறு முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது. திட்டம் மற்றும் திட்டம் சாரா இனங்களில் தோற்றுவிக்கப்படுகின்ற புதிய பணியிடங்களுக்காகும் செலவினங்களுக்கு இப்போது தடை விதிக்கப்பட்டுள்ளது. அரசு அலுவலகங்களுக்கு எரிபொருளுக்கு



உச்ச வரம்பு ஒவ்வொரு துறைக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. புதிய அறைகலன்கள் வாங்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. தொலைபேசி இனங்களுக்கு ஒதுக்கப்படும் செலவினங்களுக்கு சில வரைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அலுவல் செலவினங்களின் கீழ் வருகின்ற சிற்றுண்டி, விருந்து ஏற்பாடுகள், விளம்பரம், விழாக்கள், சுற்றுலாப் பயணங்கள், பயிற்சிக் கருத்தரங்கு நிகழ்ச்சிகள், கட்டிடப் பராமரிப்புச் செலவுகள் மற்றும் சில்லறைச் செலவினங்களின்கீழ் ஆகும் கூலி ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது பற்றிய வரைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இதில் குற்றம் குறைகள் இருக்குமானால், வரம்பு மீறி யாரேனும் மாண்புமிகு உறுப்பினர் கூறியது போன்று நடப்பார்களேயானால் அவர்கள் மீது முறைப்படி நடவடிக்கை எடுக்கவும் விதிமுறைகள் இருக்கின்றன. நடவடிக்கை எடுக்கப்பட்டும் வருகின்றன.

**திரு. ஆ. சுப்புரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு மேற்கொண்டிருக்கக்கூடிய சிக்கன நடவடிக்கைகளைத் தெரிவித்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிபொருளைச் சிக்கனப்படுத்த வேண்டிய எண்ணத்தோடு சில நடைமுறைக்கு ஒத்துவராத குறியீடுகள் ஊராட்சி ஆணையாளர் போன்ற களத்திலே வேலை செய்யக் கூடிய அதிகாரிகளுக்கு நிர்ணயித்துள்ளார்களே, அவர்களுக்கு இருக்கிற பெரிய பொறுப்பிலே அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற குறைந்த எரிபொருளை வைத்து அவர்கள் சரிவர அவர்களுடைய பணிகளைக் கவனிக்க முடியாமல் பணிகள் முடங்கிக் கிடக்கின்றன. அதை அரசு அறியுமா? அந்த குறியீட்டினைக் கூட்டி, உண்மையிலேயே அரசு தீட்டுகின்ற திட்டங்களை, களத்திலே செயல்படுத்தும் வேலை செய்கின்ற அவர்களுக்கு வேண்டிய கூடுதல் எரிபொருளை வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு துறையைச் சார்ந்தவர்களும், அவர்களுடைய அலுவல்கள், அவர்கள் மேற்கொள்ள வேண்டிய பயணங்கள், ஆகியவற்றையெல்லாம் கணக்கிட்டு, அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு லிட்டர் பெட்ரோல் அல்லது டீசல் எண்ணெய் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை அதற்கென்று ஒதுக்கப்பட்ட வல்லுநர் குழு ஆராய்ந்து முடிவு செய்திருக்கிறார்கள். அந்த வகையில் ஒவ்வொரு துறைக்கும் அவர்களுடைய போக்கு, அவர்களுடைய பயணங்கள், அவர்கள் மேற்கொண்டிருக்கிற வேலையின் தன்மைகள் ஆகியவற்றை யொட்டி ஒதுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று அவை இன்றியமையாத பணிகளானால், செய்து தரவேண்டிய பணிகள் என்றால், இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிற பெட்ரோல் அளவு போதுமானது இல்லையென்றால் அவர்கள் மேல்முறையீடு செய்யலாம். அதைப் பற்றி தக்க வல்லுநர் குழு ஆராய்ந்ததற்குப் பிறகு கூடுதலாக எண்ணெய் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமானால், அதையும் அவ்வப்போது செய்து வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது போன்ற அந்த ஊரகப் பகுதிகளிலே பணியாற்றுவதற்கு இப்போது ஒதுக்கப்பட்ட அளவு போதவில்லையென்றால் எந்த அளவுக்குக் கூடுதலாக ஒதுக்கலாம் என்பதை இந்தக் குழுவினரே ஆராய்ந்து தக்க முடிவு எடுப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. சின்னசாமி.

**திரு. கா. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசும், மாநில அரசும், சிக்கனத்தைக் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் சில உயர் அதிகாரிகள் ஏர்கண்டிஷன் அறைகளில் இருக்கிறார்கள். இதையெல்லாம் இன்றைக்கிருக்கிற சூழ்நிலையில் ஒரு ஆடம்பரச் செலவு என்று கருதலாம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள்— ஏர்கண்டிஷன் உபயோகிக்கக் கூடிய அந்த உயர் அதிகாரிகளுக்கு அவை தேவையில்லை என்பதை ஒரு விதிமுறை மூலம் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்கண்டிஷன் என்பது





இப்போது ஒரு ஆடம்பரச் செலவாகக் கருதப்படாமல், அது ஒரு இன்றியமையாத தேவை என்று கருதப்படுகின்ற அளவுக்கு (சிரிப்பு) இன்றியமையாத செலவு என்று கருதப்படுவதால்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் நலன் கருதி இப்போது இந்த மண்டபம் கூட ஏர்கண்டிஷன் ஆக்கப்பட்டுள்ளது. ஆகவே, ஏர்கண்டிஷன் ஆக்க வேண்டுமென்றால் கூட எந்த ஒரு அதிகாரியும் தன்னிச்சையாக, தாங்களாகவே முடிவு எடுத்துவிட முடியாது. அரசினுடைய அனுமதி பெற்றுத்தான் அதைச் செய்ய வேண்டும் என்ற நிலை இருக்கிறது. வாரியங்களைப் பொறுத்தவரை அரசின் அனுமதி பெறாமல் வாரியத்தினுடைய ஆட்சிக் குழுவிலே வைத்து அவற்றைத் தீர்மானித்ததன் காரணமாக அவர்கள் சில பல இடங்களிலே ஏர்கண்டிஷன் வைத்திருக்கிறார்கள். ஆனால் பொதுவாக பார்க்கின்றபோது, வேலை சரியாகவும், சீராகவும் நடைபெறவேண்டும். அவர்கள் வெளியிலே போகாமல் உள்ளேயே இருந்து வேலையை நடத்தவேண்டும் என்றால் இந்த 'ஏர்கண்டிஷன்' இருப்பது நல்லதுதான். கூடுமானவரையில் அதிகமான அளவுக்கு அதைப் பயன்படுத்தாத முறையில் அனுமதி வழங்குவதிலே நாம் தடை விதித்துக் கொண்டு வருகிறோம். பல இடங்களிலே தங்களுக்கு 'ஏர்கண்டிஷன்' வைக்கவேண்டுமென்று கேட்கிறார்கள். நிதி நிலைமை காரணமாக இப்போது வைப்பதற்கு இல்லை என்றுதான் அரசாங்கம் ஆணையிட்டு வருகிறது.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. இராமச்சந்திரன்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிர்வாகச் செலவுகளில் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று இந்திய அரசு ஏதேனும் தமிழ் நாடு அரசுக்கு யோசனை கூறியுள்ளதா? பொதுவாக வெற்று விளம்பரங்களையும் வீண் விழாக்களையும் தவிர்க்கவேண்டுமென்று அரசு முன்மாதிரியாக இயங்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடத்திலிருந்து அப்படிப்பட்ட தாக்கீது வந்ததா என்ற விவரக் குறிப்பு இல்லை.

தனியாகக் கேள்வி போட்டால் அந்த விவரக் குறிப்பை அளிக்க முடியும். விளம்பரங்களைப் பொறுத்தவரையிலே தேவையான செலவுகளையும், மற்றைய விழாச் செலவுகளையும் எந்த அளவுக்குச் செய்யலாம் எந்த அளவுக்குச் செய்யப்பட்டு இருக்கின்றன என்பன எல்லாம் கணக்கிடப்பட்டு முறையாகவும், வழியாகவும் செய்யப்பட்டு வருகின்றன. கூடுமானவரையில் அவற்றைக் குறைப்பதற்கான தன்மையிலே அவர்கள் அதிகமாகக் கேட்டால் கூட எது எது செய்யப்பட வேண்டாம் என்பது தடுத்து நிறுத்தப்படுகிறது. எவையெவை தேவையோ அந்த அளவுக்குத்தான் செய்யப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. பி. சந்திரசேகர்.

**திரு. வி. பி. சந்திரசேகர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியிலே, நகராட்சியினுடைய அதிகாரிகள் உபயோகிக்கின்ற ஜீப்புகள், கார்கள் போன்றவை பெட்ரோலில் இயங்கக்கூடியவையாக இருந்து வருகின்றன. பெட்ரோல் டீசல் விலையைவிட 3 மடங்கு அதிகமாக இருக்கின்றது. ஆகவே அப்படிப்பட்ட நிலைமையிலே அந்த வாகனங்களுக்கு டீசல் இயந்திரங்களைப் பொருத்துவதனால் மூன்றில் ஒரு பாகம் செலவு குறையும் என்பதை அரசு அறியுமா? அப்படி செய் வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசிடர் கார்கள் வழங்கப் படுகின்ற இடங்களில் அவை பெரும்பாலும் பெட்ரோலில் இயங்கு வனவாகத் தான் அமைகின்றன. வேன் அல்லது ஜீப் போன்ற மற்றவை வழங்கப்படுகின்ற இடத்தில் அவை டீசலாக இருக்கவேண்டும் என்ற முறையில் பெரும்பகுதி டீசல் வேன்களும் டீசல் ஜீப்புகளும் அனுமதிக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று அம்பாசிடர் காரிலே சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதற்கு ஏற்ற அகையில் டீசல் என்ஜின் பொருத்தப்பட்டவைகளைப் பயன்படுத்தும் நோக்கம் இருக் கிறது. எதிர்காலத்தில் பெட்ரோல் என்ஜின் பொருத்தப்பட்ட வைகளை விட டீசல் என்ஜின் பொருத்தப்பட்டவைகளைப் பயன் படுத்தலாமா என்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. தண்டாயுதபாணி.

**திரு. வி. தண்டாயுதபாணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மாநில அரசுகள் எடுத்திருக்கின்ற சிக்கன நடவடிக்கைகளுக்கு ஏற்ப என்னுடைய சம்பளத்திலே மாதம் ரூ. 500-ஐ இந்த அரசாங்கம் பிடித்துக்கொள்ளவேண்டும் என்றும், அந்த ரூ. 500-ஐக் குறைத்து வாங்கிக்கொள்கிறேன் என்றும் உறுதி அளிக்கிறேன் இங்கே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி கேட்கவேண்டும்.

வினா எண் 2. திரு. ஜி. பழனிசாமி. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

2—

**போலி சீட்டு கம்பெனிகளைத் தடை செய்தல்.**

* 2143—திரு. ஜி. பழனிசாமி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் போலி சீட்டுக் கம்பெனிகளைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சீட்டு நிதிச்சட்டம் 1982-ன் கீழ் தமிழகத்தில் நடத்தப்படும் பதிவுறாச் சீட்டுகள் குறித்து புலனாய்வு செய்து அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உரிய நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுகிறது.

மேலும், சென்னை நகரத்தைப் பொறுத்தவரை "சீட்டு விழிப்புக் குழு" என்ற அமைப்பும் செயல்பட்டு வருகிறது.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் போலி சீட்டுக் கம்பெனிகள் வைத்து இரட்டிப்பாகப் பணத்தைத் தருகிறோம் என்று சொல்லி ஏழை எளிய மக்களை, அரசு ஊழியர்களை ஏமாற்றிக் கொண்டு, பல கோடி ரூபாய்களை சம்பாதித்துக் கொண்டு பிறகு அந்த இடத்தைக் காலி செய்துவிடுகிறார்கள். இதுபோன்ற நட வடிக்கைகளில் இதுவரையில் அரசு எத்தனை பேர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கின்றது ? நடவடிக்கைகளின் விவரங்கள்

என்ன என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதுபோல, தமிழகத்தில் சில இடங்களில் பல போலி கம்பெனிகள் பொருள்களை இரட்டிப்பு மதிப்பில் தருவதாக சீட்டு சேர்த்து ஏமாற்றி வருகின்றன. இது சீட்டு நிதி சட்டத்தின்கீழ் வராது. இது Prize Chits and Money Circulation Scheme Banning Act, 1978 என்ற சென்ட்ரல் ஆக்டின்கீழ் வருவதன் காரணமாக அதுபற்றி வருவாய்த்துறை வட்ட ஆட்சியாளருக்கும், அதேபோல போலீசாருக்கும் தகவல் கொடுத்தால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**திரு. ஜி. பழனிசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட போலி கம்பெனிகளைக் கண்டறிவதற்கு—அநேகமாக போலீஸ் துறையைச் சார்ந்தவர்கள் கூட பல பேர் மதுரை, திருச்சி போன்ற இடங்களில் பல இலட்சக் கணக்கான ரூபாய்களைக் கட்டி ஏமாந்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, மிகப் பெரிய விளம்பர போர்டுகளோடு இதுபோன்ற நிறுவனங்கள் நடத்துவதைக் கண்டறிந்து காவல் துறை மூலமாக நடவடிக்கை எடுக்க அரசு தயாராக உள்ளதா என அறிய விரும்புகிறேன். அதுபோன்று ரெவின்யூ துறை அதிகாரிகளுக்கும், காவல் துறையினருக்கும் இதுபற்றி அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அது அமுலில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரிடத்திலே ஏதாவது தகவல் இருக்குமானால், அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. கே. சின்னசாமி.

**திரு. வி. கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்படி நடத்தப்படும் சீட்டுக் கம்பெனிகள் எத்தனை உள்ளன ? எத்தனை சீட்டு குருப்புகள்



தற்சமயம் நடத்தி வருகிறார்கள் ? அப்படி நடத்துகின்ற அந்த குருப்களுக்கு அந்தக் கம்பெனிகள் வைப்பு நிதியாக ஏதாவது கட்டியுள்ளார்களா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்த வரையில், இன்றைய நிலையில் 3,891 சீட்டு கம்பெனிகள் இயங்குகின்றன. அந்த சீட்டு கம்பெனிகள் 42,163 சீட்டு குருப்பை நடத்தி வருகின்றன. இதற்கு செக்யூரிட்டி டெப்பாசிட்டாக, இந்த 3,891 சீட்டு நிறுவனங்களும் 100 கோடி ரூபாய் அளவுக்குச் செலுத்தியிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் 'வாழ்க வையகம்' என்கிற பெயரில் ஒரு சீட்டு கம்பெனியை நடத்தி, அதிலே கிட்டத்தட்ட 2½ கோடி ரூபாயை அரசு 'சீஸ்' பண்ணியிருக்கிறது. அங்கேயுள்ள ஏழையெளிய மக்கள், அரசு சீஸ் பண்ணிய பணத்திலேகூட அவர்கள் கட்டிய தொகையில் விகிதாசாரத்திற்கேற்ற அடிப்படையில் அந்தப் பணத்தை திருப்பி கொடுத்தால் பரவாயில்லையென்று கருதுகிறார்கள். அரசு சீஸ் பண்ணிய அந்தப் பணத்தை உரிய நபர்களுக்கு வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு என்னிடத்திலே இப்பொழுது இல்லை. மாண்புமிகு உறுப்பினர் என்னிடத்தில் கொடுத்தாலும் சரி அல்லது தனிக் கேள்வி கேட்டாலும் சரி, தகவல் அளிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். சிங்காரம்.

**திரு. ஆர். சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி சீட்டு கம்பெனிகளைத் தொடங்குவதற்கு முன்னதாகவே இவைகளைத் தடை செய்வதற்கு ஏதாவது சட்டம் கொண்டு வர முடியுமா ? ஒரு மாதத்திற்கு முன்னால் பார்க்கின்றபோது தெருக்கோடியாக இருந்தவன் மிக

பெரிய கோடீஸ்வரன் ஆகிறான். சாதாரண பிச்சாதிபதி, லட்சாதிபதி ஆகிறான். கடந்த மாதம் பார்க்கின்றபோது சாதாரணமாக இருந்த சாதாரண தொண்டன் கோடீஸ்வரன் ஆகிறான். இதற்கு எல்லாம் இன்கம் டாக்ஸ், கமர்சியல் டாக்ஸ் போன்ற துறைகள் இல்லையா? இதற்கு எல்லாம் சர்க்கார் இருக்கிறது. இதைக் கண்காணித்து அவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்? சாதாரண சட்டமன்ற உறுப்பினர் ஏதாவது ஒரு சின்ன குறை செய்துவிட்டால் வாரப் பத்திரிகைகள் எல்லாம் கடுமையான விமர்சனம் செய்து, கொள்ளையடித்துவிட்டார்கள். கோடீஸ்வரர்களாகிவிட்டார்கள் என்று எல்லாம் எழுதுகின்ற இந்தக் காலத்தில் இதை எல்லாம் வாரப் பத்திரிகைகள் எழுதி அரசுக்குச் சுட்டிக்காட்டலாம். அதே நேரத்தில் தமிழகத்தையே சீட்டிங் செய்த கும்பலை சூட்டிங் செய்து சிட்டிங்கில் அமர்ந்து இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியிலே (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற போலி சீட்டுக் கம்பெனிகள்—முறைகேடுகள்மீது—நடவடிக்கை எடுப்பது பற்றி முழு தகவல் இல்லை. இதுவரையில் 'சீட்டு விஜிலன்ஸ் செல்' மூலமாக 3¼ கோடி ரூபாய் மதிப்புள்ள பதிவுறாச் சீட்டுகளைக் கண்டுபிடித்து அவர்கள்மீது நீதிமன்றத்தில் இன்றைக்கு வழக்கு தொடரப்பட்டு தண்டனை பெற இருக்கிறது. 3 1/4 கோடி ரூபாய் பெறுமான அளவுக்கு முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பெற்றிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 3. திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

3—

**கீவளூர் நகரத்தில் பத்திரப் பதிவு அலுவலகம்.**

* 786—திரு. வே. தம்புசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காண்—வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் வட்டம், கீவளூர் நகரத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?

முற்பகல் 9-55

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீவளூர் நகரம் என்பது நாகையிலிருந்து 18 கிலோ மீட்டர் தூரத்திலும், திருவாரூரிலிருந்து 20 கிலோ மீட்டர் தூரத்திலும் அமைந்திருக்கக்கூடிய பகுதியாகும். அதைப்போல வடக்குப் புறத்தை எடுத்துக்கொண்டால் 18 கிலோ மீட்டர் தூரத்திற்கும், தென்புறத்தை எடுத்துக்கொண்டால் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கும் மையமாக அமைந்திருக்கக்கூடிய பகுதியாகும். அந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் பத்திரப் பதிவு செய்ய வேண்டுமென்றால் திருவாரூர் நோக்கி 30 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே இதைக் கருத்திற்கொண்டு அந்த நகரத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் ஒன்றைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு அலுவலகம் திறக்க வேண்டுமென்றால் ஆண்டுக்கு குறைந்தது 2,000 ஆவணங்கள் பதிவு செய்ய வேண்டும். கீவளூரைப் பொறுத்த வரையிலும் அருகாமையில் உள்ள ஊர்களையும் சேர்த்து நடப்பு ஆண்டிலும், சென்ற ஆண்டிலும் புள்ளிவிவரப்படி 2000 வரவில்லை. ஆகையால் இப்போது கீவளூரில் சார் பதிவு அலுவலகம் திறக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி கீவளூர் என்பது 30 கிலோ மீட்டர் அல்லது 20 கிலோமீட்டர் தூரத்தில் இல்லை. அந்த இடம் நாகப்பட்டினத்திலிருந்து 13 கிலோ மீட்டர் தூரத்திலும், திருவாரூரிலிருந்து

12 கிலோ மீட்டர் ஆரத்திலும்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வே. தம்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கே குறைந்தபட்ச பத்திரப் பதிவு வரவில்லை என்று சொல்லலாம். ஆனால் அது ஒரே வருடத்தில் ஆகக்கூடியதல்ல. தொடர்ந்து பல வருடங்களில் கூடும், குறையும். அந்த வகையிலே, அந்தப் பகுதி மையமாக அமைந்துள்ளதால், எதிர்காலத்திலாவது அரசு அது பற்றி பரிசீலித்து அதை அமைப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் அதுபற்றி ஆய்வு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 4, திரு. மு. நடேசன், திரு. க. அர்ச்சுனன், திருமதி க. பழனியம்மாள், திரு கா. கந்தசாமி, திரு. ம. சின்னசாமி—மாண்புமிகு கல்வி அமைச்சர்.

4—

சேலம் மாவட்டத்தில் பல்கலைக்கழகம்.

*1359—திரு. மு. நடேசன் :

திரு. க. அர்ச்சுனன் :

திருமதி க. பழனியம்மாள் :

திரு. கா. கந்தசாமி :

திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா :—

சேலம் மாவட்டத்தில் பல்கலைக்கழகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.



**திரு. மு. நடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் மருத்துவக் கல்லூரி, கால்நடைக் கல்லூரி, சட்டக் கல்லூரி மற்றும் பல கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. சேலம், தர்மபுரி மாவட்டங்களிலுள்ள கல்லூரிகள் இங்கே, சென்னையிலே இருக்கின்ற பல்கலைக் கழகத்தோடுதான் தொடர்பு கொள்ள வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே சேலத்திலே ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவினால் சேலம் மாவட்டத்திலிருந்து சென்னைக்கு வருகை தரவேண்டிய நிலை ஏற்படாது. அதனால் பொருள் சிக்கனமும், நிர்வாகச் சிக்கனமும் ஏற்படும். எனவே வருகின்ற காலத்திலாவது இது பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கல்லூரிகளை இணைத்துக் கொண்டிருக்கிற பல்கலைக் கழகங்கள் 5 இருக்கின்றன. அதிலே, சேலம் பகுதியிலே இருக்கின்ற கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறதா என்பதற்கான விவரம் இங்கே இல்லை. அப்படி ஒரு வேளை இங்கேதான் இணைக்கப் பட்டிருக்கிறது என்றால் அதை அருகிலேயே இருக்கிற கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தோடு இணைப்பதற்கான முயற்சிகள் அவசியமானால் மேற்கொள்ளப்படும். ஆகவே, அப்போது சென்னைக்கு வர வேண்டிய அவசியம் இருக்காது. அருகாமையில் உள்ள கோவையிலேயே தொடர்பு கொள்கிற வாய்ப்பு அந்த மாவட்டத்திற்கு ஏற்படும். இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் புதிய பல்கலைக் கழகங்கள் தேவையான, மிக அத்தியாவசியமான அடிப்படையில்தான் தோற்றுவிக்கப்படுமே தவிர நினைக்கிற இடத்திலே எல்லாம் பல்கலைக் கழகங்கள் தொடங்குவதற்கு இயலாது. காரணம், ஒரு பல்கலைக் கழகம் தொடங்க வேண்டுமென்றால் குறைந்தது 3 கோடியிலிருந்து 5 கோடி ரூபாய் தொடராச் செலவினமாக நிதி வேண்டும். ஆகவே அவசியமில்லாத ஒரு சூழ்நிலையில் இப்போது அந்தப் பகுதியில் ஒரு பல்கலைக் கழகம் அமைப்பதற்கான கருத்துரு அரசிடத்திலே இல்லை.

[1992 ஜனவரி 30

முற்பகல் 10-00

**திரு. க. அர்ச்சுனன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில், கோவை பல்கலைக் கழகத்தோடு சேலம் பகுதியில் இருக்கிற கல்லூரிகளையும் இணைப்பதாகத் தெரிவித்தார்கள். எங்களுக்கு சென்னையே சௌகர்யமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது ஒரு பல்கலைக் கழகம் உருவாவதற்காகும் செலவினத்தைச் சொன்னார்கள். ஏற்கெனவே அங்கே இன்டகரேட்டட் ஸ்டீல் பிளாண்ட் உருவாவதற்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்து, அதற்குக் காவிரி ஆற்றுத் தண்ணீரையும் கொண்டு வந்து இருக்கிறார்கள். இப்போது அது ஸ்டீல் ரோலிங் மில்லாக இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தால், அதிகப்படியான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வெற்றிடமாக இருக்கிறது. அங்கே குடிநீரும் இருக்கிறது. இடமும் அதிகமாக இருக்கிறது. அதைப்போல, பொறியியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்ட இடமும் வீணாக இருக்கிறது. எனவே, அந்த வளாகத்தில் குறைந்த செலவில் பல்கலைக் கழகத்தைக் கொண்டு வந்து, சேலம், தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிற கல்லூரிகளை இணைத்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரால் ஒரு பல்கலைக் கழகத்தைக் கொண்டுவர எதிர்காலத்திலாவது அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற தகவல்கள்படி, நில ஆர்ஜிதங்கள் பல்கலைக் கழகத்திற்காகச் செய்யப்பட்டதா என்பது பற்றி தெரியவில்லை. சேலம் உருக்காலை தொடர்பாக ஆர்ஜிதம் செய்யப்பட்டிருந்தால், அது மத்திய அரசு தொடர்பான நில ஆர்ஜிதமாக இருக்கும். பொறியியல் கல்லூரி துவக்கப்பட வேண்டுமென்பதற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருந்தால் அது மாநில அரசு தொடர்பானதாக இருக்கும். இருந்தாலும், இடம் மாத்திரம் அதற்குப் போதாது. குறைந்தபட்சம் 2-3 கோடி ரூபாய்க்கு நாம் முதலீடு வைத்திருப்பதைக் காட்டினால்தான், பல்கலைக் கழக மானியக் குழு, பல்கலைக் கழகத்தை அங்கீகரிக்கும். மாண்புமிகு



1992 ஜனவரி 30]

உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்து, பரிசிலனைக்குரிய ஒன்றுதான். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அதையொட்டியே இப்போது புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் தேவையான பல்கலைக் கழகங்கள் சரியான நேரத்தில் தொடங்கப்படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி க. பழனியம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம், தர்மபுரி, வட ஆற்காடு-அம்பேத்கார், தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள நூற்றுக்கணக்கான கல்லூரிகள் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே சேலம், தர்மபுரி மாவட்டங்களில் மாணவர்களுக்கு ஆராய்ச்சிப் படிப்புகளுக்கு வசதி இல்லை என்ற காரணத்தால், சேலம் பொறியியல் கல்லூரியில் யுனிவர்சிட்டி எக்ஸ்டென்ஷன் சென்டர் என்ற அமைப்பு நடந்து கொண்டிருக்கிறது. அங்கே கணிதம், வணிகவியல், புவியியல் ஆகிய பாடங்களில் ஆராய்ச்சிப் படிப்பு இப்போது இருக்கிறது. இப்போது அந்த யுனிவர்சிட்டி எக்ஸ்டென்ஷன் சென்டர் கட்டியதற்காகவும் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு மாணவனோ, ஆசிரியரோ எந்தத் தகவலைப் பெற வேண்டுமானாலும், பல மணி நேரம் பிரயாணம் செய்து இங்கே சென்னைப் பல்கலைக் கழகத்திற்குத்தான் வரவேண்டியுள்ளது. அதுவும் இல்லாமல், நடக்கின்ற கூட்டங்கள், தேர்வுகளுக்காகவும் ஆசிரியர்கள் வரும்போதும் பயணப்படி மிகுதியாக செலவாகிறது என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பல மாவட்டங்களுக்கு ஒரேயொரு பல்கலைக் கழகம் என்று இருப்பதால் சேலத்தில் இப்போது இருக்கிற யுனிவர்சிட்டி எக்ஸ்டென்ஷன் சென்டரை பல்கலைக் கழகமாக மாற்றினால், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அது மிகுந்த பயன் அளிப்பதாகவும், அரசின் சிக்கன நடவடிக்கையாகவும் அமையும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே இந்த நீண்ட நாள் பிரச்சினை தீர்க்கப்பட்டு, சேலம் மாவட்டத்தில் ஒரு பல்கலைக் கழகம், அடுத்த கல்வி ஆண்டிலாவது தொடங்க ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1992 ஜனவரி 30

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே குறிப்பிட்ட விடையிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். அந்தப் பகுதியில் ஒரு பல்கலைக் கழகம் தொடங்குவதற்கான அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றன என்பதை அரசு ஆராய்ந்து, பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் சென்னைப் பல்கலைக் கழகத்தினுடைய விரிவாக்க மையம் ஒன்று அங்கே இருக்கிறது. வேலூரிலும் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல, ஒரு பல்கலைக் கழகம் தொடங்குவது என்பது, அரசுக்குச் சிக்கனமானதல்ல. மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும்தான சிக்கனமே தவிர, அரசுக்குப் பெரும் நிதி சுமைதான் சேரும். ஆனால இன்றைக்குத் தமிழகத்துப் பல்கலைக் கழகங்களைப் பொறுத்த வரையில், சுமார் 25 கோடி ரூபாயை நாம் செலவழித்துக் கொண்டு இருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் அந்தப் பகுதியில் ஒரு பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்படவேண்டியதன் அவசியத்தை அரசு கருத்தில் எடுத்துக் கொண்டிருக்கிறது, ஆராய்ந்து கொண்டிருக்கிறது. நான் முன்னாலே சொன்னதைப் போல, நிதி நிலைமை நம்மை அச்சுறுத்திக் கொண்டிருக்கிற காரணத்தால், அவ்வளவு அவசரப்பட்டு இந்த முயற்சியில் அரசு ஈடுபட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05]

**திரு. கே. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு முன்னோடியாக 1983 ஆம் ஆண்டு போஸ்ட்-கிராஜுவேட் சென்டர் ஆரம்பிக்கப்பட்டு இது வரை 100 பேர்கள் டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார்கள். சேலம் அரசினர் என்ஜினியரிங் கல்லூரியில் ஏராளமான நிலம் இருக்கிறது. அதிகப்படியான நிலம் இருப்பதால் மத்திய அரசின் தொழிற்சாலைக்கு அந்த நிலத்தைக் கொடுத்துவிட்டார்கள். பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப் போதுமான நிலம் இருக்கிறது. ஆகவே வேறு யாருக்கும் அந்த நிலத்தைக் கொடுப்பதற்குப் பதிலாக அந்த இடத்திலே பல்கலைக் கழகத்தை அமைத்தால் சேலம் மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1992 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு ஒரு பல்கலைக் கழகத்தைத் தொடங்க முடியாது. அதிலே கட்டிடங்கள் கட்டியாக வேண்டும். அப்படிக் கட்டிடங்கள் எழுப்புவதற்குக் குறைந்தபட்சம் ரூ. 2 கோடி வேணடும். அதற்குப் பிறகு ஆணடு ஒன்றுக்கு ரூ. 1.5 கோடி அளவிற்கு தொடர்செலவினங்கள் அதற்கு ஏற்படும். இவைகளையெல்லாம் மனதிலே வைத்து அரசு பரிசீலித்துக் கொணடிருக்கிறது. மாணபுமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள், கல்வித் துறையில் மிகப் பெரிய அளவிலே விரிவாக்கங்களையும், மிக அவசியமான அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும் என்ற முயற்சியை எடுததுக்கொண்டிருக்கிற சூழ்நிலையில் அநதப் பகுதியில் பல்கலைக் கழகம் அமைக்கிற இந்தக் கோரிக்கையை அவர்கள் பரிசீலித்து, தேவையான நேரத்திலே நிறைவேற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ம. சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பல்கலைக் கழகத்திற்கு இத்தனைக் கல்லூரிகள் இருக்க வேணடும் என்று அரசு 'நார்ம்ஸ்' ஏதாவது வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இராம வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விதிமுறைகள் எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை. ஒரு காலத்திலே தமிழகத்திலே இருந்த எல்லாக் கல்லூரிகளும் சென்னைப் பல்கலைக் கழகத்திலே இணைக்கப்பட்டிருந்தன. அதற்குப் பிறகு, பல ஆண்டுக் காலம் வரை ஒரே பல்கலைக்கழகம்—மதுரை-காமராஜ் பல்கலைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேதான் ஏறத்தாழ 9 பல்கலைக் கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. என்னிடத்திலே இருக்கிற குறிப்புச் சரியாக இருக்குமானால், இன்றைக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தோடு 90-க்கும் மேற்பட்ட கல்லூரிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. பாரதிதாசன் பல்கலைக் கழகத்தோடு சுமார் 40 கல்லூரிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. பாரதியார் பல்கலைக் கழகத்தோடு 40 கல்லூரிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. மதுரை-காமராஜ் பல்கலைக் கழகத்தோடு 60 கல்லூரிகள்,

[1992 ஜனவரி 30

இணைக்கப்பட்டிருக்கின்றன. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தோடு 47 கல்லூரிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. எத்தனை கல்லூரிகள் என்பது, நம்முடைய வசதிக்கேற்றவாறு இணைக்கப்படுகிறதே தவிர அதற்கு எந்த விதிகளும் நிர்ணயிக்கப்படவில்லை. ஆகவேதான் சேலத்திலே இருப்பவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் தொலைவாக இருக்கிறது. தொல்லையாக இருக்கிறது என்று கருதுவார்களேயானால் கோவையிலே உள்ள பாரதியார் பல்கலைக் கழகத்தோடு இணைப்பது பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 5. திரு. என். ஜி. வேணுகோபால், மாண்புமிகு தொழிலாளர் நலம் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சர்.

5—

**வடஆற்காடு-அம்பேத்கார் மாவட்ட தொழில் நீதிமன்றத்திற்கு நீதிபதி நியமித்தல்.**

***446 திரு. என். ஜி. வேணுகோபால்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்ட தொழில் நீதிமன்றத்திற்கு நீதிபதி நியமிக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு—அம்பேத்கார் மாவட்ட தொழில் நீதிமன்றத்திற்கு நீதிபதி நியமிக்க சென்னை உயர் நீதிமன்ற பதிவாளரை கலந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



1992 ஜனவரி 30]

**திரு. என். ஜி. வேணுகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மற்றும் 'சிப்காட்', 'சிட்கோ', 'பி.எச்.இ.எல்.' போன்ற எண்ணற்ற தொழிற்பேட்டைகள் வடார்க்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் இருக்கின்றன. எனவே எண்ணற்ற வழக்குகள் தேக்க நிலையில் உள்ளன. நமது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதை உடனடியாகப் பரிசீலித்து, எண்ணற்ற வழக்குகள் தேக்க நிலையில் இருப்பதால் தொழிலாளர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள் என்பதைக் கருத்திற் கொண்டு உடனடியாக இதில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடஆற்காடு-அம்பேத்கர், திருவண்ணாமலை-சம்புவராயர் மற்றும் தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்காக வேலூரில் தொழிலாளர்கள் நீதிமன்றம் ஒன்றை அமைக்கின்ற முடிவை அரசு எடுத்திருக்கிறது. இப்போது அதற்கான கட்டிடங்களைத் தேடுவதிலேயும், நீதிபதிகளை நியமிப்பதிலேயும்தான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூரில் ஏற்கெனவே இருந்த 2 சப் கோர்ட்களில் ஒன்று ஆரணிக்கும் மற்றொன்று இராணிப்பேட்டைக்கும் மாற்றப்பட்டுவிட்ட காரணத்தினால், இப்போது அந்த கோர்ட் இடம்கூட காலியாக இருக்கிறது. அந்த பில்டிங் ரெடியாக இருக்கிறது. ஏற்கெனவே 3 மாதங்களுக்கு முன்னாலே இந்த மாமன்றத்திலே வேலூரிலே அந்த இடத்திலே உடனடியாக தொழிலாளர் நலத் துறை நீதிமன்றம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளித்து இருக்கிறார்கள். பதிவாளர்களும் மற்றவர்களும் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது கட்டடம் ரெடியாக இருக்கிறது. யாராவது ஒரு நீதிபதியை, சி.ஜே.எம். ஆக இருக்கக்கூடியவர்களில் ஒருவரை புரமோஷன் செய்து உடனடியாக நியமித்து அந்த கோர்ட் அங்கே இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 ஜனவரி 30

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடம் கிடைத்துவிட்டது என்ற விவரம் இங்கே எனக்குத் தரப்படவில்லை. அந்த இடம் கிடைத்து இருந்தாலும் நீதிபதியை நியமிப்பது ஹைகோர்ட்டிலே இருக்கின்ற பதிவாளர் அவர்களைப் பொறுத்து இருக்கிறது. அவர்களும் சீக்கிரம் நியமிப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 6. டாக்டர் பீட்ரிக் டி. சோசா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

6—

**ஒலியினால் ஏற்படும் சுகாதாரக்கேட்டை கண்காணிக்க நடவடிக்கை.**

* 4364—டாக்டர் பீட்ரிக் டிசோசா:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நகரப் பகுதியில் ஒலியினால் ஏற்படும் சுகாதாரக்கேடு கண்காணிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சென்னைப் பெருநகர் பகுதியில் ஒலியினால் ஏற்படும் சுகாதாரக்கேடு சம்பந்தமாக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அவ்வப்போது குறிப்பிட்ட இடங்களில் தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது.

*Thirumathi* BEATRIX D'SOUZA: Honourable Speaker Sir, Japan and Singapore are the two Countries which monitor and control noise pollution. While 'O' on the measurement scale indicates the least perceptible sound, '130' on the decibal scale reaches pain level and can result not only in physical damage but in mental stress and trauma Noise pollution not only affects the echo system



1992 ஜனவரி 30]

but also the human system. My question is how noise-free or silent road—which are supposed to be maintained near hospitals and Schools—are maintained and how effective are the controls, if any, on the loud speaker menace?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஜப்பானைப் போலவோ, சிங்கப்பூரைப் போலவோ நாம் செய்ய வேண்டுமென்று சொன்னால் அநேகமாக எல்லாத் தரப்பு மக்களின் ஒத்துழைப்பும் அந்த அளவிற்கு இருந்தால், அதைச் செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்படலாம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை, குறிப்பாக நம்முடைய சென்னை மாநகரம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஒன்று தொழிற்சாலைப் பகுதி (Industrial area) அடுத்தது வர்த்தகப் பகுதி (Commercial area) அடுத்தது குடியிருப்புப் பகுதி (Residential area) அடுத்தது அமைதிப் பகுதி—இப்படி நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு இடத்திலேயும் எந்த அளவிற்கு அந்த சவுண்ட் இருக்கலாம் என்பதை அளவு எடுத்து அவர்கள் குறிப்பிட்டு, நமக்குக் கொடுத்து இருக்கிறார்கள்; வரன்முறைப்படுத்தி இருக்கிறார்கள். அந்த வரன்முறைக்குள்ளே அதை நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அது மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஒன்று தொழிற்சாலை சம்பந்தப்பட்டது; அதை மாசுக்கட்டுப் பாட்டு வாரியம் பார்க்கிறது. அடுத்து சாலைப் போக்குவரத்து, வாகனங்களால் ஏற்படும் சத்தம் இவைகளை எல்லாம் காவல் துறை கவனிக்கிறது. இப்படி அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இந்த குறித்த அளவிற்குள் கொண்டுவந்து 'நாய்ஸ் பொலூஷன்' இல்லாமல் தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட துறை துரிதமான நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 7 திரு. கி. தர்மலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

காட்டு வளத்தை மேம்படுத்த நடவடிக்கை.

* 4173—திரு. கி. தர்மலிங்கம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காட்டு வளத்தை மேம்படுத்த அப் பகுதியிலேயே வாழும் இளைஞர்களுக்கு வன இலாகாவில் வேலை கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. கி. தர்மலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுவளத்தை மேம்படுத்துவதற்கு, குறிப்பாக காட்டை அழிக்கும் நகர்ப்புற மரக் கடத்தல்காரர்கள் அந்தக் காட்டுப் பகுதியிலே இருக்கும் வேலை இல்லாத வாலிபர்களைப் பயன்படுத்தி காட்டை அழித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த மலைப் பகுதியில் இருக்கும், குறிப்பாக மலைவாழ் மக்களுக்கும் அந்த வன இலாகாவிலே பணி வழங்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறையில் பணிபுரியும் சமூக வனப் பணியாளர்கள் மற்றும் தோட்டக் காவலர்கள் ஆகியோரைப் பொறுத்தவரையிலும் அவர்கள் அந்தந்தப் பகுதியைச் சார்ந்தவர்களேயாவர். தற்போது போதிய அளவில் அவர்கள் நியமிக்கப்பட்டு இருப்பதால், மேலும் ஆட்களை எடுக்க கருத்துரு எதுவும் இல்லை.

**திரு. கி. தர்மலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் வன இலாகாவில் ஆள் எடுக்கும்போது, நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அந்தந்தப் பகுதியில்







இருக்கும் வேலை இல்லா வாலிபர்களுக்கு வேலை வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆம் நூற்றாண்டில் இணையற்ற முதலமைச்சராக இருக்கின்ற நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்றவர்களுக்குத்தான் முன்னுரிமை வழங்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன இலாகாவிலே பணியாற்றிய சுமார் 2 ஆயிரம் பேர் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே பணி இடங்களுக்கு அமர்த்தப்பட்டார்கள். ஆனால் அதற்குப் பின்னால் அவர்கள் அந்தப் பணியிடங்களிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார்கள். அவர்களை மீண்டும் அந்த இலாகாவில் நியமித்து, அவர்கள் வேலை செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.15

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செல்வி எல். சுலோசனா.

**செல்வி எல். சுலோசனா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்களுக்குச் சொந்தமான, பயன்படுத்தப்படாமல் இருக்கும் பல ஏக்கரா நிலங்களில் மரங்களை வளர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 8. திருமதி என். கி. கனகவல்லி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

[1992 ஜனவரி 30

8—

**சிதம்பரனார் மாவட்டத்தில் புதிய போக்குவரத்துக் கழகம்.**

* 4933 **திருமதி என். சி. கனகவல்லி :**
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் போக்குவரத்துக் கழகம் இருப்பதுபோல் சிதம்பரனார் மாவட்டத்திலும் புதிய போக்குவரத்துக் கழகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திருமதி என். சி. கனகவல்லி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுருக்கமாக இல்லையென்று சொல்லிவிட்டார்கள். இல்லையென்ற சொல்லுக்கே இடம் இல்லாத நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் வருகிற நிதியாண்டிலாவது இந்தத் திட்டம் கனிவோடு பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதுபாண்டியர் போக்குவரத்து கழகத்தில் 725 பேருந்துகளைத்தான் இப்போது இயக்கிக் கொண்டிருக்கிறோம். தில்லைநாயகம் உயர்மட்டக் குழுவானது 750 பேருந்துகளிலிருந்து 1200 பேருந்துகள் வரை இருந்தால் தான் போக்குவரத்துக் கழகத்தைச் சிறப்பாக இயக்க முடியுமென்று கருத்துரை வழங்கியுள்ளது. நம்முடைய தமிழகத்தில் ஒப்பற்றத் தலைவியாக இருக்கிற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற 60 நாட்களுக்குள்ளேயே தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம், பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் ஆகியவற்றைப் பிரித்து, நம்முடைய



1992 ஜனவரி 30]

மறைந்த தலைவர் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரால் போக்குவரத்துக் கழகம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசைப் பொறுத்தவரையில் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது. கூடுதலாகப் பேருந்துகள் விடுகிறபோது இந்தப் பேருந்து கழகத்தைப் பிரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சு. சே. இராஜமன்னார்.

**திரு. சு. சே. இராஜமன்னார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்கட்ட சுதந்திரப் போராட்ட வீரர் கட்டபொம்மனும், இரண்டாவது கட்ட சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சி.யும் பிறந்த எங்கள் மாவட்டத்திலிருந்து கட்டபொம்மனை நெல்லைக்குத் தாரை வார்த்து விட்டோம். எஞ்சியுள்ள வ.உ.சி. பெயரால், வ.உ.சி. பிறந்த இடமான ஒட்டப்பிடாரத்தைக் தலைமையிடமாகக் கொண்டு வ.உ.சி. போக்குவரத்துக் கழகம் என்று ஒரு போக்குவரத்துக் கழகம் ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான சாத்தியகூறுகள் இப்போது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** . வினா எண் 9. திரு. கே பி. ராஜு மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

9—

**கோவை மாவட்டத்தில் நூற்பாலை.**

* 3923—**திரு. கே. பி. ராஜு :**
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கோவை மாவட்டத்தில் அரசு சார்பாக நூற்பாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. கே. பி. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் என்பது பல நூற்றுக்கணக்கான பஞ்சு ஆலைகளை கொண்ட மாவட்டம். அந்த மாவட்டத்தில் கிட்டத்தட்ட இலட்சம் பேருக்கு மேல் ஆலைத் தொழிலாளர்களாகப் பணியாற்றுகிறார்கள். அத்தனையும் தனியார் ஆலைகளாக இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் அங்கே அரசு சார்பாக ஒரு நூற்பாலையை ஏற்படுத்தினால், அதன் காரணமாக பல ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். இதனை அரசு கனிவோடு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள் என்றும், வேலையில்லாத் திண்டாட்டம் இல்லையென்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். அருகில் பெரியார் மாவட்டத்தில் 25,000 கதிர்களைக் கொண்ட நூற்பாலை ஒன்று இருக்கிறது. கூட்டுறவு நூற்பாலைகளை உருவாக்கியதன் நோக்கமே ஏழையெளிய நெசவாளர்களுக்குக் குறைந்த விலையில் நூல் விநியோகிப்பதற்காகத் தான். குறிப்பாக தமிழகத்தில் நூல் உற்பத்தி இப்போது உபரியாக இருக்கிறது. 16,000 பேல்கள் முதல் 18,000 பேல்கள் தமிழகத்தில் உற்பத்தியாகிறது. இப்போதே உபரியாகத்தான் நூல் வைத்துக் கொண்டிருக்கிறோம். பஞ்சு விலை எறிவிட்டிருக்கிறது. இந்த நிலையில் புதிய நூற்பாலை உருவாக்க சாத்தியகூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. பி. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மில்லை கட்டியவர்கள் ஓரே ஆண்டில் பல மில்களைக் கட்டிவிடுகிறார்கள். அவ்வளவு வருமானமுள்ள தொழில் ஆலைத் தொழில். ஆகவே, அரசாங்கத்திற்கு வருமானமும் கிடைக்கும், மக்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். அது மட்டுமல்லாமல் மில்லில் வேலை செய்வதற்கு பட்டப் படிப்போ, கல்லூரி படிப்போ, மற்ற படிப்போ எதுவும் தேவையில்லை. பாமர மக்கள் கூட நெசவாலையில் வேலை செய்ய முடியும்.



ஆகவே, அதிக வருமானமுள்ள அந்த ஆலைத் தொழிலில் ஒரு நூற்பாலையை அடுத்த ஆண்டிலாவது கோவை மாவட்டத்தில் நிறுவ அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.20

**மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலை உருவாக்குவதினுடைய நோக்கம் வருவாய்க்காக அல்ல. நெசவாளர்களுடைய நலனைக் கருதித் தான் நூற்பாலைகள் உருவாக்கப்படுகின்றன. ஆதனால், தனியார் நூற்பாலைகளைப் பொறுத்தளவு, அங்கேயிருக்கிற தொழிலாள நண்பர்களை நசுக்கி, அவர்களிடத்திலே வேலை பெற்று, லாபத்தை ஈட்டுகிறார்கள். ஆனால் நம்முடைய நூற்பாலைகளைப் பொறுத்தளவு அதிகமான நூற்பாலைகள் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 10, திரு. எஸ். ஆண்டித்தேவர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

10—

### நிலையூர் கால்வாயை மேம்படுத்துதல்.

* 305 திரு. எஸ். ஆண்டித் தேவர்:

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டத்தில் வைகை ஆற்றிலிருந்து பிரியும் நிலையூர் கால்வாயை மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

[1992 ஜனவரி 30

(ஆ) தலைமைப் பொறியாளர், பிளானிங் அன்ட் டெவலப்மெண்ட் மூலம் மேற்படி திட்ட மதிப்பீடு ரூ. 19.76 கோடிக்கு வரப்பெற்று, பொருளாதார சாத்தியக்கூறுகள் மற்றும் நிதி வசதியினைப் பொறுத்து இத்திட்டம் எடுத்துக்கொள்வது பற்றி இந்த அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித் தேவர் .** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, 19 கோடி அளவிற்குத் திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். 10, 15 ஆண்டுகளாக, நிலையூர் கால்வாய் மேம்படுத்தப்படாத காரணத்தால், ஏறத்தாழ 15 குளங்கள், மாடக்குளம், தென்கரைக் கண்மாய், கூத்தியாள்குண்டு, அதேபோன்று சர்மிநத்தம் வரை 15 ஆண்டுக்காலமாக தண்ணீர் ஏறாமல் இருக்கிறது. இந்தத் திட்டம் விரையில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்று சொல்கிறார்கள். அங்குள்ள விவசாயிகளின் நலனைக் கருதி இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தத் திட்டத்தினுடைய முக்கிய நோக்கம் கருதித்தான், இதற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இது சம்பந்தமாக நில நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர், ஆணையர், வேளாண்மைத் துறை, மற்றும் இயக்குநர்; பள்ளியியல் துறை, ஆகிய இவர்களிடமிருந்து பல்வேறு கருத்துக்களைப் பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தாலே—இவை எல்லாம் நம்முடைய பொதுப்பணித்துறையின் மூலம் கோரப்பட்டு இருக்கிறது—அந்தத் துறைகள் மூலம் இந்தக் கருத்துக்கள் வந்தவுடன்,—இந்தத் திட்டம் முக்கியமான திட்டம் என்பதற்காகத்தான்—இது எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, இந்த



1992 ஜனவரி 30]

ஆண்டே இது எடுத்துக் கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னபடி, எல்லாத் துறைகளிடமிருந்தும் அறிக்கைகள் வந்ததற்குப் பின்னாலே, இருக்கின்ற நிதி ஆதாரத்தைப் பொறுத்து, இந்தத் திட்டம் எடுத்துக் கொள்வதுபற்றி பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ் :** பேரவைத் தலைவர் அவர்களே, கால்வாயை மேம்படுத்தும் திட்டத்தின் மூலமாக ஏற்கனவே ஒரு பகுதிக்கு வந்துகொண்டிருக்கிற தண்ணீரின் அளவு, கீழ்வரும் பகுதிகளுக்கு நிறுத்தப்படுகிறது. இவ்வாறு, கால்வாயை மேம்படுத்தும் திட்டத்தின் மூலமாக, கீழ்ப் பகுதிகளுக்கு கிடைக்க வேண்டிய தண்ணீரைப் பெறுவதற்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து, இந்தத் திட்டத்தை மேம்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்வாய்களை சீரமைக்கின்ற நேரத்திலே, ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பாசனப் பகுதிகளுக்கு இருக்கின்ற தண்ணீரைக் குறைப்பது இந்த அரசினுடைய நோக்கம் அல்ல. யார் யாருக்கு, எந்த அளவிற்குப் பாசனப் பகுதிக்காக நீர் ஒதுக்கப்படுகிறதோ அந்தத் தண்ணீர் கட்டாயம் விடப்படும். மற்ற கால்வாய்களை மேம்படுத்துகின்ற நேரத்திலே—தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்காகத்தான் சில கால்வாய்கள் மேம்படுத்தப்படுகின்றன—ஏற்கனவே இருக்கின்ற அளவினை குறைக்கின்ற நோக்கம், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட அளவினைக் குறைக்கின்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சோ. பாலகிருஷ்ணன்.

[1992 ஜனவரி 30

**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வைகை நதி என்பது, கை வைத்தால் தண்ணீர் வரும் என்று சொல்வார்கள். ‘வை கை’ என்று சொல்வார்கள். அந்த வைகையில், அணையைக் கட்டியதன் மூலம் எங்களுக்குத் தண்ணீர் வரத்து நின்றுவிட்டது. இப்போது; மேலும் மேலும் கால்வாய்களையே நீங்கள் அபிவிருத்தி செய்து கொண்டு போனால், சுத்தமாக அது வறண்டே விடும். ஆகவே, தயவுசெயது, வைகையில், வருகின்ற தண்ணீர் முறைப்படுத்தப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மேற்குப் பருவ மழை அதிகமாக இருக்கின்ற நேரத்தில் நம்முடைய வைகை அணையில் தண்ணீர் பெருக்கு எடுக்கின்றது. வைகை தேக்கத்தில் தண்ணீர் அதிகமாக வருகின்றது. இந்த ஆண்டு தென் மாவட்டங்களில் மழை பொய்த்து விட்ட காரணத்தினாலே இந்த ஆண்டு நாம் ஏற்கெனவே எதிர்பார்த்தபடி வைகையிலே தண்ணீர் இல்லை. ஆகவே தண்ணீர் விடுகின்ற நேரத்திலே அதிகமாக தண்ணீர் இருக்கின்ற காலங்களிலே பாசனப் பகுதிக்கு அதிகமான தண்ணீர் விடுகின்றோம். குறைவாக இருக்கின்ற நேரத்திலே அதை முறைப்படுத்தி எந்த அளவிற்கு சிக்கனமாக விடமுடியுமோ, அது போன்று இந்த ஆண்டும் விடப்பட்டு ஓரளவிற்குத் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கின்றன. ஆகவே தண்ணீரினுடைய வரத்தைப் பொறுத்துத்தான் இப்போது தண்ணீர் பகிர்மானம் நடந்துகொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கே. தவசி.

**திரு. கே. தவசி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வைகை அணை மண்ணில் அரிப்பு ஏற்பட்டு, மேவு நிலைகள் இருக்கின்றன. அணையைச் சீர்படுத்தி, அணையின் மண் அரிப்பைத் தடுப்பதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இருந்த அளவுகளைக் காட்டிலும் மண் மூடி, கொள்ளவு குறைந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்து நம்முடைய ஒப்பற்றத் தலைவி, புரட்சித் தலைவி அரசு காலத்திலே அதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஒவ்வொரு அணையையும் மேம்படுத்துவதற்காக இந்த ஆண்டு நிதி ஒதுக்கியிருக்கின்றார்கள். ஆகவே அணைகள் தூர்ந்து விடாமல் பாதுகாப்பான நடவடிக்கைகள் என்ற வகையில் அணைகள் மேம்பாட்டுத் திட்டம் என்ற அடிப்படையிலே எடுப்பதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 11, திரு. ஆர். ஈஸ்வரன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்

11—

**வங்கிக் கடன்பெற கிணற்றிற்கு கிணறு நிர்ணயிக்கப்பட்ட இடைவெளியைக் குறைத்தல்.**

* 1025—**திரு. ஆர். ஈஸ்வரன் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகளுக்கு புதிதாக கிணறு வெட்டுவதற்கு அரசுடைமை வங்கிகளிலிருந்து கடன்பெற கிணற்றிற்கு கிணறு இடைவெளி 250 அடி தூரம் என்று நிர்ணயம் செய்ததை அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு புதிதாக கிணறு வெட்டுவதற்கு அரசுடைமை வங்கிகளிலிருந்து கடன் பெற வசதியாக தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி [NABARD] தற்போது கிணற்றிற்கிடையே உள்ள இடைவெளி 200 மீட்டரிலிருந்து 150 மீட்டர் என குறைக்கப் பட்டுள்ளது. இடைவெளி தூரத்தை, நீர்பாசன பகுதி மற்றும் பெரிய நீர்த்தேக்க கட்டுப்பாட்டு பகுதிகளில், மேலும் குறைப்

[1992 ஜனவரி 30

பதற்கு பொதுப்பணித்துறை நிலநீர் பிரிவு அதாவது Water Department அவ்வங்கியுடன் கலந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கிணற்றிலிருந்து இன்னொரு கிணற்றுக்கு இடைவெளி 200 அடி தூரம் இருந்தது. ஆகையினால் விவசாயிகள் புதியதாக கிணறு வெட்டுவதற்கோ அல்லது பழைய கிணற்றினை ஆழப்படுத்துவதற்கோ அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கு இயலாத நிலைமை இருந்தது. அந்த 200 அடி தூரத்தை சுமார் 250 அடியோ அல்லது மொத்தமாக அதை நீக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி, மாண்புமிகு டாக்டர் முதல்வர் அவர்கள் தமிழகத்தில் இருக்கக் கூடிய அனைத்து விவசாயிகளுக்காக அதை நீக்கம் செய்தால் அந்த விவசாயிகள் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெறுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்குமென்ற வகையில் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியதைப்போல் இந்த 'நபார்டு' நிறுவனத்தின் மூலமாகத்தான் தூரங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஏற்கெனவே 200 மீட்டராக இருந்த தூரத்தை நபார்டு நிறுவனத்தினுடைய ஆலோசனையின் பேரில் இன்றைக்கு 150 மீட்டராகக் குறைத்திருக்கிறார்கள். சில இடங்களில் அடுத்தடுத்து கிணறுகளைத் தோண்டுகின்ற நேரத்திலே ஏற்கெனவே இருக்கின்ற கிணறுகளின் பாசன வசதி குறைந்து போகின்ற காரணத்தினாலே அதையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இவைகளை எல்லாம் முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு, அந்தப் பகுதியிலே அடித்தளத்திலே இருக்கின்ற 'கிரௌண்ட் வாட்டர்'—நிலத்தடி நீரைப் பொறுத்தது; அந்த தூரங்கள் நிர்ணயிக்கப்படுவதற்காக, இப்போது நம்முடைய நிலத்தடி நீர்த் துறையினர் இன்றைக்கு களப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த நபார்டு வங்கியுடன் சேர்ந்து அவர்கள் இருவரும் ஒன்றாக இருந்து சில முடிவுகளை எடுத்து இருக்கிறார்கள். அப்படி வருகின்ற நேரத்திலே அந்த தூரத்தை, இடைவெளியை குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1992 ஜனவரி 30]

**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே நேரத்தில் விவசாயிகள், தங்களுடைய சொந்த பணத்தை வைத்து 50 அடி, 100 அடி தூரத்தில்கூட கிணறுகளை வெட்டுகிறார்கள். அதனால் எந்தவிதமான பாதிப்பும் இல்லை. ஆகவே இதை மாண்புமிகு முதல்வர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் தீவிரமாக பரிசீலனை செய்தால், தமிழகத்தில் இருக்கக் கூடிய விவசாயிகள் நல்ல லாபம் பெறுவதற்கும், விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் நல்ல ஒரு திட்டமாக அமையும் என்ற வகையில் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தனியார்கள் கிணறு வெட்டுவதைப் பற்றிச் சொன்னார்கள். தனியார் கிணறு வெட்டுகின்ற நேரத்திலே அவர்கள் தன்னுடைய சொந்த பணத்தைப் போட்டு வெட்டுகின்ற நேரத்திலே, அந்தக் கிணற்றிலே தண்ணீர் வரவில்லையென்றால் கூட அந்தப் பணம் அவர்களுடைய பணம் என்ற காரணத்தினாலே அதிலே பிரச்சினை இல்லை. ஆனால் வங்கிகளிடமிருந்து கொடுக்கப்படுகின்ற பணத்திற்கு அந்தக் கிணறு வெட்டப்படுகின்ற நேரத்திலே அந்த கிணற்றிலே தண்ணீர் ஆதாரங்கள் இல்லை; பாசனப் பகுதி இல்லையென்றால், கொடுக்கப்படுகின்ற, பொது மக்களிடமிருந்து வருகின்ற பணம் வீணாகப் போகிறது.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** ஆகவே வங்கிகளின் மூலம் கடன் வழங்குகிற நேரத்திலே, அங்கே இருக்கிற பாசன நீர் ஆதாரங்களை வைத்துத்தான் அந்த வங்கிகள் கடன் கொடுக்க முன் வருகின்றன. ஆகவே தனியார் தோண்டுவது என்பது வேறு, வங்கிகள் மூலம் கடன் பெற்று அதன்மூலம் கிணறுகள் தோண்டுவது என்பது வேறு. ஆகவே வங்கிகள் மூலம் கடன் வழங்குகிறபோது பாசன நீர் ஆதாரங்களைப் பொறுத்துத்தான் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரமணி நல்லதம்பி.

**திருமதி ரமணி நல்லதம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகளிலே கடன் பெற்று கிணறு தோண்ட வேண்டிய நிலையிலே இருக்கிற விவசாயிகள், இந்த வரன்முறை வைப்பதினாலே அவர்கள் வெகுவாக பாதிக்கப்படுகிறார்கள். எல்லா விவசாயிகளுக்கும் நிறைய நிலங்கள் இருக்காது. ஆகவே குறுகிய அளவிலே சிறிய நிலம் வைத்திருப்பவர்களுக்கு, இந்த வரன்முறை இருப்பதால், அரசு உதவியுடன் கடன் பெற்று கிணறு தோண்டுகிற வாய்ப்பை அவர்கள் இழக்கிறார்கள். ஆகவே, அந்த வாய்ப்பை சிறு விவசாயிகளுக்கு தருகிற வகையிலே அந்த இடைவெளியை குறைத்து, அல்லது நீக்கி கடன் வழங்குவதற்கு ஆவண செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிலத்தடி நீர் துறையும், நபார்டு வங்கியும், இந்த கிரவுண்ட் வாட்டர் இருக்கிற, நிலத்தடி நீர் இருக்கிற ஆதாரத்தை பொறுத்து நிதி ஆதாரத்தையும் பொறுத்து சில இடங்களிலே அந்த தூரத்தைக் குறைக்கலாம் என்ற அளவிற்கு பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் நிதி ஆதாரங்கள் அதிகமாக இருக்கிற வங்கிகளில் நிச்சயமாக ஏழை எளிய விவசாயிகளுடைய எண்ணற்ற நலன்களை காக்கின்ற இந்த அரசு, அது பற்றி ஒரு விரைவான நடவடிக்கையை, முடிவை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. சா. பழனிசாமி.

**திரு. நா. சா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறுகள் வெட்டுவதற்காகத்தான் நபார்டு வங்கிகள் மூலமாக கடன் கொடுக்கிறார்கள். இந்த கிணறுகளை வெட்டுவதை விட ஆழ் குழாய் கிணறுகளை உடனடியாக போட்டு நீரை பெறுவதற்கான புதிய முறையிலே இன்று விவசாயிகள் ஈடுபட்டு 'ஏர் கம்பிரஸ்ஸர்' போன்ற கருவிகளை வைத்து தண்ணீர் இறைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே கிணறுகளை வெட்டுவதற்கு பதிலாக அல்லது கிணறுகளை வெட்டுவதோடு ஆழ் குழாய் கிணறுகளையும் அமைப்பதற்கு வங்கிகள் மூலமாக கடன்





பெறுவதற்கு அரசு பரிந்துரை செய்யுமா? அந்தக் கிணறுகளை அப்படி தோண்டுகிற இடத்திலே தண்ணீர் இருக்குமா என்பதைக் கண்டு அறிவதற்காக நம்முடைய அரசு நிலத்தடி நீர் வள நிபுணர்கள் மூலமாக அதை சரியான முறையிலே கண்டறிந்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறுகளை தோண்டுகிற நேரத்திலே நிலத்திலே நீர் இருக்கிறதா என்பதை அறிவதற்காக பல்வேறு துறைகள் நம்மிடத்திலே இருக்கின்றன. நம்முடைய நிலத்தடி நீர் துறையை அணுகுகிற நேரத்திலே அதற்குரிய கருவிகளை வைத்து நம்முடைய பொறியாளர்கள் அதற்கான திட்டங்களை தயாரித்து, அதற்கேற்ற முறையிலே கிணறுகளை தோண்டுவதற்கான வழி முறைகளும் இருக்கின்றன.

இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல நபார்டு நிறுவனம் மூலம் கிணறுகள் தோண்டுவதற்கு பணம் தருகிற நேரத்திலே ஆழ் குழாய் கிணறுகளை அமைப்பதற்காக வென்றும் சிலர் கேட்டிருக்கிறார்கள். அவற்றை நபார்டு வங்கியின் மூலமாக கலந்து ஆலோசித்து, அவர்களோடு ஒன்றாக இணைந்து அதற்குரிய நடவடிக்கைகளை விவசாயிகளின் நலன் கருதி இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியதைப் போல நபார்டு வங்கி இத்தனை அடிகள் என்ற ஒரு நிர்ணயம் வைத்திருக்கிறார்கள். புதிய கிணறுகளுக்கு வேண்டுமானால் அந்த நிர்ணயத்தை நீங்கள் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்பு பழைய கிணறுகளை வெட்டி அதை ஆழப்படுத்த முடியாமல் வசதி படைத்தவர்கள் தங்கள் சொந்த பணத்தைப் போட்டு ஆழப்படுத்துகிறார்கள். ஆனால் சாதாரண சிறு விவசாயி 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் சொந்த பணம் போட்டு விவசாயம் செய்ய முடியவில்லை. கிணறுகளை ஆழப்படுத்த முடியவில்லை. அப்படி

வரும்போது வங்கிகளை அணுகி கடன் கோருகின்றனர். அப்படி வங்கிகளை கடன் கேட்கும்போது அவர்கள் இந்த அடிதாரத்தை வைத்து நிராகரிக்கிறார்கள். ஆகையினாலே அதைமாற்றி ஏற்கெனவே இருக்கும் பழைய கிணறுகளுக்கு இந்த அடிநிர்ணயம் இல்லாமல் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு முயற்சியை மேற்கொள்ளுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே புதிய கிணறுகளை வெட்டுவது சம்பந்தமாகத்தான் இந்த நிபந்தனைகளை எல்லாம் நபார்டு வங்கி வைத்திருக்கிறது. பழைய கிணறுகளை ஆழப்படுத்து வதற்கும், அதை தூர் வாருவதற்கும் உள்ள பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த யோசனைகளை நபார்டு வங்கியிடத்திலே நம்முடைய பொறியாளர்கள் கலந்து பேசி விவசாயிகளின் நலம் கருதி உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12 திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

12—

## புதுக்கோட்டைக்கு காவிரி நீர்.

* 335—**திரு. சி. குழந்தைவேலு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலுகா விராலிமலை, இலுப்பூர் வழியாக புதுக்கோட்டைக்கு காவிரி நீர் கொண்டுவரும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டத்தை செயல்படுத்த ஒப்பந்தக்காரர்கள் நியமிக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.



(ஆ) புதுக்கோட்டை நகராட்சி, 3 பேரூராட்சிகள் மற்றும் 15 வழியோரக் கிராமங்களுக்கான அபிவிருத்தி குடிநீர் வழங்கும் திட்டம் உலக வங்கி கடனுதவி திட்டத்தின்கீழ் செயலாக்குவதற்காக ரூ. 2192.04 இலட்சத்திற்கு அரசு ஆணை எண் 839, ந.நி.கு. வ. துறை, நாள் 6-9-1990-ல் ஒப்புதல் அளிக்கப் பட்டது. நவம்பர் 1990 திங்களில் வந்த உலக வங்கிக் குழுவின் பரிந்துரையின்படி இத்திட்ட மதிப்பீடு ரூ. 2976.35 இலட்சங் களுக்கு திருத்தி அமைக்கப்பட்டு அரசின் மறு நிர்வாக ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் ஜூன் 1993-க்குள் முழுமை யாக நிறைவேற்றப்பட்டு பயனுக்கு கொண்டு வர உத்தேசிக்கப் பட்டுள்ளது.

முற்பகல் 10-35

**திரு. சி. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் வெள்ளம் ஏற்பட்டபோதும், என்னுடைய குளத்தூர் தொகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டு, குடிநீர் கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நமது புரட்சித் தலைவியின் ஆட்சியில் இந்த காவிரி நீர் கொண்டுவரும் திட்டத்தைச் செயல் படுத்தினால், எனது தொகுதி மக்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். ஆகவே, இந்தத் திட்டம் விரைவில் செயல் படுத்தப்படுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தினை 1993-க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரைவில் முடிப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 13 திரு. நா. சா. பழனிசாமி. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

13—

## பயிர் காப்புறுதித் திட்டத்தை விரிவாக்குதல்.

* 4442—**திரு. நா. சா. பழனிசாமி** :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பயிர் காப்புறுதித் திட்டத்தை எல்லப் பயிர்களுக்கும் விரிவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பயிர் ஈட்டுறுதித் திட்டத்தை எல்லாப் பயிர்களுக்கும் விரிவாக்கும் செயற்குறிப்பு எதும் அரசிடம் இல்லை.

**திரு. நா. சா. பழனிசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிர் காப்புறுதித் திட்டத்தை இப்போது ஒருசில இடங்களிலே பரிட்சார்த்தமாக நெல், கம்பு, நிலக்கடலை, சோளம் போன்ற தானியப் பயிர்களுக்குத்தான் அதுவும் பரிட்சார்த்தமாக செய்யப்பட்டு வருவதாக அறிகிறேன். அந்த தானியப் பயிர்கள் மிகவும் குறைந்த செலவிலே பயிரிடப்படுபவை. ஆனால் வணிகப் பயிராக பயிரிடப்படுகின்ற பருத்தி, கரும்பு, வாழை, மஞ்சள் போன்ற பயிர்களை அதிகமாக ரசாயன உரங்களை, பூச்சி மருந்துகளை உபயோகப்படுத்தி அதிக முதலீடு செய்து பயிரிடுகின்றோம். அதனால் அந்தப் பயிர்களில் நஷ்டம் ஏற்படுகின்றபோதுதான், அது விவசாயிகளை பெரிய அளவிற்கு பாதிக்கக் கூடியதாக இருக்கிறது. அப்படிப்பட்ட பயிர்களுக்கும் இந்த பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்தை விரிவபடுத்தினால் விவசாயிகளுக்கு ஏற்படுகின்ற இழப்பைத் தவிர்க்க முடியும். இந்த தானியப் பயிருக்கு கொடுப்பதைக் கூட பயிருக்கு நஷ்ட ஈடு என்று கொடுக்காமல் அந்தப் பயிர் மீது கொடுக்கிற கடனுக்குத் தான் இன்ஷூரன்ஸ் செய்யப்படுவதாக—பயிர் இன்ஷூரன்ஸ் என்று சொல்வதைவிட லோன் இன்ஷூரன்ஸ் என்ற முறையிலேதான் அவை செயல்பட்டு வருகிறது. எனவே தானியப் பயிர்களை விட வணிகப் பயிர்களுக்கு அந்த திட்டத்தை விரிவாக்க



தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முயற்சிக்க வேண்டும் என்ற ஒரு வேண்டுகோளை இந்த நேரத்திலே விடுக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, நம்முடைய தமிழகத்தில் நெல், சோளம், கம்பு, கேழ்வரகு, நிலக்கடலை, எள் ஆகிய 6 பயிர் களுக்கு இந்தத் திட்டம் செயலாக்கப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல இதை மாற்றி வணிகப் பயிர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமானால் அதற்கு மத்திய அரசின் அனுமதி தேவை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அவருடைய நல் ஆலோ சனைகளை புரட்சித் தலைவியின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* 4165—**டாக்டர் பெ. வீரபாண்டியன்** :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

14—

## மேல்செங்கத்தில் விவசாயக் கல்லூரி.

* **வினா எண் 4165—டாக்டர் பெ. வீரபாண்டியன்** :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கம் தொகுதியில், மேல் செங்கத்தில் அமைந்துள்ள மத்திய மாநில விவசாய பண்ணையில் விவசாயக் கல்லூரி ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1992 ஜனவரி 30

**டாக்டர் பெ. வீரபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருப்பது ஒரே ஒரு மத்திய மாநிலப் பண்ணை. அது செங்கம் தொகுதியில், மேல் செங்கத்தில்தான் அமைந்துள்ளது. இதனுடைய விஸ்தீரணம் 12,000 ஏக்கர். ஆனால் இப்போது விவசாயம் நடைபெறுவதோ மூன்றே ஆயிரம் ஏக்கரில்தான். கிட்டத்தட்ட அந்தப் பண்ணையில் 15,000 தொழிலாளர்கள் வேலை செய்ய வாய்ப்பு உள்ளது. ஆனால் இப்போது வேலை செய்வதோ 1,500 பேர்கள்தான். எனவே, செங்கம் தொகுதி தாங்கள் அறிந்ததுதான். இது ஒரு செவலைக் குழந்தை. சக்தியற்று இருக்கிறது. இங்கே கல்லூரி ஏற்படுவதனால் லேண்டு அண்டு லேப் டெக்னாலஜி விருத்தி அடைவதால் விஞ்ஞானிகளுக்கும், பாமர மக்களுக்கும், விவசாயிகளுக்கும் ஒரு தொடர்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அதுமட்டுமல்ல, விவசாயக் கல்லூரி வருவதனால் விஞ்ஞானிகள் சில நூதன முறைகளைக் கையாண்டு செங்கம் தொகுதியை வளமாக்க வாய்ப்பு உள்ளது. நாங்கள் அறிந்ததே. Pearl S. Buck கண்டெடுத்த The Good Earth போல் உள்ள ஒரு நிலம் தான் செங்கம் தொகுதி. ஆனால் கல்வி அறிவு இன்மை காரணமாக மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, தாங்கள் தயவுகூர்ந்து இந்த நிலையை இந்த டாக்டர் சொல்லும் இந்த செவலைக் குழந்தையை தங்கள் கையில் ஒப்படைக்கின்றேன். தாங்கள் தயவுசெய்து இதை சீப் டாக்டரிடம் காட்டி ஒரு சிகிச்சை அளித்து ஒரு கல்லூரி அங்கே அமைய செய்வீர்களா, மறுபரிசீலனை செய்வீர்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தப் பண்ணை மத்திய அரசின் கட்டுப்பாட்டில இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அங்கே வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகளே இல்லை என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா என் 15. டாக்டர் க. கோபால். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.



992 ஜனவரி 30]

15—

**நன்னிலம் தொகுதியில் வீட்டுவசதிப் பிரிவை அமைத்தல்.**

* 3275—**டாக்டர் க. கோபால் :**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நன்னிலம் தொகுதியில் பல அலுவலகங்கள் இருப்பதால் வீட்டு வசதி வாரியம் ஒரு வீட்டுவசதிப் பிரிவை Housing unit ஏற்படுத்தி வாடகைக்கு வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**டாக்டர் க. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தாலுக்கா தலைமையிடமாக இருந்தும் கூட பல்வேறு அலுவலர்கள் கும்பகோணத்திலிருந்தும், நாகப்பட்டிணத்திலிருந்தும், திருவாரூரிலிருந்தும், மயிலாடுதுறையிலிருந்தும் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போதுமான பேருந்து வசதிகள் இல்லாமல் இருப்பதால் அவர்கள் அலுவலகத்திற்கு வருவதற்கு காலதாமதமும், திரும்ப முன்கூட்டியே வீட்டுக்கு சென்று விடுகின்ற சூழ்நிலையும் இருக்கிறது. மேலும் நன்னிலத்தில் வீட்டுவசதிப் பிரிவு இல்லாமல் இருப்பதால் இருக்கிற சின்ன வீடுகளில் அதிகமான வாடகைக் கொடுத்து வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். எனவே, வரும் நிதி ஆண்டிலாவது அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டம் செயல்படுத்த வேண்டுமென்றால் அந்தப் பகுதி வருவாய்க் கோட்டப் பிரிவிற்குள் வரவேண்டும். நன்னிலம் பகுதியைப் பொறுத்தவரையில் அது வருவாய்க் கோட்டப் பிரிவிற்குள் வராத காரணத்தால் அங்கு இந்தத் திட்டம் செயல்படுத்த இயலாது. மேலும் நன்னிலம் பகுதிக்கு என்று வீட்டுவசதிப் பிரிவு செயற்படுத்த முடியாத நிலையில்

இருக்கிறது. ஏற்கனவே, தஞ்சை நகரில் மன்னார்குடி, கும்பகோணம், திருவாரூர், மயிலாடுதுறை போன்ற நகரப் பகுதிகளை உள்ளடக்கி ஒரு பிரிவு உருவாக்குவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆகவே, தற்போது சாத்தியக்கூறு இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 16. திரு. ஆ. கு. சீனிவாசன், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

16—

தாலுகா பகுதியில் தொழிற்பேட்டை அமைத்தல்.

* 3585—திரு. ஆ. கு. சீனிவாசன் :

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமங்களில் போதுமான வேலைவாய்ப்பு இல்லாததால் பல இளைஞர்கள் வேலை வாய்ப்பு கருதி நகரங்களுக்குச் செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதனை தடுக்க தாலுகா, பிர்க்கா பகுதியில் தொழிற்பேட்டை உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தமிழ்நாட்டில் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு, அதற்கான போதிய விண்ணப்பங்கள் அல்லது கோரிக்கைகள் மாவட்ட தொழில் மையத்தின் மூலம் பெறப்படின் அதனை ஆராய்ந்து தக்க தொழிற்பேட்டைகளை சிட்கோ நிறுவனம் அமைக்கும்.

**திரு. ஆ. கு. சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் பொளமல்லூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. அந்தப் பகுதியில் எந்தவித வசதியும் இல்லாமல் இன்னும் பின் தங்கியிருக்கின்ற காரணத்தால் எங்கள் பகுதிக்கு சென்ற பட்ஜெட்டில் அடிப்படை வசதி...



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சீனிவாசன், பொதுவாக தொழிற்பேட்டை ஆரம்பிப்பது பற்றி கேள்வி கேட்டிருக்கிறீர்கள். இப்போது உங்கள் தொகுதிக்கு என்று கேட்டால் அவரிடம் பதில் இருக்காது. இந்த கேள்வியை ஒட்டி துணைக் கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. ஆ. கு. சீனிவாசன் :** தலைவர் அவர்களே, பின்தங்கியிருக்கின்ற எல்லா தொகுதிக்கும் வரும் என்ற காரணத்தால் கேட்கின்றேன். எங்கள் தொகுதியில் இந்த வாய்ப்புக்கு சிட்கோ நிறுவனத்தார் வந்து பார்வையிட்டு இருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் ஆரவாரத்தோடு இருக்கிறார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்கெனவே வந்த தொகுதி. ஆகவே அங்குள்ள மக்கள் எல்லோரும் ஆரவாரத்தோடு இங்கும் அங்கும் கொண்டு சென்ற இடங்களைக் காட்டியிருக்கிறார்கள். இந்த ஆண்டிலாவது அந்த தொழிற்பேட்டையை ஆரம்பிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. முஹம்மது ஆசிப் :** மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, இதுபற்றி தனிக் கேள்வி போடவும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 17. திரு. பி. வி. இராஜேந்திரன். மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்.

17—

குழந்தைகள் காப்பகத்தில் உடற்பயிற்சி அளித்தல்.

* 5356—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குழந்தைகள் காப்பகத்தில் குழந்தைப் பருவத்திலிருந்தே உடற்பயிற்சி அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1992 ஜனவரி 30

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டத்தில் குழந்தைகள் வளர்ப்பில் இதுவரை எந்த அரசும் மேற்கொள்ளாத வகையில் புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற அக்கறையைப் பெற்று இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் 10 மணியிலிருந்து 11 மணி வரை குழந்தைகளுக்கு 'அவுட் டோர் கேம்ஸ்' மூலமாக உடற்பயிற்சி அளிக்கவேண்டும் என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பொறுப்பு ஏற்றவுடன் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

முற்பகல் 10-45

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய பதிலில் காலை 10.00 மணியிலிருந்து 11.00 மணி வரையில் அவுட்டோர் கேம்ஸின் மூலமாக குழந்தைகளுக்கு உடற் பயிற்சி அளிக்க அரசு உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். தமிழகத்திலே, குறிப்பாக கிழக்குத் தஞ்சை மாவட்டத்தில், வேதாரண்யம் தொகுதியிலே, நான், காலை 10-லிருந்து 11 மணி வரையில் அப்படி ஒரு உடற்பயிற்சி நடந்ததை கண்ணால்கூட பார்த்தது கிடையாது. அதற்கேற்ற இன்பிரர்ட் ரக்சர்கூட குழந்தைகள் காப்பகத்தில் கிடையாது. உங்களுடைய நோக்கம் நல்ல நோக்கம்தான். அது முக்கியமாக, நல்லமுறையிலே நடைபெற வேண்டுமென்றால், மத்திய அரசு சமூக நல சேவகர்களுக்கு பத்மபூஷன், பத்மவிபூஷன் விருதுகளை வழங்குகிறது. அப்படிப்பட்டவர்களைத் தலைவர்களாகக் கொண்டு இதனை மானிட்டர் செய்கின்ற ஒரு குழுவை இந்த அரசு நியமிக்குமா என்று உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திராகுமாரி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் குழந்தைகள் காப்பகத்தில் நடைபெறுவதாக என் கண்ணில் படவில்லை என்று தெரிவித்தார்கள்.



1992 ஜனவரி 30]

உடற்பயிற்சி என்கிறபோது, குழந்தைகளுக்கு கராத்தே போன்றவைகளையும் மற்றவைகளையும் சொல்லிக் கொடுக்க முடியாது. பாரதியார் அவர்கள் 'ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' என்று குறிப்பிட்டதைப்போல, குழந்தைகள் காப்பகத்திலே, அந்த குழந்தைகளுக்கு ஓடி விளையாட உடற்பயிற்சி அளிக்க முடியுமே தவிர, இரண்டு வயதிலிருந்து நான்கு வயது வரை இருக்கும் குழந்தைகளுக்கு வேறு உடற்பயிற்சி அளிக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். பி. பரமசிவம்.

**திரு. ஆர். பி. பரமசிவம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகள் காப்பகத்தில், அதாவது அரிசன குழந்தைகளும் மற்ற குழந்தைகளும் சேர்ந்து படிக்கின்ற காப்பகத்தில் 70 குழந்தைகளுக்கும், தனித்தனியாக இருக்கின்ற காப்பகத்தில், அதாவது கிராமங்களில் இருக்கின்ற காப்பகத்தில் 50 குழந்தைகளுக்கும், அரிசனக் காலனிகளில் இருக்கின்ற காப்பகத்தில் 70 குழந்தைகளுக்கும் சத்துணவு அளிக்க வேண்டுமென்று இந்த அரசு ஆணையிட்டுள்ளதாக அறிகின்றேன்.

(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி, அந்தக் குழந்தைகளுக்கு உடற் பயிற்சி அளிப்பது பற்றியது, எண்ணிக்கை பற்றியது அல்ல.

வினா எண் 18, திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

**18—**

**ஊனமுற்றவர்கள் மற்றும் விதவைகளுக்கு வழங்கும் உதவித் தொகையை அதிகரித்தல்.**

*5945—**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊனமுற்றவர்கள் மற்றும் விதவைகள் ஆகியோருக்கு அரசு வழங்கும் உதவித் தொகையைக் கூடுதலாகக் கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

[1992 ஜனவரி 30

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு மிகப் பெரிய நிதிநிலை நெருக்கடிக்கு இன்றைக்கு ஆளாகி இருக்கின்ற காரணத்தினால் இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நிதி நெருக்கடி இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான். இருந்தாலும்கூட, மாதம் 50 ரூபாய் கொடுப்பது மிகவும் போதவில்லை. அதை 75 ரூபாயாகவாவது உயர்த்த வேண்டும். ஒரு விதவைக்கு 50 ரூபாய், ஒரு ஓல்ட் ஏஜ் பென்ஷனர். அவருக்கும் 50 ரூபாய் என்றால் மிகவும் போதாமல் இருக்கிறது. எனவே, 75 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அடுத்த ஆண்டு மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடம் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 4. அறிவிப்புகள்.

#### (அ) இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிற நிகழ்ச்சியாகவும், தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி



1992 ஜனவரி 30]

ஏற்கும் நிகழ்ச்சியாகவும், நம்முடைய பேரவைச் செயலகத்திற்குப் பின்புறம் உள்ள பயிற்சி மைதானத்தில் நடைபெற இருக்கிற நிகழ்ச்சிக்காக, பேரவை இப்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் 11.30 மணிக்குக் கூடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரவை இப்போது ஒத்திவைக்கப்படுகிறது.

பின்னர் பேரவை முற்பகல் 10.48 மணியளவில் ஒத்திவைக்கப் பெற்றது.

முற்பகல் 11-30

முற்பகல் 11.30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

### 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

#### (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாற்றுத் தலைவர்கள் பட்டியல். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)-ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப் பேரவையின் மூன்றாம் கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

1. திரு. ம. சின்னசாமி.
2. திரு. வ. சத்தியமூர்த்தி.
3. திரு. ஆர். சிங்காரம்.
4. திரு. வே. தம்புசாமி.
5. திரு. நா. சா. பழனிசாமி.

### 5. சிறப்புக் குறிப்புகள்.

#### (அ) வினாப் பட்டியலிலுள்ள இரு வினாக்கள் எடுக்கப் பெறாதது பற்றி அறிவிப்புச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விப் பட்டியலிலே இரு கேள்விகள் இருந்தன. அவற்றின் நிலை என்னவாயிற்று?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரம் முடிவுற்ற தற்குப் பின்னர் எஞ்சியுள்ள கேள்விகள் உடுக்குறியிடா வினாக்களாகக் கருதப்பட்டு அதற்குரிய பதில்கள் உடுக்குறியிடா வினாக்களோடு சேர்த்து வழங்கப்படும். அதுதான் விதி.

**(ஆ) மின் கட்டண உயர்வு குறித்து அவையில் அறிவிக்காமல் வெளியே அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து.**

**திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, முக்கிய முடிவுகள் பொதுவாக அவையிலே அறிவிக்கப்படுவதுதான் முறை. அங்ஙனமிருக்க, மின்சாரக் கட்டண உயர்வு வெளியிலே அறிவிக்கப்பட்டு, அது பத்திரிகைகளிலேயெல்லாம் வந்த பிறகுதான் எங்களுக்குத் தெரிகின்றன. சாதாரணமாக சட்டமன்றம் கூடுகின்ற அறிவிப்பை வெளியிட்டவுடனேயே அரசு எடுக்கிற முக்கிய முடிவுகளையெல்லாம், சட்டமன்றத்திலே தான் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முக்கிய முடிவுகள் என்று வராது; சில கொள்கை முடிவுகள் என்று இருக்கிறது. அதுகூட ஒரு மரபுதான். அது நீங்கள் அறியாதது அல்ல. ஆகவே வேறு ஒன்றும் அதிலே வராது. அதிலே உங்களுடைய கருத்துக்களைச் சொல்லி விட்டீர்கள். அவ்வளவுதான். இது கொள்கை முடிவா, முக்கிய முடிவா என்பதெல்லாம் நிலைமையைப் பொறுத்து இருக்கிறது. நீங்கள் பேசும்பொழுது பேசலாம். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைச் சொல்லி விட்டீர்கள். அதோடு முடிந்து விடுகிறது.

**திரு. ச. இராமச்சந்திரன் :** இந்த மாதிரியான முடிவுகளை பத்திரிகைகளிலே அறிவிப்பது மன்றத்தினுடைய மரபை மீறி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கு உரிய முறைப்படி நீங்கள் எழுப்புங்கள். (குறுக்கீடு) உங்களுடைய கருத்தைச் சொல்லி விட்டீர்கள். அதற்கு மீறி ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் உரிமைப் பிரச்சினை மாதிரி, அதை முறைப்படி எழுப்ப வேண்டும். திடீரென்று எழுந்தீர்கள், உங்களுடைய கருத்தைச் சொல்லி இருக்கிறீர்கள். அதற்குப் பிறகு என்னிடத்தில் இருந்தோ அல்லது அரசாங்கத்திடம் இருந்தோ முறையான பதிலை நீங்கள் எதிர்பார்த்தால், நீங்கள் அந்த முறைப்படி





கொடுத்தால் நான் அதை எடுத்துக் கொள்ளலாம். எடுத்துக் கொண்டு, உங்களுக்குப் பதில் வழங்கலாம்.

**திரு. ச. இராமச்சந்திரன் :** மரபைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நல்லது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(இ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்கண்ட பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்துள்ளன.

(1) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில் இருந்து, 24—1—1994 வரை ஆகும்.

(2) தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில் இருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.

வேட்பாளர்கள் நியமனத் தாட்களை 4—2—1992 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர், செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாட்கள் 5—2—1992 புதன்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 6—2—1992 வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் [illegible] வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும்

[1992 ஜனவரி 30

இடையே சென்னை கோட்டையில் இருக்கும், முந்தைய மேலவை மண்டபத்தில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம். திரு. மு. தென்னவன் தீர்மானத்தை முன் மொழிவார்.

* **திரு. மு. தென்னவன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

"ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப் பெற வேண்டும் :

'1992 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 29 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'."

முற்பகல் 11.35

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருமதி கவிநிலவு தர்மராஜ் வழிமொழிவார்.

**திருமதி கவிநிலவு தர்மராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. மு. தென்னவன்.

**திரு. மு. தென்னவன் :** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தை இந்த அவையிலே முன்மொழிகிற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன்.



1992 ஜனவரி 30] [திரு. மு. தென்னவன்]

வலிமையற்ற தோள்கள் வலிமை பெற வேண்டும்; ஒடுங்கிய உள்ளம் உயர்வு பெற வேண்டும்; ஒளியிழந்த விழிகள் ஒளி பெற வேண்டும்; அஞ்சுதல், கெஞ்சுதல், அகன்றிட வேண்டும் என்கிற இலட்சியங்களை நெஞ்சிலே தாங்கி, தாழாச் சிறப்பும், வீழாப் புகழும், வெற்றிகொளி வீரமும் கொண்ட, தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு, ஏழை எளிய மக்களுக்காக, அடித்தள மக்களுக்காக, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, நசுக்கப்பட்ட, அமுக்கப்பட்ட மக்களுக்காக, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக முழு மூச்சுடன் சீரிய முறையிலே, தொடர்ந்து பாடுபட, தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகிற வகையிலே, ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தீட்டப்படுகிற திட்டங்கள், அடித்தள மக்களின் இதயங்களைத் தொட்டாக வேண்டும் என்கிற உணர்விலே, எத்தகைய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பதல்ல முக்கியம்; எத்தகைய மக்களுக்காக, எத்தகைய திட்டங்களைத் தீட்டுகிறோம் என்பதுதான் முக்கியம் என்கிற இலட்சியத்தை அடிப்படையாகக் கொண்டு ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலே எந்த மாநிலத்து முதலமைச்சருக்கும் இல்லாத சிந்தனை, எந்த மாநிலத்து முதலமைச்சருக்கும் இல்லாத ஆற்றல், எந்த மாநிலத்து முதலமைச்சருக்கும் இல்லாத கம்பீரம் எந்த மாநிலத்து முதலமைச்சருக்கும் இல்லாத வீரம், எந்த மாநிலத்து முதலமைச்சருக்கும் இல்லாத ஒருமைப்பாட்டு உணர்வு, நம்முடைய மாநிலத்து முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தமிழகத்தின் நலனைக் காப்பதிலே, தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதிலே, தமிழகத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடுவதிலே தமிழகத்தின் தேவைக்காக வாதாடுவதிலே, போராடுவதிலே, தட்டிக் கேட்பதிலே, சுட்டிக்காட்டுவதிலே ஒரு தொலை

[திரு. மூ. தென்னவன்] [1992 ஜனவரி 30

தொலைநோக்குப் பார்வையோடு புரட்சித் தலைவி அரசு செயல்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிற வகையிலே ஆளுநர் உரை அமைந்திருக்கிறது.

ஒரு நாட்டினுடைய தொழில் வளர்ச்சி, மின்சாரத்தை நம்பியிருக்கிறது. இன்றைக்கு, தமிழ்நாட்டிலே மின்வெட்டு இல்லாமல் இருக்கலாம். ஆனால், வருங்காலத்தில் தமிழ்நாட்டிலே மின் விசைத் தேவையை, தொலைநோக்குப் பார்வையோடு சிந்தித்து, ரூ. 7,000 கோடி செலவிலே ஜெயங்கொண்ட சோழபுரத்திலே ஒரு பெரிய மின்திட்டம் அமைக்கப்படுமென ஆளுநர் உரையிலே அறிவித்திருப்பதை நான் பாராட்டுகிறேன். புதிதாக மூன்று தொழில் வளர்ச்சி மையங்களை ஏற்படுத்த, செயற்குறிப்பு அனுப்பப்பட்டும் அதற்கு மத்திய அரசு இதுவரை ஒப்புதல் வழங்காததைக் கண்டு, நான் வேதனைப்படுகிறேன். அது மாத்திரமல்ல; கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக, புதிதாக பெரிய மத்திய திட்டம் ஒன்று கூட தமிழ் நாட்டில் தொடங்கப்படவில்லை என்பது வேதனைக்குரிய செய்தி என்றாலும், அந்தக் குறையைப் போக்குவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாட்டிலே மத்திய அரசினுடைய முதலீடு குறைந்து கொண்டே வருகிறது. அன்றைக்கு, பேரறிஞர் அண்ணா சொன்னார்; 'வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது;' என்று. இன்றைக்கு மத்திய சர்க்காரோ, தெற்கை நம்பித்தான் இருக்கிறது; தென்னாட்டைச் சேர்ந்தவர்தான் பிரதமராக இருக்கிறார். ஆகவே, தெற்கு மாநிலமான தமிழகத்தில், பல்வேறு மத்திய திட்டங்களுக்கு விரைவில் அனுமதியளிக்க அன்புடன் வேண்டுகிறேன். தமிழ் மாநிலத்தை விரைவில் தொழில் மயமாக ஆக்குவதற்கு வழி வகுக்கும் தமிழக முதலமைச்சர் அவர்களின் புதிய தொழில் கொள்கையை நான் பாராட்டுகிறேன். மற்ற மாநில அளவுகளின் தொழில் கொள்கையை ஒப்பிடுகையில் நம்முடைய தொழில் கொள்கை சிறந்து காணப்படுகிறது என்று நாடே பாராட்டுகிறது. தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய தேவையாகக் கருதப்படுகிற சாலையினை பராமரிப்பதற்காக, சாலையினை பாதுகாப்பதற்காக, சாலையின் தரம் உயர்த்துவதற்காக இந்த அரசு தனிக் கவனம் செலுத்தும் என ஆளுநர் உரையிலே அறிவித்திருப்பது மெத்த மகிழ்ச்சியைத் தருகிறது.

1992 ஜனவரி 30] [திரு. மூ. தென்னவன்]

கிராம ராஜ்யமே ராம ராஜ்யம் என்று காந்திஜி அவர்கள் கனவு கண்டார்கள். அந்தக் கனவை நனவாக்குகிற வகையிலே, நாட்டின் உயிர்நாடியாக விளங்குகின்ற கிராமங்களுக்கு 1992-ஆம் வருடத் திற்குள் பேருந்து வசதி அளிக்கப்படுமென அறிவித்திருப்பதை கண்டு நான் பாராட்டுகிறேன்.

முற்பகல் 11-40

நடப்பு ஆண்டின் இறுதிக்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது மெத்த மகிழ்ச்சியைத் தருகிறது. மொத்தத்தில், கிராமப்புற மக்களைப் பற்றிச் சிந்திக்கின்ற ஒருவர், கிராமப்புற மக்களுடைய தேவைகளை நிறைவேற்றக் கூடிய ஒருவர், கிராம மக்களுக்காக ஆட்சி நடத்துகின்ற ஒருவர் இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறார் என்பதை எடுத்துக் கூறுகிற வகையிலே இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. இதற்கு முன்னே இருந்து ஆட்சி செய்தவர்கள் கிராமப்புற மக்களைப் பற்றிச் சிந்திக்க வில்லை. கிராமப்புற மக்களுடைய குறைகளைப் போக்கவேண்டு மென்று நினைக்கவில்லை. சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு சாலை இல்லாத கிராமங்கள், குடிக்கக் குடிதண்ணீர் இல்லாத கிராமங்கள், படிப்பதற்குப் பள்ளிக்கூடம் இல்லாத கிராமங்கள், மரத்தடி நடுவிலே படிக்கும் அவல நிலையில் தத்தளிக்கும் கிராமங்கள், மருத்துவ வசதி இல்லாத கிராமங்கள், பேருந்து வசதி இல்லாத கிராமங்கள் அன்றைக்கு இருந்தன. இன்றைக்கும் இருக்கின்றன. அந்தக் குறைகளைப் போக்குகின்ற வகையிலே இந்த நல்ல அரசாக கிராம மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்குகின்ற அரசாக இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இருக்கிறது என்பதை எடுத்துக் கூறுகிற வகையிலே அந்த லட்சியத் தேரோட்டமாக ஆளுநர் உரை அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த மாநிலத்தில் தற்போதுள்ள ஓர் ஆசிரியர் பள்ளிகளுக்கு கூடுதலாக ஓர் ஆசிரியர் நியமிக்கப்படுவதன் மூலம், பல ஆயிரக் கணக்கான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கின்ற வகையிலே ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. ஏழை எளிய மக்கள் பயன்படுகின்ற வகையில் குறிப்பாக கிராமப் பகுதிகளிலே அடித்தள மக்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி கொடுப்பதை

நோக்கமாகக் கொண்டு, கருணை உள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்களுடைய திருநாமத்தில் செயல்படுத்தப்படுகிற 'மருத்துவ நலத் திட்டத்தை' ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது பாராட்டுதற்குரிய ஒன்றாகும். கிராமப்புறங்களில் வாழ்கின்ற ஒரு இலட்சம் பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையிலே 'ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டம்' பற்றி அறிவித்திருப்பது பாராட்டுதற்குரியது.

விவசாயிகள் தங்களுடைய நிலங்களைச் சரியாகவும், முழுமையாகவும் தெரிந்துகொள்வதற்கான வகையிலே 'நிலப் பதிவு மேலாண்மைத் திட்டம்' பற்றி ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பது மெத்த மகிழ்ச்சியைத் தருகிறது. மத்திய அரசு தன்னிச்சையாக, அரிசி, பெட்ரோல், டீசல், நிலக்கரி ஆகியவற்றின் விலையை உயர்த்தினாலும் அதைத் தாங்கிக் கொண்டு செயல்படுகிற நிலை மாநில அரசுக்கு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர் அருமை நண்பர் தென்னவன் அவர்கள் ஒரு தவறான தகவலை அவைக்குத் தருகிறார்கள். பெட்ரோல், டீசல் விலை உயர்வு மத்திய அரசால் கொடுக்கப்பட்டது அல்ல. Irrecoverable Taxes என்று சொல்லக்கூடிய திரும்பப் பெற முடியாத வரி, என்று சில மாநிலங்களில் விதிக்கப்பட்ட காரணத்தினால் அந்த மாநிலங்களுக்கு மட்டும் அந்த விலை உயர்வு கொடுக்கப்பட்டு, அதைச் சம்பந்தப்பட்ட எண்ணெய்க் கம்பெனிகளே பெற்றுக் கொள்ளுமேயொழிய, மத்திய அரசு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தவில்லை. உதாரணமாக, கேரளாவுக்குத்தான் அதிகமாகக் கூட்டப்பட்டது. ஆகவே, அது மாநில அரசு ஏற்கனவே விதிக்கப்பட்ட வரியினால் வந்த வினையேயொழிய மத்திய அரசு, பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தவில்லை. அது தவறான தகவல் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. அவர் சொன்ன தகவலுக்கு நீங்கள் ஒரு தகவல் கொடுக்கிறீர்கள். திரு. ச. இராமச்சந்திரன் : அவர்கள்.

* திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்ட்ரல் பூல்' என்கிற நிதியிலிருந்து இந்த நிதி மாநில அரசுக்குத் தரப்பட்டன. அதை மத்திய அரசு நிறுத்திவிட்டது. நிறுத்திவிட்டு, அந்த அந்த பெட்ரோல் கம்பெனிகளை, நீங்களே அந்த அந்த மாநிலங்களில் வசூலித்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டது. ஆகவே, மத்திய அரசு நிறுத்தியதன் காரணமாகத்தான் இந்த பெட்ரோல், டீசல் விலை உயர்வு ஏற்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. தென்னவன்.

திரு. மு. தென்னவன் : எந்தகைய கடுமையான நிதி நெருக்கடி ஏற்பட்டாலும், மத்திய சர்க்கார் அரிசி விலையை உயர்த்தினாலும் கூட, தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மிகச் சாதாரண ரக அரிசியினுடைய விலையை 2 ரூபாய் என்று நிர்ணயித்ததை மாற்றாமல், ஏழை மக்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற வகையிலே புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மாத்திரமல்ல. இன்றைக்குத் தமிழகத்தை மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது, தமிழகத்தில்தான் அரிசி விலை குறைவு. தமிழகத்தில்தான் பால் விலை குறைவு. மற்ற மாநிலங்களை ஒப்பிடுகிறபோது தமிழகத்தில்தான் போக்குவரத்துக் கட்டணம் குறைவு, தமிழகத்தில்தான் மின்சாரக் கட்டணம் குறைவு என்பதனை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலக்கரி விலையை உயர்த்தியதன் காரணமாக அந்த நிலக்கரியிலேயிருந்து மின்சாரத்தை உருவாக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தாலேதான் மின்சாரக் கட்டணம் உயர்த்த வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. டீசல் விலை உயர்வு காரணத்தினாலே, உதிரி பாகங்கள் விலை உயர்வு காரணத்தினாலே, பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே கடுமையான நிதிநிலைமை

[திரு. மு. தென்னவன்] [1992 ஜனவரி 30

நெருக்கடி இன்றைக்கு இருந்தாலும், ஏறத்தாழ ஒரு கோடியே 20 லட்சம் ஏழையெளிய மக்களுக்கு ரூ. 41 கோடி செலவிலே புரட்சித் தலைவி அவர்கள் இலவச வேஷ்டி, சேலைகள் வழங்கி ஏழைகளுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், உறையுள் போன்ற அடிப்படைத் தேவைகளை வழங்க இந்த அரசு பொறுப் பேற்கும் என்று ஆளுநர் உரையிலே சொல்லியிருப்பது, இது ஏழைகளுடைய அரசு என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**முற்பகல் 11-45**

கடந்த 2½ ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்தில் தீவிர வாதமும், பயங்கரவாதமும் தலைவிரித்தாடியது. கடத்தலும், ஆயுத கலாச்சாரமும் அதிகரித்து தமிழகத்தின் அமைதிக்கு பங்கம் ஏற்பட்டது. அஸ்ஸாமிலே வாழ்கின்ற மக்கள் அஞ்சி அஞ்சி சாவதைப் போல, பஞ்சாபிலே வாழ்கின்ற மக்கள் பரபரப்பாக வாழ்வதைப் போல, உத்தரப்பிரதேசம் ரத்த பிரதேசம் ஆவதைப் போல, ரோஜாக்களின் சொர்க்கம் என்று வருணிக்கப்படுகின்ற காஷ்மீரத்திலே ஓடிக்கொண்டிருக்கிற பனி நதிநீர் பற்றி எரிவதைப் போல, தமிழகம் அப்படிப்பட்ட அமைதியற்ற காடாக ஆக்கவேண்டும் என்று ஒரு கூட்டம் செயல்பட்டது. இந்த நிலைமைதான் கடந்த 2½ ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள், முதலமைச்சராக பொறுப் பேற்றுக்கொண்டதற்குப் பிறகு அவர்களுடைய துணிவு மிக்க, வீரம் மிக்க நடவடிக்கையால் இன்றைக்கு அந்த பயங்கரவாதமும், தீவிரவாதமும் தகர்க்கப்பட்டு வெளிநாட்டு போராளிகளுடைய நடமாட்டம் நீங்கி இந்தியக் கண்டத்திலேயே அமைதி தவழ்கின்ற மாநிலமாக தமிழகம் அமைதிப் பூங்காவாக திகழ்கிறது என்றால், அது இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களால்தான். எத்தகைய இன்னல்கள், அச்சுறுத்தல்கள் வந்தாலும் அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் உயிரையே பயணம் வைத்து விடுதலைப் புலிகளையும் தீவிரவாதிகளையும் ஒடுக்கி யிருக்கிறார்கள். அத்தகைய ஆற்றல்மிக்க முதலமைச்சராக வீரம் மிக்க முதலமைச்சராக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிறார்கள் என்பதனை ஒருமைப்பாட்டு உணர்வுள்ள காங்கிரஸ் பெரியக்க நண்பர்களுக்கு நான் தெரிவித்துக்கொள் கிறேன்.



1992 ஜனவரி 30] [திரு. மு. தென்னவன்]

காவிரி நதிநீர் பங்கீட்டில் நம்முடைய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, அவர் ஆற்றிய அயராத பணியின் காரணமாக, இன்றைக்கு தமிழகம் புரட்சித் தலைவி அவர்களை பாராட்டிக்கொண்டிருக்கிறது. நடுவர் மன்றம் நமக்குச் சாதகமாக தீர்ப்பு பிறப்பித்ததற்குப் பிறகும் கர்நாடக அரசு மதிக்கவில்லை. ஏன், உச்சநீதி மன்றம் தீர்ப்பைத் தந்ததற்குப் பிறகும், கருநாடக சர்க்கார் மதிக்க வில்லை. மத்திய சர்க்கார், அதாவது நடுவண் அரசு அதனுடைய அரசிதழிலே தீர்ப்பை வெளியிட்டதற்குப் பிறகும் இந்த தீர்ப்பை கருநாடக சர்க்கார் மதித்ததா? இதையும் நான் கேட்க விரும்புகிறேன். அந்த தீர்ப்பை மதிக்கவில்லை. சட்டத்தின் ஆட்சி என்று சொல்வீர்களே, அந்த சட்டம் அனைவருக்கும் சமம் என்று சொல்வீர்களே, அந்த அரசியல் அமைப்பு சட்டத் திற்குத் துரோகமாக, அங்கே கருநாடகத்திலே வாழ்ந்த தமிழர் களை அடித்து, நொறுக்கி, கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை, சூறையாடி, சூறையாடி, அவர்களை ரத்தம் சிந்த வைத்து தமிழகத்திற்கு விரட்டினார்கள். ஆனால் கருநாடக மாநிலத்திலே தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டு அந்த இரக்கமற்ற அரக்கத்தனமான செயல்களை கண்டிக்கவேண் டியவர்கள் கண்டித்தார்களா? கண்டிக்கப்படவேண்டியவர்களை கண்டித்தீர்களா? இந்த நான் கேட்கவிரும்புகிறேன், நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். வேற்றுமையிலே ஒற்றுமை என்று சொல்கிறார்களே, அந்த வேற்றுமையில் ஒற்றுமை தத்துவம் என்ன ஆயிற்று? வண்ணங்கள் மாறுபட்டாலும், எண்ணங்கள் மாறுபடக்கூடாது என்று சொல்வீர்களே அந்த எண்ணம் என்னவாயிற்று? ஆகவே, உச்சநீதி மன்றமே தங்க தீர்ப்பு சொன்னதற்குப் பிறகு, ஒருமைப்பாட்டுக்கு விரோதமாக அந்த தீர்ப்பை மதிக்காத கருநாடக சர்க்காரின்மீது என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? தமிழர்களை அடித்தார்கள், கொன் றார்கள், கொன்று குவித்தார்கள், கருநாடகத்தை விட்டு வெளி யேற்றினார்கள். அந்த நிலைதான் நடந்தது. என்ன நடவ டிக்கை எடுக்கப்பட்டது? பாதிக்கப்பட்ட தமிழர்களுக்காக என்ன உதவி செய்யப்பட்டது என்பதைப் பற்றி கேட்க விரும்பு கிறேன். தாயன்பு கொண்ட புரட்சித் தலைவி அவர்கள், பாதிக் கப்பட்டவர்களை, ஓடிவந்தவர்களை, நம்பி வந்தவர்களை,

[திரு. மு. தென்னவன்] [1992 ஜனவரி 30

நமக்கு என்று நாடு இருக்கிறது, நம் மொழி பேசும் மக்கள் தமிழகத்திலேயிருக்கிறார்கள் என்று ஓடிவந்தவர்களை அரவணைத்து, பாதுகாத்து, காப்பாற்றி, "நான் இருக்கிறேன் உங்களுக்குக் காவலாக" என்று புரட்சித் தலைவி அவர்கள் சொல்லி செயல்பட்டார்கள். அத்தகைய முதலமைச்சராக நம் புரட்சித் தலைவி அவர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள்.

ஆனால் தமிழகத்தினுடைய திட்ட ஒதுக்கீடு இன்றைக்குக் குறைந்திருக்கிறது. விலைவாசி உயர்வுக்கு, ரூபாயின் மதிப்பு குறைந்துவிட்டது என்று சொல்கின்றார்கள். ஆனால் சென்ற ஆண்டைவிட திட்ட ஒதுக்கீடு தமிழகத்திற்கு இந்த ஆண்டுகூட வேண்டுமா வேண்டாமா? தமிழர்களை அடித்து நொறுக்கிய கருநாடக மாநிலத்திற்கு 400 கோடி ரூபாயை அள்ளிக் கொடுத் திருக்கிறார்கள் அதிகமாக. நம்முடைய மாநிலத்திற்கு, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 120 கோடி ரூபாய் குறைவு என்று சொல்கிறார்கள். என் இந்த ஓரவஞ்சகம்? அவர்களுக்கு எதற் காக அதிகம் ஒதுக்கப்படவேண்டும்? மத்திய சர்க்கார் பாரபட்ச மற்ற முறையிலே நடக்க வேண்டாமா? ஒருமைப்பாட்டு உணர் வுள்ள பேரியக்கம் இந்த நாட்டை ஆளவேண்டுமென்ற உணர்வு படைத்த ஒரு கட்சி தமிழகத்தில் ஆட்சிக் கட்சியாக இருக்கின்ற போது, அந்த கட்சி ஆளுகின்ற மாநிலத்திற்குரிய நிதியை ஒதுக் கியிருக்கிறீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

ஆகவே நான் தெளிவாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மத்திய சர்க்காரை பொறுத்தமட்டில், மாநில சர்க்கார் கையேந்தி தான் இருக்கவேண்டும். நாங்கள் கையேந்தி நிற்கிறோம். கை கொடுப்பதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால் மத்திய சர்க் கார் கைகொடுப்பதிலே தயக்கம் காட்டுகிறது. ஏன்? அதற் கான காரணத்தை நான் சொல்ல விரும்பவில்லை. தமிழகத்து மக்கள் தெள்ளத் தெளிவாக புரிந்து வைத்திருக்கிறார்கள். தமிழகத்து மக்கள் பொறுப்புணர்ச்சியுள்ள மக்கள் என்பதனை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். (மேசையை தட்டும் ஒலி).

நேற்றையதினம் பத்திரிகையில் ஒரு செய்தியைப் படித்தேன். காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப் பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் ஒரு கருத்தைச் சொல்லியிருக்



1992 ஜனவரி 30] [திரு. மு. தென்னவன்]

கிறார். மத்திய அரசு மீதான் குற்றப்பத்திரிகையாக கவர்னர் உரை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். நான் பணிவுன் போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நாங்கள் உங்களை குற்றம் சுமத்தவில்லை. நாங்கள் குற்றப் பத்திரிகை வாசிக்க வில்லை. நீங்களும் குற்றப் பரம்பரையைச் சார்ந்தவர்கள் அல்ல. ஆக, மத்திய சர்க்காருடைய பார்வை தமிழகத்தின்மீது எட்டப் பார்வையாக இருக்கிறது. அது கிட்டப்பார்வையாக இருக்க வேண்டும் என்பதை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மதுவிலக்கை காங்கிரஸ் மாநிலத்திலேகூட அமுல்படுத்த முடிய வில்லை. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் மதுவிலக்குக் கொள்கையை அமுல்படுத்த முடியுமா என்று கேள்விக் கணை களைத் தொடுத்தார்களே (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு என்ன நிலைமை? கள்ளச்சாராயம் ஒழிக்கப்பட்டிருக்கிறது. நிர்மூலமாக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மதுவிலக்குக் கொள்கையை தமிழகத்தில் புரட்சித் தலைவி அவர்கள் நிறை வேற்றியிருப்பதன் மூலம் மதுவிலக்குக் கொள்கையில் புரட்சித் தலைவி ஒரு 'மகாத்மா' ஆக ஆகிவிட்டார் (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) என்பதில் நாம் எல்லாம் பெருமிதம் கொள்கிறோம். ஆகவே, கவர்னர் உரையில் ஒன்றும் இல்லையென்றும் நேற்று வாசித்துவிட்டு வெளிநடப்பு செய்தார்களே, அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கொட்டும் மழையிலே குளுமை இல்லை என்பதா? ஓடும் மின்சாரத்திலே வேகம் இல்லை என்பதா? ஆடும் மயில் தோகையிலே அழகு இல்லை என்பதா? ஆகவே, இந்த கவர்னர் உரையிலே எதுவும் இல்லை என்று சொல்லுகிறவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நாடு தெரிந்து வைத்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

அதேநேரத்தில் வறட்சியானாலும் சரி, வெள்ளமானாலும் சரி தமிழக மக்களின் பொருளாதாரப் பிரச்சினையானாலும் சரி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதானாலும் சரி இருக்கின்ற திட்டங்களை நல்லமுறையில் நிறைவேற்றுவதா னாலும் சரி அதிலே எடுத்துக்கொள்ள வேண்டிய அக்கறையை எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சியை, எடுத்துக்கொண்டிருக்கிற சீரிய திட்டங்களை விளக்குகிற உரையாக இந்த உரை

அமைந்திருக்கிறது. தமிழகத்தில் எவற்றில் எல்லாம் கவனம் செலுத்த வேண்டுமோ அவற்றில் எல்லாம் அரசு கவனம் செலுத்தி வருகின்றது என்பதனை கோடிட்டுக் காட்டுகின்ற ஒரு உரையாக இந்த உரை அமைந்திருக்கிறது. இல்லாமையை ஒழிப்பது, கல்லாமையை அகற்றுவது, இயலாமையை முடிப்பது, அறியாமையை நீக்குவது, தீண்டாமையை வெளியேற்றுவது தான் இந்த அரசின் நோக்கம். அதனை வெளிப்படுத்தும் உரையாக கவர்னர் உரை அமைந்திருக்கிறது என்பதனை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, தெளிவுபெற்ற அறிவும், தெளிவுபெற்ற சிந்தனையும், ஏழ்மையைக் கண்டு இரங்கும் தன்மையும், உண்மையாக உழைப்பும் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள் கடுமையான இந்த நிதி நெருக்கடியிலும் (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) அருமையான ஆளுநர் உரையை தந்திருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையை நான் வரவேற்று, பாராட்டி, இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து அமருகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. எஸ். டேனியல்ராஜ்.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநருடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கின்றேன். ஆளுகின்ற அரசினுடைய கொள்கைகளையும், மக்கள் நலத் திட்டங்களையும் பிரதிபலிக்கின்ற வகையிலே இந்த ஆளுநருடைய உரை அமைந்திருக்கிறது. ஆளுநருடைய உரையிலே இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்துக் கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து தருவோம், இந்த ஆண்டு இறுதிக்குள் ஆயிரம் மக்கள் தொகைக் கொண்ட எல்லா கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்து தருவோம், 1995 ஆம் ஆண்டு இறுதிக்குள் கிருஷ்ணா நதி நீரை சென்னைக்குக் கொண்டு வந்து தருவோம் என்பதனையும், விவசாயிகளுடைய முழு விவரங்கள் அடங்கிய பட்டா பாஸ் புத்தகங்களை வழங்குவோம் என்றும் நல்லபல திட்டங்களை ஆளுநர் உரையிலே அறிவித்திருப்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்தவர்களான நாங்கள் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.





முற்பகல் 11-55

இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு தமிழகத்திலே, மூலைமுடுக்கெல்லாம் ஆறாய் ஓடிக்கொண்டிருந்த கள்ளச்சாராயத்தில் 80 சதவிகிதத்தை ஒழித்து தமிழகத்தினுடைய தாய்மார்களுடைய கண்ணீரை துடைத்தப் பெருமை தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களை சாரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதில் எங்களுக்கு எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது. அதே நேரத்திலே 10 ரூபாய்க்குக் குடித்துக்கொண்டிருந்த ஒருவன் இன்றைய தினம் 50 ரூபாய்க்குக் குடிக்கக்கூடிய நிலைமை, தமிழகத்திலே அயல் நாட்டு மதுக் கடைகள் திறந்திருப்பதன் காரணமாக ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்திலே வறுமையின் காரணமாக இன்றைய தினத்திலே லட்சக் கணக்கான, கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபட்ட தினக் கூலித் தொழிலாளர்களுடைய தற்கால நிலைமையை அரசு உணர வேண்டும். அந்தக் கள்ளச் சாராயத் தொழிலிலிருந்து அவர்கள் விடுபடுவதற்கும் புதிதாக கொள்ளை, திருட்டு போன்ற நடவடிக்கைகளிலே அவர்கள் ஈடுபடாமல் தடுக்கும் வகையிலும் அவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கின்ற வகையிலே இந்த அரசு உடனடியாக ஒரு மறுவாழ்வுத் திட்டத்தை தொடங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் தமிழகத்தினுடைய முதல்வரவர்கள் மது விலக்குக் கொள்கையிலே எந்த அளவுக்கு தீவிரமாக இருக்கிறார்களோ அந்த அளவுக்கு அந்தக் கொள்கை முழு அளவுக்கு வெற்றி பெறும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நமது மாநிலத்திலே தேச விரோதச் சக்திகளினுடைய சட்ட விரோத நடவடிக்கைகளை அடியோடு ஒழித்து, தன்னுடைய உயிரைக்கூடப் பொருட்படுத்தாமல், துணிச்சலோடு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டிய பெருமை தமிழகத்தினுடைய முதல்வரவர்களையே சாரும் என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து கிடையாது. (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் தமிழகத்தினுடைய விவசாயிகள் நலன் கருதி தமிழகத்தினுடைய முதல்வரவர்கள் எடுத்த நடவடிக்கைகளுக்கு தமிழகத்திலுள்ள அத்தனை

காங்கிரஸ்காரர்களும் உறுதுணையாக இருந்தார்கள் என்பதை இந்த அரசு மறந்திருக்க முடியாது. அதே போன்று தமிழகத்தினுடைய விவசாயிகளினுடைய நலன்கள் கருதி நடுவர் மன்றத் தீர்ப்பை அரசு கெஜட்டில் வெளியிட வேண்டுமென்று தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் குரல் கொடுத்து, அயராது பாடுபட்டு வெற்றி பெற்றார் என்பதை நாம் மறந்திருக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் தமிழகத்தினுடைய முதல்வரவர்களின் கோரிக்கைகளை ஏற்று, எவ்வளவோ பிரச்சினைகளுக்கு மத்தியிலே நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பை அரசு கெஜட்டில் வெளியிட்டு, பாராட்டுதலை இந்திய நாட்டினுடைய பிரதமர் அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்திருக்க முடியாது என்பதை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசு கெஜட்டிலே நடுவர் மன்றத் தீர்ப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த ஆணையை நிறைவேற்றுவதற்கு தமிழகத்தினுடைய முதல்வரவர்கள் எடுக்கின்ற முயற்சிகளுக்கு நிச்சயமாக தமிழக காங்கிரஸ் ஒட்டு மொத்தமாக உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே மெத்தப் பணிவோடு கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில் வரலாறு காணாத அளவுக்கு நெருக்கடியானதொரு பொருளாதாரச் சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்தியாவை மீட்பதற்காக துணிச்சலான நடவடிக்கைகளை இந்திய நாட்டினுடைய பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்கள் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இந்தப் பொருளாதார நடவடிக்கைகளின் காரணமாக ஒருவேளை ஆரம்பகாலத்திலே விலைவாசி உயர்வதுபோலக் காணப்பட்டாலும், வருங்காலத்தில் நிரந்தரத் தீர்வு இதன் மூலம் ஏற்படும் என்று நிச்சயமாக நம்புவோம். பாரதத்தினுடைய பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்களுடைய பொருளாதார நடவடிக்கைகளின் மூலமாக நிச்சயமாக ஏழை எளிய மக்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெளிவாகத் தெரிவிப்பதோடு, தமிழகத்தினுடைய முதல்வரவர்கள் இந்தியாவினுடைய பிரதமர் திரு. நரசிம்ம ராவ் அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.





மத்திய தொகுப்பிலிருந்து கொடுக்கும் அரிசியின் விலையை உயர்த்தியதன் காரணமாக இன்றைய தினம் தமிழகத்திலே இருக்கும் ரேஷன் கடைகள் மூலமாக வழங்கும் அரிசியின் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நாங்களும் ஒத்துக்கொள்கிறோம். அதே நேரத்திலே ஆளுநர் அவர்கள் உரையிலே ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அமோக விளைச்சல் விளைந்திருக்கிறது. ஆகவே, வெளி மார்க்கெட்டில் விஷம் போல் ஏறிவரும் அரிசி விலையைக் குறைப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். இந்தக் கருத்தைக் கூறுவதனால், ஏதோ உங்களைக் குறை கூறுவதாக கருதிவிடக் கூடாது. ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். தமிழகத்தில் காங்கிரஸ் பேரியக்கம் 20 ஆண்டுக் காலம் முன்பு ஆட்சியில் இருந்தபோது, தொழில் துறை, கல்வித் துறை, காவல் துறை ஆகிய அத்தனை துறைகளிலும் முதல் மாநிலமாக தமிழகம் விளங்கியது. பெருந்தலைவர் காமராஜருடைய காலம் பொற்காலம் என்று பாராட்டத்தக்க வகையிலே இருந்தது.

நண்பகல் 12-00

ஆனால் 1967-ல் காங்கிரஸ் பேரியக்கம், அரிசி விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்குத் தவறியதன் காரணமாக, தோல்வியைத் தழுவியது. அதற்கு அடுத்தபடியாக வந்த அரசு பல்வேறு காரணங்களால் மக்களால் புறக்கணிக்கப்பட்டாலும் கூட, அரிசி விலையின் உயர்வும் அதற்கு ஒரு காரணம் என்பதை நாம் மறுக்க முடியாது. அதே நேரத்தில் 11 ஆண்டுக்காலம், தமிழகத்தின் முடிசூடா மன்னனாக, எந்தக் கொம்பனாலும் வீழ்த்தமுடியாத தலைவராக தமிழகத்தின் முதல்வராக விளங்கிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படாத வண்ணம், அரிசி விலையைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்ததன் காரணமாக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை யாராலும் வீழ்த்தமுடியவில்லை.

ஆகவேதான், நாங்கள் சொல்கிறோம்—தமிழகத்தில் இருக்கிற கிராமப்புறங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஏழை எளிய மக்களுடைய உணர்வுகளை நாங்கள் இந்த மன்றத்தில் உங்கள் மத்தியில் சொல்வதற்குத் தவறினால், நல்ல நண்பர்களுக்கு உள்ள

[திரு. எஸ். டேனியல்ராஜ்] [1992 ஜனவரி 30

இலக்கணத்தில் இருந்து தவறிவிட்டோம் என்று தமிழகத்தின் மக்கள் கருதுவார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

விலை உயர்வைக் காரணமாக வைத்து, மத்தியில் ஆளுகின்ற காங்கிரசுக்கும், மாநிலத்தில் ஆளுகின்ற அனைத்திந்திய அண்ணா தி.மு.க.-வுக்கும் ஒரு மோதலை உருவாக்கி, அதன் மூலம் அரசியல் லாபம் தேடுவதற்காக கருதிக் கொண்டிருக்கின்ற சக்திகளுக்கு நாம் இடம் கொடுத்துவிடாதபடி, மத்திய—மாநில உறவுகள் எந்தக் காலத்திலும் பலமாக இருக்கிற அளவுக்கு நாம் ஒற்றுமையோடு செயல்படவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மன்னிக்கவேண்டும். ஒரு சிறு விளக்கத்தை நான் கூற விரும்புகிறேன்.

முன்பிருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில் அரிசி விலை உயர்த்தப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார். உண்மைதான். அப்போது கூட 'மானிய சுமை' ( subsidy burden ) மாநில அரசுக்கு இருந்தது ஆனால் அந்த நேரத்தில் கள், சாராயக் கடைகள் திறக்கப்பட்டு இருந்தன என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. அதன் மூலம் கிடைத்த வருமானம் அதற்கு ஈடு செய்தது. இன்றைக்கு மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தவேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன், மலிவு விலை மதுக் கடைகளை மூடியிருக்கிறோம். அதனால் ஏற்படுகின்ற நஷ்டத்தை மத்திய அரசாங்கம் ஈடு செய்யவேண்டும், ஈடு கட்டவேண்டுமென்று பலமுறை கோரியிருக்கிறோம். இதனால் ஏற்படுகின்ற முழு நஷ்டத்தையும் மத்திய அரசாங்கத்தால் ஈடு செய்ய முடியவில்லை என்றாலும், ஓரளவிற்காவது, மாநில அரசுக்கு ஏற்படுகின்ற இழப்பை அவர்கள் சரிக்கட்ட வேண்டுமென்று பலமுறை மன்றாடிக் கேட்டுவிட்டோம். ஆனால் அதற்கு 'முடியாது' என்று பதில் வந்துவிட்டது. திட்டக் குழுவின் துணைத்தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள், மிகத் தெளிவாக, பட்டவர்த்தனமாக, 'இதனால் ஏற்படுகின்ற இழப்பை



1992 ஜனவரி 30] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

மத்திய அரசாங்கம் சரிக்கட்ட முடியாது' என்றே மறுத்துவிட்டார். எனவே உங்கள் மூலமாக நான் கேட்க விரும்புவது, மத்திய அரசாங்கம், மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்துவது தேவையில்லை, தவறு என்று கருதுகிறதா? அப்படியானால், இந்திய அரசியல் அமைப்பு சாசனத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர மத்திய அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்தியில் ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்தவர். எனவே அங்கே மத்திய அரசில் இப்படி ஒரு முடிவை எடுத்து, மதுவிலக்குக் கொள்கையை அமுல் படுத்துவது தேவையற்றது என்ற ஒரு திருத்தத்தை, அவர்கள் **Constitution of India**வில் கொண்டு வருவார்களானால், பிறகு தமிழக அரசு அந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுவிலக்குக் கொள்கையில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் கட்சி, அ.இ.அ.தி.மு.க.-வினுடைய முதல்வர் அவர்கள் என்ன முடிவை எடுக்கிறார்களோ அந்த முடிவுதான் காங்கிரஸ் கட்சியின் முடிவு என்பதில் எள்ளளவும் சந்தேகம் இடையாது. ஆனால் அதே நேரத்திலே மத்திய அரசைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் பேரியக்கமும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தினுடைய முதல்வராக புரட்சித் தலைவி செல்வி ஜெயலலிதா அவர்களும் ஆள வேண்டுமென்று இரண்டு பேரியக்கங்களைச் சேர்ந்தவர்களும் மூலை முடுக்கெல்லாம் சென்று மக்களுடைய ஆதரவைத் திரட்டி, இன்றைய தினம் எதிர்க்கட்சிகளே இல்லாத அளவுக்கு இந்த ஆட்சி பீடத்திலே இருந்து கொண்டிருக்கிறோம்.

பிற்பகல் 12.05

ஆகவேதான் மக்களுடைய உள்ளக்கிடக்கை, மக்களுடைய எண்ணங்களை எடுத்துச் சொல்லுகிறோம். அப்படிச் சொல்வதன் மூலமாக இந்த அரசை விமர்சனம் செய்வதாக நீங்கள் கருதிவிடக் கூடாது. மத்திய அரசு, மாநில அரசைப் புறக்கணிக்கிற வகையிலே ஏதாவது நடவடிக்கைகளை எடுத்து, உதவி செய்ய

மறுத்தால் நிச்சயமாக தமிழகத்தைப் பொறுத்த வரையில் காங்கிரஸ் பேரியக்கம் உங்களோடு உறுதுணையாக இருக்கும் என்பதை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு வகையான மக்கள் நலத் திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கின்றன. அந்த திட்டங்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும் என்று எண்ணம் இரண்டு அரசுகளுக்கும் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த திட்டங்கள் முழுமையாக மக்களுக்குப் போய்ச் சேருகிறதா என்றால், நாம் எண்ணுகின்ற அளவிற்கு அது வெற்றி பெறவில்லை. இதற்கெல்லாம் காரணம், அரசுத் துறையிலே பணியாற்றுகிற அரசு அலுவலர்களில் ஒரு சிலர் மட்டத்தில், மேலதிகாரிகள் முதல் கீழ் மட்டத்திலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் வரையிலே, அவர்கள் மத்தியிலே இலஞ்சம் தாண்டவமாடுவதுதான் காரணம். இதன் காரணமாக இன்றைய தினம் நாம் போடுகிற திட்டங்கள், நாம் எதிர்பார்க்கிற அளவிற்கு வெற்றி பெறுவது கிடையாது. இதைத்தான் மக்கள் உங்களிடத்திலே எதிர்பார்க்கிறார்கள். ஆகவே இலஞ்சத்தை ஒழிக்க எந்த அளவிற்கு இந்த அரசு தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறதோ அந்த அளவிற்குத்தான் நாம் போடுகிற திட்டங்கள், நாம் போடுகிற மக்கள் நலத் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரும் என்பதை இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

கிராமப்புறத்திலே வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு மருத்துவ வசதி கிடைக்க வேண்டுமென்று தமிழக முதல்வர் புரட்சித் தலைவி, செல்வி ஜெயலலிதா தலைமையில் ஒரு மருத்துவத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அந்த திட்டத்திலே அலோபதி மருத்துவர்கள் மட்டும் இடம் பெறுகிறார்கள். அந்த மருத்துவத் திட்டத்திலே ஹோமியோபதி, யுனானி, சித்தா, ஆயுர்வேதம் போன்ற பிரிவைச் சேர்ந்த மருத்துவர்கள் இடம் பெறாததன் காரணமாக அந்த மருத்துவத் திட்டத்தின் மூலமாக கிராமப்புறத்து மக்கள் முழுமையாகச் சிகிச்சையைப் பெற ஏதுவாக இருக்க முடியாது என்பதை இந்த நேரத்திலே என்னுடைய கருத்தாக நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதே நேரத்தில் மாவட்ட மருத்துவ மனைகள், வட்டார மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் ஒரு வருடத்திற்குப் போதிய அளவிற்கு முழுமையாக பாதுகாக்கப் பட்ட மருந்துகள் இருப்பது கிடையாது. இதனால் பொது மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே வட்டார, மாவட்ட மருத்துவமனைகளிலும், ஆரம்பச் சுகாதார நிலயங் களிலும் ஒரு வருடம் முழுமைக்கும் போதிய அளவிற்கு பாது காக்கப்பட்ட மருந்துகள் வழங்குகின்ற அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று, தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின் மூலமாக ஒவ்வொரு கிராம பஞ்சாயத்துகளிலும் இன்றைய தினம் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டு அந்த வேலைகள் நடைபெற்று வந்து கொண்டிருக் கின்றன. அதே நேரத்தில் பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில் வருமானம் அவர்களுக்குக் கிடையாது. பேரூராட்சி மன்றங்களிலே சம்பளம் போடுவதற்குக் கூட நிதி இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த திட்டத்தை, இந்த நிதி யாண்டில் பேரூராட்சி மன்றங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

கிறிஸ்துவக் கல்லூரி தாம்பரத்திலே இருந்து கொண்டிருக் கிறது. அந்தக் கல்லூரியின் நிர்வாகத்தினுடைய தகராறுகள் காரணமாக இன்றைய தினம் அந்தக் கல்லூரி மூடப்பட்டிருக் கிறது. 'மைனாரிட்டி' என்ற பெயரிலே அரசு மானியங்களைப் பெற்றுக் கொண்டு, இன்று தமிழகம் முழுவதும், கிறிஸ்துவ மதத்தைப், சேர்ந்தவர்கள் கல்வி ஸ்தாபனங்கள், கல்லூரிகள் போன்று பல ஸ்தாபனங்களை நடத்தி கொண்டிருக்கிறார்கள். அத்தகைய ஸ்தாபனங்களிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கிற முறை கேட்டின் காரணமாக, நிர்வாகச் சீர்கேட்டின் காரணமாக இன்றைய தினம் பல இடங்களில் பல தகராறுகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அதே நேரத்தில் தமிழகத்தைப் பொறுத்த வரையில் தமிழக அரசு 'மைனாரிட்டி' என்ற பெயரிலே

[திரு. எஸ். டேனியல்ராஜ்] [1992 ஜனவரி 30

இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவர்களின் கல்வி ஸ்தாபனங்களையும், சொத்துக்களையும் நிர்வாகம் செய்வதற்காக 'வக்ஃப் போர்ட்' என்ற வாரியத்தை வைத்திருக்கிறார்கள். அதே போன்று கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்களுடைய சொத்துக்களையும், கல்வி ஸ்தாபனங்களையும் பராமரிப்பதற்காக கிறிஸ்துவர்களுக்கு என்று ஒரு தனி வாரியம் அமைக்க வேண்டும் என்று இன்றைய தினத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-10

அதுபோன்று ஒரு முக்கியமான பிரச்சினை. அது மத்திய அரசை சேர்ந்த பிரச்சினையாக இருந்தாலும் கூட, மாநில மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினால் இந்தப் பிரச்சினையை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டு இருக்கின்றேன். 1982 ஆம் ஆண்டு, இன்றைய இந்திய நாட்டின் ஜனாதிபதி அவர்களும் தமிழகத்தின் முதல்வராக இருந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும், கலந்துகொண்டு, தூத்துக்குடி—திண்டுக்கல் கரூர் அகல இரயில் பாதைத் திட்டம் ஆரம்பிக்கப் பட்டது. அத்திட்டம் ஆரம்பிக்கப்படுகிற நேரத்திலே தூத்துக் குடியிலே இருந்து மதுரை வரையிலே இருந்துகொண்டிருக்கின்ற மீட்டர் கேஜ் இரயில் பாதையை அகற்றாமல் புதிதாக அகல இரயில் பாதை போடுவோம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் இரயில்வே போர்டு நிர்வாகம், தூத்துக்குடியிலிருந்து மதுரை வரையிலே இருக்கின்ற மீட்டர் கேஜ் இரயில் பாதையை அகற்றி விட்டு அகல இரயில் பாதையை மட்டும் போடுவோம் என்று முடிவு எடுத்து இருக்கிறது. இதன் காரணமாக தென்மாவட்டத்திலே இருந்து மதுரை வரைக்கும் அகல இரயில் பாதையிலே செல்ல வேண்டும். அதற்குப்பின் சென்னைக்குச் செல்பவர்கள் மதுரையிலே இறங்கி மீட்டர் கேஜ் இரயில் பாதைக்கு மாறவேண்டும். இப்படிப்பட்ட நிலைமையின் காரணமாக, தென்மாவட்டத்திலே இருக்கின்ற மக்கள் மிகவும் பாதிப்பு அடைவார்கள். எனவே, அகல இரயில் பாதையை தனியாகப் போட்டுவிட்டு, தற்போது இருந்து கொண்டிருக்கின்ற மீட்டர் கேஜ் இரயில் பாதையை அகற்றக் கூடாது என்று தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் மத்திய அரசை வலி-



1992 ஜனவரி 30] [எஸ். டேனியல்ராஜ்]

யுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே தென்மாவட்டத்தை சேர்ந்த மக்களின் சார்பாகக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. வி. பி. சந்திரசேகர்.

**திரு. வி. பி. சந்திரசேகர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், எங்களது இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, 1992 ஆம் ஆண்டுக்கான ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற நல்ல வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி கலந்த வணக்கத்தை நான் முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநரின் உரையானது, தமிழக அரசினுடைய நல்ல திட்டங்களின் செயல்பாடுகளுக்கும், செய்யப் போகின்ற நல்ல திட்டங்களுக்கும் வெற்றிக் கற்களாக, சாதனைக் கற்களாக அமைந்து இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

பொருளாதாரத்திலே சீர்கேடு நடந்து இருக்கின்ற இந்த நேரத்திலே அந்த சீர்கேட்டைச் சரி செய்து, ஒடுக்கப்பட்ட மக்களினுடைய நல்வாழ்வுக்காக தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்களுடைய அரசு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. அதற்குப் பாராட்டுத் தெரிவிக்கின்ற வகையிலே ஆளுநர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்ட வேண்டுமென்று சொன்னால், நடந்து முடிந்த காலங்களிலே சட்ட ஒழுங்குப் பிரச்சினை பற்றியும், காவிரி நீர்ப் பிரச்சினை பற்றியும், மதுவிலக்குப் பிரச்சினை பற்றியும் அவைகளின் மீது அவர்கள் எடுத்த முடிவுகளைப் பல்லாண்டுக் காலம், பல நூற்றாண்டுக் காலம் பாராட்டிக்கொண்டு இருக்கலாம் என்று சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பதினான்கு பேர்களைப் பட்டப் பகலிலே சுட்டுவிட்டு, இந்திய அரசியலுக்கு அப்பாற்பட்டு எல்லையைத் தாண்டுகிற அளவுக்கு எதிரிகளை விட்டு வைத்துக்கொண்டிருக்கிற இந்த நாட்டிலே இன்றைக்கு அவர்களை எல்லாம் ஒடுக்கி ஒரு அமைதிப் பூங்கா

[திரு. வி. பி. சந்திரசேகர்] [1992 ஜனவரி 30

வாக தமிழகத்தை ஏற்படுத்தி, அமைதியை நிலைநாட்டி இருக்கிற தமிழக முதல்வர் அவர்களுக்கு எத்தனை பாராட்டுக்கள் தெரிவித்தாலும் அது மிகையாகாது. அடிமைப்பட்டுக் கிடந்த தமிழகத்தின் காவல் துறைக்கு இன்றைக்கு சுதந்திரம் கொடுத்து இருக்கிறார்கள். அதன் மூலமாக சட்டஒழுங்குப் பிரச்சினைக்கு ஒரு நல்ல முடிவு எடுத்து இருக்கிறார்கள். அதுபோல காவிரிநீர்ப் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், அது ஒரு தொடர் கதையாக தமிழகத்திலே இருந்து கொண்டிருந்தது. அந்தத் தொடர் கதைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து இன்றைக்கு தமிழகத்திற்கு என்று ஒரு நிலையை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நடுவர் மன்றத் தீர்ப்பை மதிக்காத கர்நாடக அரசு, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையும் மதிக்காமல் இருந்த நேரத்தில், மைய அரசுக்கு அதை எடுத்துச் சொல்லி, இன்றைக்கு மைய அரசினுடைய இதழிலே அதை வெளிடச் செய்து இருக்கிற புரட்சித் தலைவி அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதுபோல மதுவிலக்கை எடுத்துக்கொண்டால் அதை புரட்சித் தலைவி அவர்கள் அமல்படுத்துகின்ற நோக்திலே பல்வேறுவிதமான கருத்துக்களை பல தலைவர்கள் எடுத்துச் சொன்னார்கள். மதுவிலக்கை எப்படிச் செயல்படுத்தப் போகிறார்கள் என்று கேட்ட நேரத்திலே, அவர்கள் பொறுப்பு ஏற்ற நேரத்திலே, பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டு இருக்கிறது என்று கூடப் பாராமல் கிட்டத்தட்ட 400 கோடி ரூபாய் இழப்புக்குப் பின்னாலும் அந்த மதுவிலக்கை அவர்கள் நடைமுறைப்படுத்தி இருக்கிறார்கள் என்று சொன்னால் அது, அவர்கள் ஏழைஎளிய மக்களின் மீது கொண்ட நல்ல எண்ணங்கள், ஏழை எளிய மக்கள் பயன் பெற வேண்டுமென்ற எண்ணங்கள் அவர்களுக்கு எவ்வளவு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

பிற்பகல் 12.15

பொதுவாக, மதுவிலக்கை ஏற்படுத்தியதன் மூலம் இன்றைக்கு கள்ளச் சாராயத்தை தமிழகத்தில் கட்டுப்படுத்தி இருக்கிறார்கள். எங்கள் கிராமப் பக்கங்களில் ஒரு பெரியவர் இறந்துவிடுகிறார் என்று வைத்துக்கொண்டால், அந்தப் பெரியவர் இறந்த நேரத்தில் அவர் தன்னுடைய வாழ்நாளில் எதையெதை அதிகமாகப் பயன்



1992 ஜனவரி 30] [திரு. வி. பி. சந்திரசேகர்]

படுத்தினாரோ, எவையெவைகளில் பிரியப்பட்டு ஆகாரமாக எடுத்துக்கொண்டாரோ, அப்படிப்பட்டவைகளை அவர் இறந்த தற்கு பிறகு அவருக்கு பக்கத்திலே வைத்து அடக்கம் செய்வது வழக்கம். எங்கள் பகுதியில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் அதிகமாக சாராயம் குடிப்பவர். அவர் இறந்ததற்குப் பின்னால் அந்த ஊரிலே இருக்கிற பெரியவர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து, இறந்து போனவர் தன்னுடைய ஆயுள்காலத்தில் அதிகமாக சாராயம் உட்கொண்டிருக்கிறாரே, அவரை அடக்கம் செய்கிற அவருக்குப் பக்கத்தில் கொஞ்சம் சாராயம் வைக்கவேண்டுமென்று முடிவெடுத்து, ஊரிலே எங்காவது சாராயம் கிடைக்குமா என்று தேடிப்பார்க்கச் சென்றார்கள். ஆனால் ஒருநாள் ஆகியும் கொஞ்சம்கூட சாராயம் கிடைக்காத நிலையில் அந்தப் பெரியவரை அடக்கம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டபோது, அந்த ஊர்காரர்களை எல்லாம் சமாதானபடுத்தி அதற்கு பின்னாலே தான் அடக்கம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் ஒரு சாஸ்திரத்திற்கு கூட, மருந்துக்கு கூட சாராயம் கிடைக்காத அளவுக்கு இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் நிலை ஏற்பட்டிருக்கிறது என்றால் (மேசையைத் தட்டும் ஒலி) அதை எந்த விதத்தில் பாராட்டுவது என்று எங்களுக்கு தெரியவில்லை.

இன்றைக்கு மத்திய அரசு எடுக்கிற சிக்கன நடவடிக்கைகள் காரணமாக ஏழையெளிய மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்ப தற்காக புரட்சித்தலைவி அவர்கள் மத்திய அரசுக்கு தன்னுடைய கருத்தாகச் சொல்லியிருப்பது, சிக்கன நடவடிக்கைகள் ஏழை யெளிய மக்கள் பயன்பெறுகிற திட்டங்களில் இருக்கக்கூடாது என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்படுகிற அரிசி யின் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. அப்படி அரிசியின் விலை உயர்த்தப்பட்டிருந்தாலும் கூட இன்றைக்கு தமிழகத்தில் வழங்கப் படுகிற சாதாரண ரக அரிசியினுடைய விலை ஏற்றப்படாமல் அதே விலைக்கு விநியோகம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், அப்படிப்பட்ட அரிசியை வாங்குகிற மக்கள் ஏழையெளிய மக்கள் என்பதை உணர்ந்து அந்த அரிசியின்

[திரு. வி. பி. சந்திரசேகர்] [1992 ஜனவரி 30

விலையை ஏற்றாமல் இருக்கிற முதல்வர் அவர்களுக்கு எத்தனை பாராட்டுக்கள் கொடுக்க வேண்டுமோ அத்தனை பாராட்டுக்களை கொடுக்க தமிழக மக்கள் தயாராக இருந்துகொண்டிருக்கிறார்கள்.

இன்றைக்கு பல்வேறு சிக்கலான பொருளாதார நிலையிலும் கூட இலவச வேஷ்டி சேலைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் இந்த இலவச வேஷ்டி சேலைகளை வழங்காமல் கூட இருக்கலாம். ஆனால் இந்த இலவச வேஷ்டி சேலைகளை கண்டிப்பாகக் கொடுக்கிறார் என்று சொன்னால் அதனால் பயனடைகிற மக்கள் ஏழையெளிய மக்கள் என்பதை உணர்ந்து கிட்டத்தட்ட ரூ. 41.56 கோடி ரூபாய் அளவுக்கு இந்தத் திட்டத்தை செயல்படுத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை எந்தவகையில் பாராட்டுவது என்று எனக்கு தெரியவில்லை.

மத்திய அரசினுடைய முதலீடு 1969-ஆம் ஆண்டில் 10 சதவீதமாக இருந்தது. அது 1989—1990-ஆம் ஆண்டில் பாதியாகக் குறைந்து 5 சதவீதமாக மாறிவிட்டது. வருகிற ஆண்டுகளில் இன்னும் கூட குறைவாக இருக்கும் என்று பொருளாதார மதிப்பீட்டு மையம் அறிவித்து இருக்கிறது. மத்தியிலே அன்னை இந்திராவின் ஆட்சி வரவேண்டுமென்றும், மத்தியிலே அமரர் ராஜீவ் காந்தி அவர்களின் ஆட்சி வரவேண்டுமென்றும் எப்படி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பாடுபட்டார்களோ, அப்படிப்பட்ட ஒரு நிலையில் இங்கே அவர்கள் தோளோடு தோள் நின்று செயலாற்றியவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள். அப்படிப்பட்ட ஒரு

பிற்பகல் 12-20

அரசாங்கம் இங்கே நடக்கின்ற நேரத்திலே, மத்தியிலே இன்றைக்கு நடக்கின்ற ஆட்சி எங்கள் ஆட்சி என்று நாங்கள் சொல்கின்ற நேரத்திலே, மாநிலத்திலே இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக்கு, அந்த ஆட்சி நடக்கின்ற தமிழகத்திற்கு ஏன் மத்திய அரசு முதலீடு செய்து இங்கே தொழில்களைத் தொடங்கக் கூடாது என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1992 ஜனவரி 30] [திரு. வி. பி. சந்திரசேகர்]

அதேபோல் இன்றைக்கு நெய்வேலியிலே மூன்றாவது சுரங்கம் வெட்டுகின்ற வேலைக்கும், தென் மாநிலங்களுக்கு எரிவாயு கொண்டு வருகின்ற அந்த குழாய்களை அமைக்கின்ற வேலைக்கும், எண்ணூர் துணைத் துறைமுகத் திட்டத்திற்கும், மணலியிலே தேசிய அரோலேமட்டிக் தொழிற்சாலைத் திட்டத்தை தொடங்குவதற்கும், தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிப் பாதைகளாக மாற்றுவதற்கும், இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த அரசு வலியுறுத்தி அவற்றைப் பெறவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் நாட்டிலே புயல், வெள்ளம், தென் மேற்குப் பருவ மழையும், வடகிழக்குப் பருவமழையும் அதிகமாகப் பெய்ததன் காரணமாக, இன்றைக்கு பல்வேறு அணைக்கட்டுகளிலே நீர் நிரம்பி, வழிந்தாலும் கூட, வடக்கு மாவட்டங்களிலே மழை அதிகம் ஏற்பட்டு, அதற்குப் பின்னாலே இயற்கையினுடைய சீற்றம் காரணமாக, புயல் ஏற்பட்டு..... (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

**திரு. வி. பி. சந்திரசேகர் :** விவசாயப் பயிர்கள் அழிந்ததற்குப் பின்னால், இன்றைக்கு அரசாங்கம் 30 கோடி ரூபாயை உழவர்களுக்கு நிதியாக உதவி இருக்கிறார்கள். அப்படி இருக்கின்ற நேரத்திலே தமிழகத்தினுடைய மேற்கு மாவட்டங்கள், குறிப்பாக கோவை மாவட்டத்திலே பொள்ளாச்சிப் பகுதியிலே பல ஆண்டுக் காலமாக மழை பெய்யாததன் காரணமாக, அங்கே வறட்சி நிலவிக் கொண்டு இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கின்ற கிராம மக்கள், இன்றைக்குக் குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாமல் பல மைல்களுக்கு நடந்து செல்கின்ற அவல நிலையைப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். அந்தப் பகுதியிலே இருக்கின்ற தென்னை மரங்கள் காய்ந்து விழக்கூடிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கின்றன. 1967 ஆம் ஆண்டு முதற்கொண்டு, இன்றைக்கு வரை அப்படிப்பட்ட சோதனையான நேரத்திலே எல்லாம், வறட்சியான நேரத்திலே எல்லாம் எங்களுக்கு உயிர்த் தண்ணீர் கொடுத்து அரசாங்கம் உதவிக் கொண்டு இருந்தார்கள்.

[திரு. வி. பி. சந்திரசேகர்] [1992 ஜனவரி 30

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையிலே அந்தத் தென்னை மரங்கள் எல்லாம் காய்ந்து போகிற நிலைமை இருக்கிறது. அங்கே இருக்கின்ற குடிமக்களுக்கு குடிப்பதற்குக் கூட தண்ணீர் இல்லாத நிலைமையிலே இன்றைக்கு உங்களை உயிர்த் தண்ணீரை கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களுடைய கோரிக்கையை ஏற்று, இன்னும் ஒரு சில தினங்களுக்குள்ளாகவே, உயிர்த் தண்ணீரைக் கொடுக்கவேண்டும். அப்போதுதான் அங்கே காய்ந்து கொண்டிருக்கிற தென்னை மரங்களைக் காப்பாற்றுவதற்கும், குடிநீருக்காக பல மைல்கள் நடந்து செல்கின்ற மக்களுடைய குறைகளைப் போக்குவதற்கும் ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், தமிழக அரசு அறிவித்திருக்கிற மூன்று தொழில் வளர்ச்சி மையங்கள். நாகப்பட்டினம் காயிதே-மில்லத் மாவட்டத்திலே பனங்குடியிலேயும், பெரியார் மாவட்டத்திலே பெருந்துறையிலே அமைய இருக்கின்ற அந்தத் திட்டத்திற்கும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டத்திலே கங்கைகொண்டானிலே தொடங்கப்பட இருக்கிற அந்த மையத்திற்கும், புதிதாக தொடங்கப்பட்டு இருக்கிற அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட இருக்கின்றன என்று அறிவித்திருக்கிறார்கள். இது உண்மையிலே பாராட்டத் தகுந்த விஷயமாக அமைந்திருக்கிறது.

அதேபோல் ஜெயங்கொண்டசோழபுரத்திலே நிலக்கரி வெட்டுவதன் மூலமாகவும், கடந்த ஆளுநர் உரையிலே குறிப்பிட்டதைப் போல, மின்சார உற்பத்தியைத் தனியாருக்குக் கொடுக்கின்ற வகையிலே இன்றைக்கு 7 ஆயிரம் கோடி ரூபாயில் புதிய திட்டத்தை ஏற்படுத்தி, 1,500 மெகாவாட் மின்சாரத்தைக் கொடுக்க இருக்கிறார்கள். அதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய இசைவு வேண்டும் என்று கேட்டு இருக்கிறார்கள். அந்த இசைவைப் பெறுகின்ற தமிழக அரசுக்கு, தமிழக மக்கள் என்றைக்கும் ஆதரவாக இருப்பார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல், இன்றைக்கு மக்கள் நல்வாழ்வுப் பணிகள். கிராமப்புறத்தினுடைய கடைக்கோடியில் இருக்கின்ற மக்களுக்கு



1992 ஜனவரி 30] [திரு. வி. பி. சந்திரசேகர்]

மருத்துவ வசதி வேண்டும் என்பதற்காக, வருகின்ற 6 மாத காலத்திலே கிட்டத்தட்ட 10 ஆயிரம் இடங்களிலே மருத்துவ முகாம்கள் அமைக்க இருக்கிறார்கள். அதன் தொடக்கமாக, கடந்த சில தினங்களுக்கு முன்பாக தமிழகத்தினுடைய பல்வேறு இடங்களிலே இந்த மருத்துவ முகாம்கள், 'புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம்' என்ற பெயராலே நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது. இந்தத் திட்டத்தின் மூலமாக ஏழை எளிய மக்கள் பயன் அடைகிறார்கள். மருத்துவ சோதனைகளுக்கு உட்பட்ட மக்களுக்கு அரசின் மூலமாகவும், தொண்டு நிறுவனங்கள் மூலமாகவும், மருந்து தயாரிப்பாளர்கள் மூலமாகவும், வணிகர்கள் மூலமாகவும், தனியார் மருத்துவர்கள் மூலமாகவும் மருந்துகளைப் பெற்று மருத்துவ சிகிச்சையைப் பெறுகின்ற அந்த மக்களுக்கு மருந்துகளைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் கிராமங்களிலே இருக்கின்ற மக்கள், உடல் நலத்தோடு வாழ வேண்டுமென்கின்ற ஒரு நல்ல நோக்கத்தோடு அரசு செய்திருக்கின்ற இந்த காரியங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 12.25

அதே போன்று ஓராசிரியர் பள்ளிகளிலே மற்றுமொரு ஆசிரியரை நியமிக்கப் போகின்றோம் என்கின்ற அரசினுடைய அறிவிப்பு வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்களுக்கு, படித்தவர்களுக்கு, வேலை வாய்ப்பு கொடுப்பதாக அமைந்திருக்கின்றது.

அதே போன்று ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஒரு லட்சம் பேர்களுக்கு, பெண்களுக்கு சுய வேலை வாய்ப்பு கொடுக்கின்ற ஒரு திட்டத்தை இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். இது மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு மட்டுமல்லாது. தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுவதாக அறிவித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை பெண்களுக்கு என்று இருக்கின்ற ஒரு திட்டத்தை அறிவித்திருக்கின்ற தமிழக அரசிற்கு எங்களுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

[திரு. வி. பி. சந்திரசேகர்] [1992 ஜனவரி 30

அதே போன்று நிலப் பதிவேட்டுத் திட்டம். இன்றைக்கு நிலப் பதிவேட்டுத் திட்டத்தின் மூலமாக பட்டா பாஸ் புத்தகத்தை வழங்கியிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலே இருக்கின்ற மக்கள், தங்களுடைய நில உடமைகளை சரிபார்த்துக் கொள்வதற்காகவும், அந்த நிலங்களிலே கடன் பெறுவதற்காகவும் இப்படிப்பட்ட பாஸ் புத்தகங்கள் உதவுகின்றன என்பதை இந்த நேரத்தில் நாங்கள் பெருமையோடு சொல்லிக்கொள்கிறோம்.

ஆயிரம் பேர்களுக்கு பஸ் வசதி என்கின்ற அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு ஆறு மாத காலத்திற்குள்ளாகவே பல தொகுதிகளிலே பஸ் போக்குவரத்திலே ஒரு நிறைவு ஏற்பட்ட நேரத்திலே, விட்டுப் போன ஒரு சில பகுதிகளுக்கும், ஆயிரம் பேர்களுக்கு இருந்தால், அந்தப் பகுதிகளுக்கும் பஸ் விடுகின்றோம் என்கின்ற அரசின் அறிவிப்பு உண்மையிலேயே தமிழக மக்களுக்கு ஒரு பெரு மகிழ்ச்சியாக அமைந்திருக்கின்றது.

அதே போன்று குடிதண்ணீர் வசதி. வருகின்ற மார்ச் மாதத்திற்குள்ளாகவே தமிழகத்திலே இருக்கின்ற அத்தனை மக்களுக்கும், அத்தனை கிராமங்களுக்கும் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்போம் என்கின்ற அறிவிப்பு, அறிவிக்கப்பட்ட திட்டங்களிலே மிகச் சிறந்த திட்டமாக தமிழக மக்கள் அனைவரின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெறுகின்ற திட்டமாக அமைந்திருக்கிறது. இன்றைக்கு இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை அறிவித்து, அதே போன்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் கூட்டுறவு சங்கங்களுடைய தேர்தலைப் பற்றி அறிவித்திருக்கிறார்கள். இந்த தேர்தல் வருகின்ற மே மாதத்திற்குள்ளாக நடக்கும் என்று அறிவித்திருக்கிறார்கள். அரசாங்கம் அறிவித்தது போல் அதிலே இருக்கின்ற உண்மையான உறுப்பினர்களை வைத்து—அது தான் இதிலே மிக முக்கியமான கட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. கூட்டுறவு சங்கத் தேர்தலில் உண்மையான உறுப்பினர்களை வைத்து, தேர்தலை நடத்துவோம் என்று அரசு அறிவித்திருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல திட்டத்திற்காக எங்களுடைய பாராட்டுதல்களை தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே இப்படி ஆளுநர் உரையிலே பல்வேறு நல்ல திட்டங்களை, அரசினுடைய நலத் திட்டங்களை இன்றைக்கு இருக்கின்ற தமிழக அரசினுடைய சாதனைப் பட்டியலாக வெளி-



1992 ஜனவரி 30] [திரு. வி. பி. சந்திரசேகர்]

யிட்டிருப்பதாக நாங்கள் மிக மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு, அதிலே கலந்துகொண்டு பேசுகின்ற நல்வாய்ப்பு கொடுத்தமைக்காக மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 10 நிமிடங்களில் பேசி முடிக்குமாறு மாண்புமிகு உறுப்பினரை கேட்டுக்கொள்கிறேன். திரு. ஆர். ஈஸ்வரன்.

**திரு. ஆர். ஈஸ்வரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஜனவரித் திங்கள் கவர்னருடைய உரைக்கு நன்றி கூறி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் குடிநீரைப் பற்றியும், விவசாயிகளைப் பற்றியும் நல்ல பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும் தமிழ்நாட்டினுடைய மக்களுக்கு . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இடதுபுறம் உள்ள லாபியில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் உரத்த குரல் கொடுத்து பேசிக் கொண்டிருக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். காவலர்கள் அவர்களுக்கு இந்தத் செய்தியை சென்று சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12.30

**திரு. ஆர். ஈஸ்வரன்** : இரு தினங்களுக்கு முன்னால் மாண்புமிகு முதல்வர் அவர்களும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், தமிழகத்தில் இருக்கக் கூடிய அனைத்து விவசாயிகளுக்கும், கரும்பு உற்பத்தியாளர்களுக்கும் டன் ஒன்றுக்கு ரூ. 20-ஐ கூடுதலாக அறிவித்தார்கள். இன்று வட மாவட்டங்களில் மழை கடுமையாக பெய்து வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தென் மாவட்டங்களில், காமராசர் மாவட்டம், நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், சிதம்பரனார் மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம் போன்ற மாவட்டங்கள் கடுமையான வறட்சிக்கு உள்ளாகி மகசூல் எல்லாம் இப்பொழுதே பட்டுப்போய் குடிதண்ணீர் பிரச்சினை கூட

ஏற்படும் அளவிற்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தியாவில் ஒட்டுமொத்தமாக கரும்பை உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளுக்கு 'பர்ச்சேஸ் டாக்ஸ்' என்று ஒரு டன்னுக்கு சில மாநிலங்களில் 25 ரூபாய்க்கும் அதற்கு கீழும் பிடித்தம் செய்யப்படுகிறது. அதேநேரத்தில் சில மாநிலங்களில் அந்த பர்ச்சேஸ் டாக்ஸ் இல்லாமலேயே அந்த விவசாயிகளுக்கு ஊக்கச் சலுகை வழங்கப்படுகிறது. ஆனால் தமிழ்நாட்டில் மட்டும் ஒரு டன்னுக்கு 30 ரூபாய் கரும்பை உற்பத்தி செய்யும் விவசாயிகளிடமிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. ஆகவே அதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் வேளாண்மை துறை அமைச்சர் அவர்களும் மாநில அரசுக்கு என்று 20 ரூபாய் அல்லது 30 ரூபாய் என்று பிடித்துக் கொண்டு—ஒரு 30 ரூபாயாவது டன் ஒன்றுக்கு ஊக்கத் தொகையாக கொடுத்தால் தமிழகத்தில் இருக்கக் கூடிய விவசாயிகளுக்கு அது ஊக்கமாக இருக்கும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

விவசாயிகள், உற்பத்திக்காக இடக்கூடிய உரங்கள் விலை கூடிவிட்டன. விவசாயிகளுடைய கூலியும் நாளுக்கு நாள் கூடிவிட்டது. ஆகவே, அவற்றை மனதில் கொண்டு, நீங்கள் இதை ஒரு மறுபரிசீலனை செய்து, தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அதை ஊக்கத் தொகையாக கொடுத்தால் நல்லமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

அதேநேரத்தில் நெடுஞ்சாலைகளைப் பொறுத்த வரையில் என்னுடைய தொகுதியில், என்னுடைய தொகுதி மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கிற அனைத்து யூனியன்களுக்கும் தன்னிறைவுத் திட்டம் என்ற பெயரால் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நெடுஞ்சாலைகளுக்கு இல்லை, ஒவ்வொரு யூனியன்களுக்கும் ரோடுகளுக்கு மட்டும் அந்த நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். நெடுஞ்சாலைகள் ரொம்ப மோசமாக இருக்கின்றன; நம்முடைய பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சரிடம்கூட நேரிடையாக மனுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்கவும். இன்றைக்கு





நம்முடைய ஆளுநர் உரையிலே நெடுஞ்சாலைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்றதற்கு பின்னாலே என்னென்ன காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். 'பேட்செக்டார்ஸ்' என்று சொல்லப்படுகின்ற பழுதடைந்த சாலைகளை சீரமைப்பதற்காக உடனடியாக 30 கோடி ரூபாயை ஒதுக்கி, அத்தோடு மெயின்டெனன்ஸ் கிராண்ட் என்று சொல்லப்படுகிற அந்த பராமரிக்கிற நிதியோடு சேர்த்து அதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் தமிழகத்திலே கோரப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன, என்பதை உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். அதற்குப் பின்னாலே நெடுஞ்சாலைத் துறையை பொறுத்த மட்டிலே நாம் இந்த ஆண்டு எவ்வளவு கேட்டிருக்கிறோமோ அத்தனையும் ஒதுக்கப்படுவதாக இன்று ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள்.

கடந்த கால வரலாற்றில் இதுவரை கேட்பதில் பாதியைத் தான் கொடுப்பார்கள் எந்த பட்ஜெட்டிலும். ஆனால் இந்த ஆண்டு பட்ஜெட்டைப் பொறுத்த வரையிலே நம்முடைய ஆளுநர் உரையிலே சொல்லியிருப்பதைப்போல அதிகமான தொகையை, இந்த ஆண்டு எந்த அளவுக்கு சீர்படுத்த முடியும் என்று நினைத்து நாம் கேட்டிருக்கிறோமோ, அந்தத் தொகையை நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள், என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே இந்த இரண்டாண்டு காலத்திலே ஏற்கெனவே நடைபெறாத, சாலைப் பணிகள் நம்முடைய ஆட்சியிலே சீர்படுத்தப்படும் என்பதை நான் இங்கே மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ஆர். ஈஸ்வரன் தொடர்ந்து பேசலாம்.

பிற்பகல் 12.35

**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில

தமிழகம் முழுவதுமாக நெடுஞ்சாலையில் இருக்கக்கூடிய பாலங்கள்—என்னுடைய தொகுதியை பொறுத்த மட்டிலேயே ஆறு பாலங்கள் முக்கியமாக கட்ட வேண்டியிருக்கிறது. அந்த ஆறு பாலத்திற்கும் நான் நெடுஞ்சாலைத் துறை கோட்டப் பொறியாளர்களிடம் கேட்கும்போது, அதற்கு மட்டும் மதிப்பீடு சுமார் ரூ. 1 கோடியே 20 லட்சம் தேவைப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது ஒரு கிராமத்தை விட்டு ஒரு கிராமம்—நாடு சுதந்திரம் அடைந்து 43 ஆண்டுகளாகியும் இன்னும் ஒரு கிராமத்தை விட்டு ஒரு கிராமம் போக முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஜனவரி 9-ந் தேதி நீங்கள் அந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுக்கவில்லை என்றால் பஸ் மறியல் போராட்டம் என்று அறிவித்து . . .

**மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்:** துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கைகளைப் பற்றி தொகுதிப் பிரச்சினைகளைப்பற்றி இங்கே பேசிக் கொண்டிருந்தால் ஒவ்வொருவருக்கும் காலதாமதம் ஏற்படும். தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவர்னர் உரையின் மீது இருக்கின்ற விவாதங்களைச் சொன்னால் நன்றாக இருக்கும். ஒவ்வொரு துறையிலும் இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்ய வேண்டும், என்னுடைய தொகுதிக்கு என்று வைத்துக்கொண்டிருந்தால் கவர்னர் உரையின் மீது அவர்கள் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்ல முடியாமல் போகும் என்பதை அவருடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**திரு. ஆர். ஈஸ்வரன்:** துணைத் தலைவர் அவர்களே தொகுதியிலே ஓட்டு போட்ட மக்கள் சட்டமன்ற உறுப்பினர் தன்னுடைய தொகுதியைப் பற்றி பேசினார், தொகுதியில் உள்ள குறைகளைப்பற்றி பேசினாரா, அங்கே போய் என்ன பண்ணுகிறார் என்று தான் கேட்கிறார்கள். மக்களை எவ்வளவு நாளைக்குத் தான் ஏமாற்றுவது? போன தேர்தலிலே சொன்னோம், இந்தத் தேர்தலிலே இப்பவும் நடக்கவில்லை என்று ஜனவரி 9-ந் தேதி ரோடு சரியில்லை, பாலம் சரியில்லை என்று





பஸ் மறியல் போராட்டம் என்று வைத்தார்கள். நானே நேரடியாகப் போய் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரிகள், அனைத்து நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் மற்றும் அமைச்சரிடம் சொல்லி இந்த 6 பாலத்திலே இரண்டு பாலமாவது எப்படியாவது வாங்கித் தருகிறேன் என்று நானே நேரடியாகப் போய் அவர்களை சமாதானம் செய்தேன். அப்படி நீங்கள் செய்யவில்லை என்றால் நீங்கள் தான் தலைமைத் தாங்கி போராட்டம் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். பிரச்சினைகளை நான் நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். உங்களிடமும் நான் நேரடியாகக் கொடுத்திருக்கிறேன். ஜனவரி 9-ந் தேதி இரண்டு பாலத்தை கோரிக்கையாக வைத்து பஸ் மறியல் போராட்டம் என்று வைத்தார்கள். மக்களுடைய பிரதிநிதியாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே இருக்கக்கூடிய கஷ்டத்தை உணர்ந்து மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு நான் இதை தெளிவாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேரவைத் தலைவரைப் பார்த்து பேச வேண்டும்.

**திரு. ஆர். ஈஸ்வரன்:** அதே நேரத்தில் நீங்கள் இப்போது மது விலக்கு பிரச்சினையைப் பற்றிச் சொன்னீர்கள். மது விலக்குப் பிரச்சினை எங்கள் மாவட்டத்தில் எல்லாம் முழுமையாக நடக்கிறது என்று சொல்ல முடியாது. நான் உள்ளதைத்தான் சொல்கிறேன். 75 சதவிகிதம் இன்னும் கள்ளச் சாராயம் விற்றுக்கொண்டு தான் இருக்கிறார்கள். அதற்கு கோர்ட் அபராதம் 150 ரூபாய் 200 ரூபாய்க்கு உட்பட்டிருக்கிறது. இதனால் அங்கே இருக்கக்கூடிய காவல் துறை அதிகாரிகள் எவ்வளவு தான் கள்ளச் சாராயப் பானைகளை அடித்து நொறுக்கினாலும், மறுநாள் வெளியிலே வந்தவுடனே 150 ரூபாய் 200 ரூபாய் அபராதத்தை சாதாரணமாகக் கட்டுகிறார்கள். மறுநாளே இந்தத் தொழிலை ஆரம்பிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே தண்டனையைக் கொஞ்சம் கூடுதலாக்கினால்தான் சரியாக இருக்கும். அவர்கள் திருந்துவார்கள். நிதிப் பற்றாக்குறை என்று சொல்கிறீர்கள். எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்வார்.

**திரு. ஆர். ஈஸ்வரன் :** இந்த நிலைமைகள் எங்களுடைய மாவட்டத்திலே இல்லை. தென் மாவட்டங்களில் தான் அந்த மாதிரி நிலைமைகள் இருக்கின்றன. ஏனென்றால் அங்கே சோஷியல் பாரஸ்ட் இருக்கிறது. ரெகுலர் பாரஸ்ட் இருக்கிறது. மலையடிவாரத்தில் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. பாரஸ்ட்டில் விறகு கிடைக்கிறது. வேலம்பட்டை கிடைக்கிறது. வெல்லம் ரொம்ப சீப்பாகக் கிடைக்கிறது. இவைகளை எல்லாம் வைத்து அங்கேயே அந்த சாராயத்தை சீப்பாக உற்பத்தி செய்கிறார்கள். (சிரிப்பு) ஆகையினால் அவர்களை பிடிப்பதற்கு நீங்கள் எப்படி காவல் துறைக்கு உத்திரவு கொடுத்திருக்கிறீர்களோ அது போன்று வன இலாக்காவிற்கும் உத்தரவு கொடுக்க வேண்டும். அவர்கள் பெரிய பெரிய பேரல்களை வைத்து பாரஸ்டிற்குள்ளேயே இந்தத் தொழிலைச் செய்கிறார்கள். அப்படிச் செய்யும்போது வனங்களும் அழிக்கப்படுகிறது. போலீஸ் போய் உள்ளே ஒன்றும் பிடிக்க முடியவில்லை. சோஷியல் பாரஸ்ட், ரெகுலர் பாரஸ்ட்டில் உள்ளவர்கள் அங்கே போய் இரண்டு பாட்டில்கள் சாப்பிட்டுவிட்டு அங்கே இருக்கக் கூடிய மிருகங்களை வேட்டையாடி சாப்பிடுவதற்கு ஏதுவாக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் எங்கெங்கே நடைபெறுகிறது என்று குறிப்பிட்டு அரசுக்கு புகார் அனுப்பினால் அதற்கு நடவடிக்கை எடுப்பார்கள்.

**திரு. ஆர். ஈஸ்வரன் :** நீங்கள் வேண்டுமானால் என்கூட வாருங்கள். அல்லது யாரை வேண்டுமானாலும் அனுப்புங்கள். உண்மை நிலவரத்தைக் காட்டுகிறேன். அதிலே ஒன்றும் தவறு இல்லை. ஆகையினால் நீங்கள் அதைத் துரிதமாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுவரை அது போல





ஒரு எண்ணம் இல்லாதவனைக் கூட அந்தப் பகுதியிலே இருப்பவர்களுக்கு சுலபமாக இதெல்லாம் கிடைக்கிறது போய் செய் என்று சொல்வதைப் போல, ஒரு விளம்பரப்படுத்துவதைப் போல, ஒரு உணர்வு ஏற்படுகின்ற வகையிலே சொல்லியிருக்கிறார்கள். அநேகமாக பத்திரிகையிலேயும் சரி மற்ற எல்லா வகையிலேயும், எல்லா இடங்களிலும் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே ஏற்கனவே சொன்னபோது கூட காவல்துறை அதிகாரிகளே சொன்னார்கள், பாரஸ்டு ஓரங்களிலே இதை கொஞ்சம் கட்டுப்படுத்துவது சிரமமாக இருக்கிறது என்று சொல்லி அந்த பாரஸ்டு அதிகாரிகளையும் இதிலே சேர்த்துக் கொள்ளவேண்டும். அவர்களும் இந்தக் தகவல் கிடைத்தால் சொல்லவேண்டுமென்ற ஒரு உத்தரவைக் கொடுத்து இருக்கிறார்கள். எனவே குறிப்பிட்ட ஒரு இடத்தை சொல்ல வேண்டுமே ஒழிய நெல்லை மாவட்டம் முழுவதும் இப்படி இருக்கிறது, நான் அழைத்துப் போகிறேன் என்று சொல்லுவது அவ்வளவு நன்றாக தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. டேனியல் ராஜ் அவர்கள் பேசும்போது 80 விழுக்காடு [illegible] ஒழிக்கப்பட்டு விட்டது என்று பேசியிருக்கிறார்கள். மீதி 20 விழுக்காடு உங்கள் பகுதியில் இருக்கிறது என்று நீங்கள் ஒப்புக்கொண்டால்; நீங்கள் இதை குறிப்பிட்டு எழுதிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. எல். ஆர். பாலசுப்ரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது அந்த கொள்கையை ஒப்புக்கொண்டு நடவடிக்கைகளை வரவேற்று இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நடைமுறையில் இருக்கிற பிரச்சினைகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். தண்டனைக்கு அஞ்சுகின்ற வகையில் தண்டனை அமையவேண்டுமென்று சொன்னார்கள். டிட்டரண்டு பனிஷ்மெண்டு வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது தண்டனை குறைவாக இருக்கின்ற காரணத்தால் இந்த சமூக விரோத குற்றத்தில் ஈடுபடுபவர்கள் வெளியே வந்தவுடன்

மீண்டும் அந்தக் கள்ளச் சாராயத்தைக் காய்ச்சுகின்ற பணியில் ஈடுபடுகின்ற காரணத்தால் அவர்களுக்கு அதிகமான தண்டனை வழங்கவேண்டுமென்ற நோக்கத்தோடு சொன்னார்களே ஒழிய, குறை காணவேண்டுமென்ற நோக்கம் இல்லை. பொதுவாக காட்டுப் பகுதிகளில் இதுபோன்ற கள்ளச் சாராயம் காய்ச்சுகின்ற வேலைகள் நிறைய நடைபெறுகிறது என்று எடுத்துச் சொன்னார்களே தவிர குறை காணவேண்டுமென்பது அவருடைய நோக்கம் அல்ல. சுட்டிக்காட்டியிருக்கிறார், நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்துக்கள் எல்லாம் சரிதான். அதிலே ஆட்சேபனைக்குரிய விஷயங்கள் எதுவும் இல்லை. ஆனால் அவர் சொல்லுகிறபோது குறிப்பிட்டு இந்த இடங்களிலே காய்ச்சுகிறார்கள் என்று சொன்னால் இந்த செய்தி நாளைக்கு வெளியே வந்தவுடன் அதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்துவிடுவார்கள். ஆகவே, கள்ளச் சாராயம் காய்ச்சுகின்றவர்களைப் பிடிப்பதற்கு உதவுகின்ற வகையில் அது எங்கெங்கே காய்ச்சப்படுகின்றது என்ற விவரங்களைச் சொன்னால் அல்லது எங்களிடத்திலே, அரசிடத்திலே, தெரிவித்தால் கூட உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு சாத்தியமாக இருக்கும்.

**திரு. ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரின் இறுதியில் நான் கூட போனேன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடமும் 17-வது வார்டு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கிளைக் கழகச் செயலாளர் அவர்கள் லெட்டர் மூலமாக குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் உங்களிடமும் நேரடியாகக் கொடுத்து இருக்கிறேன். அதேபோல் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களிடமும் அவருடைய வீட்டில் நேரடியாக சில குறிப்புகளை கொடுத்திருக்கிறேன்.



ஆகவே இன்னும் வேண்டுமானால் சம்பந்தப்பட்ட குறிப்புகளை நான் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன். நான் சொல்லுவதில் ஒன்று கூட பொய் இல்லை. உண்மையை நான் அப்படியே சொல்கிறேன். ஆகவே, அந்தத் திட்டத்தை முழுமையாக அமல் படுத்தவேண்டுமென்று நான் சொல்லுகிறேன். அதற்கு தண்டனை சரியாக இருக்க வேண்டும். சரியாக இருந்தால் தான் தவறுகள் நீடிக்காது என்று அந்த உண்மையை நான் சொல்லுகிறேன்.

அடுத்து நீங்கள் இப்போது சத்துணவுத் திட்டத்தைப் பற்றி சொல்லியிருக்கிறீர்கள். ஆதி திராவிட மக்களுக்கு 100 சதவீதம் என்று இருந்ததை 75 சதவீதமாகவும்; மற்ற பொதுவானவர்களுக்கு 50 சதவீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது என்று. இந்த 50 சதவீதம், 75 சதவீதம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறைக்கப்பட்டிருக்கிறது என்று தவறான தகவலை சபைக்கு தந்து கொண்டிருக்கிறார்கள். இதுவரை அதிலே ஏற்பட்டு இருந்த ஊழல்களை நிறுத்துகின்ற வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்த் துறையைச் சேர்ந்த அதிகாரிகள்; சமூகநலத்துறையைச் சேர்ந்த அதிகாரிகள் இவர்கள் எல்லாம் போய் ஒரு மாஸ் ரெவியூ எடுத்து அதன் மூலமாக உண்மையிலேயே எவ்வளவு குழந்தைகள் வருகிறார்கள் என்ற எண்ணிக்கையை கணக்கெடுத்து சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் எவ்வளவு குழந்தைகள் வருகிறார்களோ அதைவிட 20 சதவீதம் அங்கே கூட வைத்து அந்த நிர்ணயத்தை பிக்ஸ் செய்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு துணைத்தலைவர் மூலமாக தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். ஈஸ்வரன்.

ன் பிற்பகல் 12-45

**திரு. ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி

ஏற்கனவே முன்பு பேசியிருக்கிறேன். மறைந்த முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் கூட என்னுடைய வாசுதேவநல்லூர் தொகுதியில் 60 சத்துணவுக் கூடங்கள் இருந்தன. வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் எனக்கு முன்பு பேசிய திரு. எஸ். ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் அவர்கள் பாராட்டிப் பேசினார்கள். நான் அப்போது உண்மையைச் சொன்னேன். இரண்டு வாரமாக 60 சத்துணவுக் கூடங்களுக்கும் சென்று பார்த்தேன், சத்துணவுக் கூடத்திற்கு 100 பிள்ளைகள் இருந்தால், வருகைப் பதிவேட்டில் 100-ம் பதிவு செய்யப்பட்டிருக்கும். ஆனால் அங்கே 25 பிள்ளைகள்தான் இருப்பார்கள். 100 பிள்ளைகளுக்கு இருக்கக்கூடிய பருப்பு, அரிசி, பாமாயில், அதற்குரிய காய்கறி போன்றவற்றுக்கான பணம் அப்படியே எடுக்கப்பட்டிருந்தன. இதை, முழுமையாக நான் பார்த்ததை, அந்த உண்மையை அப்படியே பேசினேன். 70 சதவீதம் தப்பு இருக்கிறதென்று நான் பேசியவுடனே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மறுநாளே ஒரு உத்தரவு போட்டு, ஒரே நாளில், 12 மணிக்குள் உத்தரவு போட்டு, 60-இல் 50 சத்துணவுக் கூடங்களில் தப்பு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. 40 பேரை சஸ்பெண்ட் செய்தார்கள். அந்த நிலைதான் இப்போதும் இருக்கிறது. இதை நான் ஒரு உதாரணத்திற்குத்தான் சொல்கிறேன். ஒரு ஆண்டுக்கு 350 கோடி ரூபாய்க்கு மேல் மக்களுடைய வரிப்பணத்தை செலவு செய்கிறோம். சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் அதை நிறுத்தம் செய்தால் அரசாங்கத்திற்கு பல கோடி ரூபாய் கிடைக்கும். அதே நேரத்தில் பணக்கார வீட்டுப் பிள்ளைகள் இந்த சத்துணவுச் சாப்பாட்டை, ஆகாரத்தை சாப்பிடுவதில்லை. அங்கே இருக்கக்கூடிய பன்றிகளுக்கும் நாய்களுக்குந்தான் அள்ளி வீசுகிறார்கள். இதுதான் உண்மை நிலை. சாதாரண ஏழையெளிய மக்களுடைய குழந்தைகள், ரொம்பவும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள பிள்ளைகள்தான் அதைச் சாப்பிடுகிறார்கள். அதையும் சாப்பிடுவதற்கு முடியாத சூழ்நிலையும் இருக்கிறது. சத்துணவுக் கூடங்களுக்குக் கொடுக்கக்கூடிய அரிசி, பருப்பு, பாமாயில், காய்கறிகளை முழுமையாகப் போடுவதில்லை. ஏதோ, மஞ்சள் பொடியைப் போட்டு, சமைத்துப் போடுகிறார்கள். அந்த உணவை பிள்ளைகள் சரியாகச் சாப்பிடுவது இல்லை. நிலைமை இப்படித்





தான் இருக்கிறது. இதுதான் உண்மை. பணக்கார வீட்டுப் பிள்ளைகள் அந்த உணவைச் சாப்பிடுவதே இல்லை. ஆகவே, அரசு விடுமுறை நாட்களிலும், சனி ஞாயிறு போன்ற நாட்களிலும் இதை நீங்கள் நிறுத்தம் செய்தால் அரசுக்கு வருமானம் கிடைக்கும். நாங்கள் கொடுக்கக்கூடிய கோரிக்கைகளுக்கு நிதி இல்லை; நிதி இல்லை என்று ஒரே வரியிலே சொல்லி, தள்ளுபடி செய்து விடுகிறீர்கள். நிதிப் பற்றாக்குறையின் காரணத்தால்தான் இப்படி இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியும்.

என்னுடைய தொகுதியில் 8 நகராட்சிகள் இருக்கின்றன. அதில் புளியங்குடி நகராட்சியும் ஒன்று. 7 நகராட்சிகளில் அரசு மருத்துவமனைகள் இருக்கின்றன. என்னுடைய புளியங்குடி நகராட்சியில் மட்டும் இன்னும் டிஸ்பென்சரிதான் இருக்கிறது. 50 ஆயிரம் மக்கள் தொகை இருக்கிறது. அதற்காக, பல ஆண்டுகளாக அரசு மருத்துவப் பிரிவு வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறையமைச்சர் அவர்களிடம்கூட நேரடியாக மனு கொடுத்து இருக்கிறேன். . . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. டி. வேலையா அவர்கள்.

**திரு. டி. வேலையா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. திருநெல்வேலி நகராட்சியிலும் அரசு மருத்துவமனை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் தவறான தகவலைக் கொடுக்கிறார்.

**திரு. ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. அதாவது என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் ஒரு தாலுகா இருக்கிறது. அங்கேயும் டிஸ்பென்சரியாகத்தான் இருக்கிறது. தாலுகா அரசு மருத்துவமனையாக இல்லை. இரண்டாவதாக புளியங்குடி நகராட்சி இருக்கிறது. கடையநல்லூரை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 18 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. காமராஜர் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் 30 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. கீழ்ப் பகுதி சங்கரன்கோயிலை எடுத்துக்கொண்டால் 20 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இவைகளுக்கு மத்தியில் இருக்கிற புளியங்

[திரு. ஆர். ஈஸ்வரன்] [1992 ஜனவரி 30

குடி நகராட்சியில் 50 ஆயிரம் மக்கள் தொகை இருக்கிறது. இதற்காக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நேரிடையாக இரண்டு முறை கெஞ்சிகூட கேட்டுப் பார்த்து விட்டேன். மனுவும் கொடுத்து இருக்கிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் பேசி முடிக்க வேண்டுமென்று கருதித்தான் குறுக்கிடாமலேயே இருக்கிறோம். இருந்தாலும் எங்களை இழுத்து, இழுத்து பேசிக்கொண்டே இருக்கிறார்? அவர் மனு கொடுத்தது உண்மையில்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் ஒரு தாலுகா மருத்துவமனை ஒவ்வொரு தாலுகாவினுடைய தலைநகரத்திலேயும் இருக்க வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய கொள்கை. ஆனால் ஏற்கெனவே அப்படி இல்லாத காரணத்தால் பல இடங்கள் விட்டுப் போயிருக்கின்றன. எனவே, எந்த இடமெல்லாம் விட்டுப் போயிருக்கிறதோ அந்த இடத்திலெல்லாம் தாலுகா மருத்துவமனைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற உணர்வோடு நாங்கள் இப்போது படிப்படியாக செய்து கொண்டிருக்கிறோம். நிதிநிலையைப்பற்றி நீங்களே சொன்னீர்கள். எனவே, அப்படிப்பட்ட நிலையிலே எல்லா தாலுகா மருத்துவமனைகளிலேயும் உடனடியாக உருவாக்க முடியவில்லை. ஆனால் ஒவ்வொரு தாலுகா மருத்துவமனையிலும் 32 படுக்கைகள், குறைந்தபட்சம் இருக்க வேண்டுமென்ற அந்த அடிப்படை திட்டத்தை வைத்து இப்போது நாங்கள் செயல்படுத்த துவங்கி இருக்கிறோம். மத்திய அரசாங்கத்திலே, சிலபல நேரங்களிலே கோரிக்கையை வைக்கிறபோது நிதிப் பிரச்சினை அங்கேயும் இருக்கிற காரணத்தால், 'இல்லை' என்று சொல்கிறார்களோ அதேபோல இங்கேயும் எங்களுக்கு அப்படிப்பட்ட நிலை ஏற்படுகிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ஈஸ்வரன், விரைவில் முடியுங்கள்.



1992 ஜனவரி 30]

**திரு. ஆர். ஈஸ்வரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை
அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது, நான்
சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்கும்போது, நிதிநிலைமை
சரியில்லை என்றுதான் சொல்லப்பட்டதாக அறிந்தேன். ஆகை
யால், என்னுடைய தொகுதி மீதும், புளியங்குடி நகராட்சி மீதும்
இரக்கம் கொண்டு இதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். அந்த நகராட்சியில் 50 ஆயிரம் மக்கள் தொகை இருக்
கிறது. நான் மட்டுமல்ல, 234 சட்டமன்ற உறுப்பினர்களும்
மக்கள் வாக்களித்து, அவர்களுடைய பிரதிநிதிகளாக வந்திருக்
கிறோம். உங்களுக்கும் எவ்வளவு கஷ்டம் இருக்கும் என்பது
எங்களுக்குத் தெரியும். நாங்கள் படுகிற கஷ்டத்தை இங்கே
சொல்கிறோம். தொகுதி மக்களுக்கு பதில் சொல்ல முடிய
வில்லை. ஆகையால், நீங்கள் புளியங்குடி நகராட்சிக்கு வருகிற
நிதியாண்டிலாவது அனைத்து . . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மொத்தத்திலே அதற்கான நடவ
டிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையிலே
இப்போது அதைப்பற்றி என்னால் சொல்ல முடியவில்லை.
நீங்கள், தொகுதியிலே எவ்வளவு கஷ்டம் இருக்கிறது என்று
சொல்கிறீர்களோ அவ்வளவு கஷ்டம் எங்களுக்கும் இருக்கிறது.
அதோடு கூடுதல் கஷ்டம், உங்களுக்கு இப்படியெல்லாம் சொல்ல
வேண்டிய கஷ்டமும் இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்து
கொள்ள வேண்டும்.

பிற்பகல் 12.50

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிப்பட்ட முறையிலே இதைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம். விரைவில் முடியுங்கள்.

திரு. ஆர். ஈஸ்வரன் : நானும் அந்தத் துறையைச் சேர்ந்த
அமைச்சர்களிடத்தில் நான்கு பீரியடுகளாக இருந்து சொல்
கிறேன். அதற்கு அப்புறமும், மக்கள் மத்தியிலே ஒரு ஏமாற்ற

உணர்வு ஏற்பட்டு, ஒன்றுமே சொல்லவில்லைபோல இருக்கிறது என்கிற நிலைமையெல்லாம் இருக்கிறது. அதை நீங்கள் உணர்ந்து, எங்கள் கஷ்டத்தை நீங்கள் நினைத்து, அனுமதி வழங்கினால் நலமாக இருக்கும் என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

**டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களது உரையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு முதலில் நன்றியைக் கூறி என்னுடைய ஒருசில கருத்துக்களை இம் மாமன்றத்தில் வைக்கின்றேன்.

“அச்சம் என்பது மடமையடா; அஞ்சாமை திராவிடர் உடைமையடா” என்று அஞ்சாமையையும், அச்சமின்மையையும் தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டு, தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு, தீவிரவாதிகளையும், போராளிகளையும் கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றுகின்ற பாங்கு, தமிழகம் மட்டுமின்றி, இந்தியாவில் மட்டுமின்றி, உலகமே பாராட்டுகின்ற வகையில் அவர்களுடைய ஆட்சித் திறமை இப்பொழுது நடந்து வந்து கொண்டிருக்கிறது.

அது தவிர, பொருளாதாரம் உயர, வறுமை அகல, வாழ்க்கைத் தரம் உயர, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு அயராது தினமும் பாடுபட்டு வருகிறது.

காவிரி நீரைப் பொறுத்தமட்டில், கர்நாடக அரசும், தமிழக அரசும் கோர்ட்டினுடைய தீர்ப்பை ஒத்துக்கொண்டு, கோர்ட்டுக்குச் சென்றுகூட, அந்தக் கோர்ட்டினுடைய தீர்ப்பை மதிக்காமல், கலைவிரி கோலமாக கர்நாடகத் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்டு, அவர்களைத் தமிழகத்திற்கு அனுப்பிய பொழுதும்கூட, “என்னதான் நடக்கும் நடக்கட்டுமே, இருட்டினில் நீதி மறையட்டுமே” என்று மத்திய அரசு பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதுகூட, “நீதி தன்னாலே வெளி வரும் தயங்காதே, புரட்சித் தலைவி இருக்கிறார் மயங்காதே” என்று



தமிழக மக்களுக்கு ஆறுதலாகப் புரட்சித் தலைவி அவர்கள் இப்பொழுது வழிநடத்தி வந்து கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமின்றி, “நடக்கும் என்பார் நடக்காது; நடக்காது என்பார் நடந்துவிடும்” என்று புரட்சித் தலைவர் அவர்கள் கூறியதற்கிணங்க, கள்ளச்சாராயத்தைத் தமிழ்நாட்டில் ஒழிக்கவே முடியாது என்ற முந்தைய முதல்வர்களெல்லாம் கூறியபொழுதுங்கூட, இப்பொழுது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய ஆட்சித் திறமையினால் அந்தக் கள்ளச்சாராயத்தைக் கட்டுப்படுத்துவதற்கு எடுத்திருக்கின்ற பாங்கு கிட்டத்தட்ட தமிழ்நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாகக் கள்ளச்சாராயத்தை ஒழித்துவிட வேண்டுமென்பதற்காக அவர்கள் ஆற்றுகின்ற பாங்கை தமிழ்நாடு மட்டுமல்லாமல், இந்தியாவே பாராட்டிக் கொண்டுதான் இருக்கிறது.

பொருளாதார நெருக்கடியைப் பொறுத்தமட்டில், இரஷ்யாவும், அமெரிக்காவும் போட்டி போட்டுக் கொண்டு விண்வெளியில் பறக்கின்ற கால கட்டத்தில், இரஷ்யா தன்னுடைய பொருளாதார சூழ்நிலையைக் கட்டுப்படுத்தாத காரணத்தால், சிதறுண்டு போனது என்பது நாம் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதைக் கவனமாக வைத்துக் கொண்டு, மத்திய அரசு பொருளாதார நெருக்கடி தீர்வதற்கு, உணவு உற்பத்தியை எவ்வாறெல்லாம் பெருக்கவேண்டுமோ அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பஞ்சாபும், ஹரியானாவும் தானிய நெல் களஞ்சியமாக விளங்குகின்ற இந்த நேரத்தில், வடக்கே மழை அதிகமாகப் பெய்ததன் காரணமாக, மழைக்குப் பல உயிர்கள் பலியாகின்றன. அதே சமயத்தில், தென்னகத்தைப் பொறுத்தமட்டில், மழை இல்லாமல் மக்கள் தண்ணீருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பொருளாதார முன்னேற்றத்திற்காக, கங்கை நதியையும், காவிரி நதியையும் இணைப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

அதுமட்டுமல்ல, கேரளாவில் அதிகமான தண்ணீர் வீணாகக் கடலில் சென்று கலக்கிறது. அந்தத் தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்பிவிடுவோமோயானால் பொருளாதாரம் கட்டாயம்

முன்னேறும் ; உணவு உற்பத்தியும் பெருகும் ; இந்தியா வறுமைக் கோட்டிலிருந்து மீள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் மத்திய அரசுக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடநத இருபது ஆண்டுக் காலமாகத் தமிழ் நாட்டில் எந்தவித பெரிய திட்டமும் இல்லாமல் இருப்பது கவர்னர் உரையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆகவே, மத்திய அரசு இனிமேலாவது முக்கியத்துவம் கொடுத்து, "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்ற எண்ணத்தை மாற்றி, தெற்கே உள்ளவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, தென்னிந்தியாவை ஒரு வலிவு மிக்க, வட இந்தியாவைப் போன்ற நாடாக மாற்றுவதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பார்க்காமல், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோடி ரூபாய் கொடுக்கின்ற புரட்சித் தலைவியை நாம் அனைவரும் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறோம். முன்பெல்லாம், நாங்களெல்லாம் எதிர்க்கட்சியாக இருக்கும்பொழுது, எங்களுக்குப் பேசுவதற்குக் கூட பழைய சட்டமன்ற சபாநாயகர் அவர்கள் அனுமதி கொடுக்க மறுத்திருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பார்க்காமல் எல்லா மக்களும் தமிழ் நாட்டு மக்கள். ஆகவே, தமிழக மக்களுக்கு உரிய எல்லா வசதிகளையும், அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலை வசதி, பஸ் போக்குவரத்து வசதி போன்ற வசதிகளைச் செய்து தருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை தமிழ்நாட்டு மக்கள் ஒட்டுமொத்தமாகப் பாராட்டுகின்றார்கள்.

பிற்பகல் 12.55

அதுமட்டுமல்லாமல், நோயிலிருந்து தமிழக மக்களைக் காப்பாற்றுவதற்காக, "நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்வாய்நாடி வாய்ப்பச் செயல்" என்ற குறளுக்கு இணங்க, நோயினுடைய தன்மையை உணர்ந்து, அந்த நோயிலிருந்து





அந்த மக்களைக் காப்பாற்றுவதற்காக இலவச மருத்துவ முகாம்கள் பெரிய பட்டதாரிகளைக் கொண்டு கிராமங்களிலே நடத்தப்படுகின்றன. ஆகவே அந்த தாய்-சேய் நல மருத்துவ விடுதிகள், அந்த இலவச மருத்துவ முகாம் மக்களுக்கும் மருத்துவர்களுக்கும், இடையே ஒரு நல்ல பாலமாக அமைகின்றது.

அது மட்டுமல்ல. கல்லாமையை இந்த நாட்டிலே இல்லாமையாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கிராமத்திலும் கல்லாமையைப் போக்குவதற்காகப் பாடுபட்டு வருகின்றார்கள். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இராமநாதபுரம் மாவட்டம் நிரந்தரமாக வறட்சியான பகுதியாக இருக்கிறது. கிட்டத்தட்ட 511 பொதுப்பணித் துறை கண்மாய்களைக் கொண்ட அந்த மாவட்டம் 1,32,428 ஏக்கர் ஆயக்கட்டுகளைக் கொண்டிருக்கிறது. அந்த மாவட்டத்தில் பெரும்பாலும் 75 விழுக்காடு மழையை நம்பிக் கொண்டிருக்கிறார்கள். 25 விழுக்காடு வைகை அணையை நம்பித் தான் இருக்கிறார்கள். மூல வைகையாறு, வைகையாறு, கொட்ட வெளியாறு, சுருளியாறு ஆகிய 3 துணை நதிகளை நம்பியிருக்கிறது. இந்த கொட்டவுளியாற்றில் உள்ள தண்ணீரை, மஞ்சளாறு, மருதா நதி ரெகுலேட்டர், சாத்தியார் ஓடை, உப்பாறு ரெகுலேட்டர், செய்குளத்தூர் ரெகுலேட்டர் என்று 'மார்டனைசேஷன் ஆஃப் வைகை ரிசர்வாயர்' என்று கூறி, எங்களுக்கு வரவேண்டிய தண்ணீரை எடுத்துவிடுகிறார்கள். வைகையில் அணை கட்டுவதற்கு முன்னால் எங்களுடைய பகுதிக்குத் தண்ணீர் பஞ்சமே இல்லை என்று கூறலாம். இப்போதுகூட காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூறும்போது, 'வைகையில் கை வைத்தால் தண்ணீர் வரும், என்று கூறினார்கள். அந்த அளவுக்கு வைகையைத் தோண்டியவுடன் தண்ணீர் வரும் என்று கூறினார்கள். அந்த அளவுக்கு வைகையைத் தோண்டியவுடன் தண்ணீர் வரும் நிலை மாறி அந்த வைகையானது இப்போது வறண்டு நீரற்று காணப்படுகிறது. 'கிரவண்டு வாட்டர் லெவல்' கிட்டத்தட்ட 25 அடிக்குக் கீழே சென்றுவிட்டது.

கடந்த மாதம் எங்கள் மாவட்டத்தில் அரும்பாடுபட்டு குடி தண்ணீருக்காக கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளவுக்கு செலவிட வேண்டிய அரசுப் பணத்தை மிச்சப்படுத்துவதற்காக

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தண்ணீர் விட ஏற்பாடு செய்து, அது பாதி வழியிலேயே நின்றுவிட்டது. நான் எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால் 'பார்டனைசேஷன் ஆஃப் வைகை ரிசர்வாயர்' என்று கூறிக்கொண்டு, எங்களுடைய பகுதிக்கு வருகிற தண்ணீரை நிறுத்திவிடுகிறார்கள். வைகை அணையைக் கட்டுவதற்கு முன்னால் எங்கள் பகுதிக்கு எவ்வளவு தண்ணீர் கிடைத்ததோ அந்த அளவுக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும். பரமக்குடி தொகுதியானது 3 ஒன்றியங்களைக் கொண்டது. மூன்று ஒன்றியங்களுக்கும் குடிநீர் பிரச்சனை இல்லாமல் இருக்க கூட்டுக் குடிநீர் திட்டம் ஒன்று போடப்பட்டது. இப்போது அந்தத் திட்டம் செயலற்றுபோய், குடிநீர் இல்லாத திட்டமாக இருக்கிறது. ஆகவே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பகுதியான முன்னாள் இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஒட்டுமொத்த மக்களுக்கும் குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பரமக்குடி தொகுதி இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய நகரமாக இருந்தும்கூட அங்கே கல்லூரியே இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஒட்டுமொத்தமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலை இல்லை. அதனால் மற்ற மாவட்டங்களுக்கு நாங்கள் அலையவேண்டியிருக்கிறது. ஆகவே பரமக்குடி தொகுதியில் கல்லூரியும், தொழிற்சாலையும் ஏற்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெறும் விவாதத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக தங்களுக்கு முதற்கண் நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.





இலங்கையிலே தமிழ் மக்களுக்காக ஓர் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொடுத்து இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு தமிழ் மாநிலத்தைப் பிரித்துக் கொடுத்து, தமிழன் வரதராஜ பெருமாளை முதலமைச்சராக்கிய பெருமை எங்கள் இதயதெய்வம் இராஜீவ் காந்தி அவர்களுக்கும் புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும்தான் உண்டு. தமிழர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் சிலர் தீவிரவாதிகளைத் தூண்டிவிட்டு வெளிநாட்டுப் போராளிகளைத் தமிழ்நாட்டில் ஊடுருவவிட்டு, அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை இரத்தக் காடாக மாற்றி, பாரதப் பிரதமராக இருந்த இராஜீவ் காந்தி அவர்களை தமிழ் மண்ணிலே கொன்று சுடுகாடாக மாற்றிவிட்டார்கள். தான் பொறுப்பேற்றவுடன் தன் உயிரை துச்சமென மதித்து, தீவிரவாதிகளை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கிய பெருமை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத்தான் உண்டு என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் நன்றிதனைக் காணிக்கையாக்கி வாழ்த்தவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

பாரதப் பிரதமர் இராஜீவ் காந்தி கொலை வழக்கிலும், பத்மநாபா கொலை வழக்கிலும் தமிழக அரசின் முன்னாள் செயலாளர் நடுவர் முன் கொடுத்த வாக்குமூலத்திலே தமிழ் நாட்டினுடைய முன்னாள் முதலமைச்சர் ஒருவரும், அவருடைய மகனும், எம்.பி. ஒருவரும் தீவிரவாதிகள் தப்பிச் செல்ல உதவியாக இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தும் இன்னும் அவர்கள் ஏனோ கைது செய்யப்படவில்லை. அவர்களை உடனே கைது செய்து, நீதியை நிலைநாட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென பணிவன்புடன் நான் வேண்டுகிறேன். தீவிரவாதத்தின் மிச்ச, சொச்சங்கள்..... (குறுக்கீடு)

பிற்பகல் **1.00**

**திரு. இளம்வழுதி:** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பெயர் குறிப்பிட்டுப் பேசவில்லை; நீங்களாகவே பொருள் எடுத்துக்கொண்டு பேசினால் சரியாக வராது.

திரு. இளம்வழுதி : முன்னாள் முதல்வர், அவருடைய மகன்,
உள்துறைச் செயலாளர் என்று சொல்கிறார். வழக்கு நீதிமன்றத்
திலே இருக்கிறது. அப்படி இருக்கும்போது, சம்பந்தம் இல்லாத
வற்றை அவர் அவையில் பேசக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள்
அமருங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது இதைப்பற்றிப்
பேசுங்கள்.

திரு. இளம்வழுதி: அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு
கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை அவைக்
குறிப்பிலிருந்து நீக்கவேண்டிய அளவுக்கு ஒன்றுமில்லை ; நீங்கள்
அமருங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : அவர்களை உடனே கைது செய்து,
நீதியை நிலைநாட்ட வேண்டியது மாண்புமிகு முதல்வர் அவர்
களின் கடமையாகும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தீவிரவாதத்தின் மிச்ச
சொச்சங்கள், தமிழகத்திலே தங்காதபடி, இலங்கைப் போராளி
களையும், இலங்கை அகதிகளையும் உடனே அகற்றுவதற்கு
மத்திய அரசோடும், இலங்கை அரசோடும் தமிழக அரசு பேச்சு
வார்த்தை நடத்தி, தமிழகத்திலே இருந்துகொண்டிருக்கிற அந்தப்
போராளிகளையும், அகதிகளையும் இலங்கைக்கு முழுமையாக
அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென முதல்வர் அவர்
களை நான் வேண்டுகிறேன்.

முதல்வரின் கோரிக்கையை ஏற்று, காவல் துறையை நவீனப்
படுத்த மத்திய அரசு 10 கோடி ரூபாய் கொடுத்தமைக்காக மத்திய
அரசுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.
கர்நாடகத்தில் காங்கிரஸ் ஆண்டுகொண்டிருந்தபோதிலும், அகில
இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவராகவும், பாரதப் பிரதமராகவும்
உள்ள மாண்புமிகு திரு. நரசிம்மராவ் அவர்கள் தமிழகத்திற்குச்
சாதகமாக, நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை
அரசிதழில் வெளியிட்டு நீதியை நிலைநாட்டினார்கள். நடுநிலை
யோடு தமிழக மக்கள் காவிரி ஆற்றுத் தண்ணீர் பெறவிருக்கிற
உரிமையை நிலைநாட்டிய மாண்புமிகு திரு. நரசிம்மராவ் அவர்



161508



கள் எவ்வளவு பாராட்டினாலும் தகும். தமிழக அரசு இதற்
காக அவையிலே நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டு
வரலாம். நடுவர் மன்ற இடைக்கால ஆணையை, பாரதப் பிரதமர்
அரசிதழில் வெளியிட்ட செயலானது, தமிழக அரசின்பால்
அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பதையும்,
தமிழகத்திற்கு ஒருபோதும் அவர் துரோகம் இழைக்கமாட்டார்
என்பதையும், அவருக்கு எட்டப் பார்வை கிடையாது ; கிட்டப்
பார்வைதான் உண்டு என்பதையும் இங்கே நிரூபித்துக்
கொண்டிருக்கிறது.

கர்நாடகம், கரு நாகமாக மாறி பல்லாண்டுகளுக்கு முன்பே
குடியேறிய தமிழர்களைக் கொன்று குவித்து, தமிழ்ப் பெண்களைக்
கற்பழித்து, தமிழர்களின் சொத்துக்களை கோடிக் கணக்கில் நாச
மாக்கியுள்ளது. மொழியின் பெயராலும், இனத்தின் பெயராலும்
காவிரி நீர் பங்கீடு குறித்து கலவரம் கட்டவிழ்த்து விடப்பட்டு,
அங்கே சோதனைகள் வந்தது, வேதனைக்குரிய ஒன்றாகும்.
தமிழகத்திலே தங்கியுள்ள கர்நாடக தமிழர்களை மீண்டும் குடி
யமர்த்த மத்திய அரசோடும் கர்நாடக அரசோடும் தமிழக
அரசு பேச்சுவார்த்தை நடத்தி ஆவன செய்ய வேண்டும். நிதி
நெருக்கடியிலே உந்தப்பட்டு, பொருளாதார நெருக்கடியால்
நசுக்கப்பட்டிருக்கிற நம் அரசு, நம் தமிழக மக்களின் நலனைப்
பாதுகாக்க திணறிக்கொண்டிருக்கிறபோது, இலங்கை அகதி
களும், கர்நாடக தமிழ் மக்களும் கூடுதல் சுமையாக அமைந்
துள்ளதை, போர்க்கால அடிப்படையிலே நீக்க மாண்புமிகு
முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கர்நாடக
தமிழர்களுக்கு போதிய உணவு, உடை, உறையுள் வழங்கப்பட
வில்லை. போட்டோவில் 'போஸ்' கொடுத்து கர்நாடக தமிழர்
களுக்கு உணவு அளிப்பதாக படம் எடுத்துக்கொள்வதில் மட்டும்
அதிகாரிகள் முனைப்பாக இருக்கிறார்களேயொழிய, அவர்களைப்
பேணுவதிலே அவ்வளவு அக்கறை காட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கர்நாடக தமிழர்கள்

V211;31 N92
N92-14.1

பாதிக்கப்படுகிற நேரத்தில், அவர்களுக்குத் தேவையான உதவியைச் செய்யவில்லை; போட்டோ எடுத்துக்கொண்டு, அரசு அதிகாரிகள் விளம்பரம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்கிற தவறான தகவலை நம்முடைய உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவிக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான உதவியை அளிக்க நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கே இருக்கிற தமிழ் கூறும் நல்லவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய கருத்துக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், முதல்வர் அவர்கள் ஆணையிட்டாலும், அதிகாரிகள்—ஆங்காங்கே இருக்கும் அதிகாரிகள்—அதனைச் செம்மையாகச் செய்யவில்லை; குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறிப்பிட்டு சுட்டிக் காட்ட வேண்டும்; பொதுவாக நீங்கள் பேசுவது முறையல்ல.

**திரு. சி. ஞானசேகரன் :** கர்நாடக தமிழர்கள் தங்கியிருக்கும் வரை, அவர்களைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்தும்படி அரசு அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டுமென்று நான் பணிவன்போடு முதல்வர் அவர்களை வேண்டுகிறேன்.

மதுவிலக்குக் கொள்கையை மீண்டும் தமிழகத்திலே வெற்றி பெறச் செய்த பெருமை, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு உண்டு என்பதிலே யாருக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தனது தேர்தல் அறிக்கையிலும், அரசு பொறுப்பேற்றவுடன் சொன்ன ஆளுநர் உரையிலும் பூரண மதுவிலக்கை அமல்படுத்துவோம் என்று அறிவித்தது, தமிழகத்திலுள்ள பிராந்திக் கடைகளை மூடினால் தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கண்ட கனவு இந்த நேரத்திலே நனவாகும்; தேர்தல் அறிக்கையிலே, ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டது நிறைவேறும். பிராந்திக் கடைகளை அரசு





மூடுவது குறித்து, தற்போது ஆளுநர் உரையிலே எதுவும் சொல்லப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிராந்திக் கடைகளை மூட நடவடிக்கை எடுக்க வேண்டும். சாராயத்தை ஒழிக்க முதல்வர் எடுத்த நடவடிக்கைகள் குறித்து, அவருக்கு என் நன்றியை நான் உரித்தாக்குகின்றேன்; பாராட்டவும் கடமைப் பட்டிருக்கிறேன். கலால் பிரிவை ஏற்படுத்தி, சாராயத்தை ஒடுக்க ஆவன செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், சமீபகாலமாக மீண்டும் சாராயம் ஆங்காங்கு தமிழகத்தில் தலைதூக்க ஆரம்பித்துள்ளது என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன் . . . ரூ. 1.40-க்கு விற்கப்படுகிற சாராயப் பாக்கெட்டை, ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்து பெற்று. அதனை தமிழகத்திலே 8 ரூபாய்க்கு, சாராய வியாபாரிகள் விற்கிறார்கள். விலைவாசி விஷம்போல் சாராயத்திலேயும் ஏறியிருக்கிறது. *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பொதுவாக குற்றச்சாட்டுக்களை அடுக்கிக்கொண்டே போவது முறையல்ல. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் சொல்லுங்கள். அல்லது தொடர்புடைய அமைச்சருக்கு எழுதி அனுப்பலாம். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1.05

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு துறையைப் பற்றியே மொத்தமாகச் சொல்வது இந்த நாட்டிற்கே கூட நல்லதல்ல. நீங்கள் அந்தத் துறையிலே யாராவது இருந்தால் அந்த ஆளைக்கூட குறிப்பிட்டுச் சொல்லலாம். அல்லது எழுதிக் கொடுத்துவிடலாம்.* அவ்வளவு சரியாக இருக்காது—எனவே ஒரு துறையையே குறிப்பிட்டுச் சொல்லி மொத்தமாகக் கேவலப்படுத்தக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் காவல்துறை அதிகாரிகள் பற்றிக் குறிப்பிட்ட. அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1992 ஜனவரி 30

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே விற்கிறார்கள்; யார் குடித்து விட்டுப் போகிறார்கள், என்ற பட்டியலைத் தரத் தயாராக இருக்கிறேன். பிறகு அரசிடம் தனியாகத் தந்து விடுகிறேன் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அடுத்து இங்கே சாராயச் சட்டத்திலே (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவில் முடிக்க வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று சாராயத்தை விற்பவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று 50 ரூபாய், 100 ரூபாய் என்று அபராதத்தைச் செலுத்திவிட்டு உடனே வந்து தங்கள் பணியைத் தொடங்கி விடுகிறார்கள். இதைத் தவிர்க்க நான் ஏற்கனவே இந்த மாமன்றத்தில் இருமுறை பேசி இருக்கிறேன். சாராயச் சட்டத்தில் உடனடியாகத் திருத்தம் கொண்டு வரவேண்டும். அந்தச் சாராயம் விற்கக்கூடிய குற்றத்தை 'நான்-பெயிலபிள்' குற்றமாக, ஜாமீனில் விடமுடியாத ஒரு குற்றமாக, உடனடியாக அரசு மாற்ற வேண்டுமென்றும், அதேபோல் 50 ரூபாய் 'பைன்' கட்டுகிற ஒன்றை உடனடியாக ஆறு மாதம் குறைந்த தண்டனை யாவது கொடுக்கக்கூடிய வழியில் நாம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்;** திரு. தேனி பன்னீர்செல்வம்.

* **திரு. தேனி பன்னீர்செல்வம்;** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறுகின்ற ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்த விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்கு என்னுடைய அன்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்,

இன்றைய தினம், நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியின் தொடக்கமாக இந்தப் புதிய ஆண்டிலே இன்றைக்கு



1992 ஜனவரி 30] [திரு. தேனி பன்னீர் செல்வம்]

அறிமுகப்படுத்தப்பட்டு, இங்கே விவாதிக்கப்பட்டு வருகின்ற இந்த ஆளுநர் உரை, தமிழக மக்களின், குறிப்பாக ஏழை எளிய மக்களுடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அளவுக்குப் பல்வேறு நலத் திட்டங்களை உள்ளடக்கிய ஒன்றாக, எதிர்கால பட்ஜெட் அமையும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றைக்கு அது அமைந்திருக்கிறது. இந்த ஆளுநர் உரையினை என்னு டைய தொகுதியின் சார்பிலும் என்னுடைய மாவட்டத்தின் சார்பிலும் நான் முழுமையாக வரவேற்று, இத்தகைய சிறப்பான ஒரு ஆட்சியை நடத்தி வருகின்ற நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு மீண்டும் என்னுடைய நன்றியைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கக் கூடிய போலி உறுப்பினர்களை நீக்கிவிட்டுப் புதிதாக உறுப்பினர் களைச் சேர்த்து முறையான தேர்தல், நியாயமான, ஜனநாயக அடிப்படையிலே தேர்தல்களை நடத்த அரசு முடிவு செய்தி ருப்பது குறித்து நான் மனப்பூர்வமாகப் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல் ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டிற்காக ஒரு இலட்சம் தாய்மார்கள், சகோதரி கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கான நடவடிக் கைகள் இந்த ஆண்டிலே எடுக்கப்பட்டிருப்பதை இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். அதையும் ஏழை எளிய மக்களின் சார் பாக நான் அன்போடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக என்னுடைய பகுதியில் இருக்கக் கூடிய தாய்மார்கள், இன்றைக்கு பல்வேறு வசதிகளை நம்முடைய புரட்சித் தலைவி அரசிலே பெற்றுக் கொண்டிருந்தாலும் கூட, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய தாய்மார்கள் தங்களுடைய அடிப்படைத் தேவை களுக்கு, அதாவது குடிதண்ணீர், மின்சார வசதி, தெரு விளக் குகள், கழிப்பிட வசதிகள் தேவை என்று அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களிலே கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிறார்கள். எனவே, இந்த நடப்பு ஆண்டிலே திட்டங்களைத் தீட்டுகின்ற போது, கிராமப்புறப் பெண்களின் தேவைகளை அறிந்து, கழிப் பிட வசதியினை ஒவ்வொரு கிராமத்திலும் ஏற்படுத்தித் தரவேண் டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவோடு கேட்டுக் கொள் கிறேன்.

[திரு. தேனி பன்னீர் செல்வம்] [1992 ஜனவரி 30

அதேபோல் அனைத்துக் கிராமங்களிலும், குறிப்பாக ஆதி திராவிட சகோதரர்கள் வாழ்கின்ற பகுதிகளில், காலனிகளில் எல்லாப் பகுதிகளுக்கும் குடிதண்ணீரைத் தன்னிறைவு அடையச் செய்யத்தக்க அளவிலே அதற்குரிய நடவடிக்கைகள் இந்த ஆண்டு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதையும் நான் வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1.10

அதேபோல, இன்றைக்கு இந்த அரசு அமைந்தவுடன் மிக முக்கியமான கடமைகளைச் செய்வோம் என்று சொல்லி அதிலே குறிப்பாக தமிழ்நாடு முழுவதும் சீர்கெட்டுப்போய் இருக்கக் கூடிய சாலைகளைப் பராமரிப்பு செய்து நல்ல போக்குவரத்திற்குச் சாதகமாக ஒரு சூழ்நிலையை உருவாக்குவோம் என்று தேர்தல் அறிக்கையிலே சொல்லியது கடந்த ஆண்டும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, இந்த ஆண்டும் தொடர்ந்து நிறைவேற்றுவோம் என்று இந்த ஆளுநர் அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டிருப்பதை நான் பெரிதும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய போடி தொகுதியிலே சாலை பராமரிப்பு என்பது கடந்த 10 ஆண்டுகாலமாக இல்லாமல் இருந்து, இன்று புரட்சித் தலைவியின் புனித ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு ஏறத்தாழ 60 லட்சம் ரூபாய் நிதி ஆதாரங்கள் பல்வேறு திட்டங்களிலே சாலைகளுக்காக, சாலை பாரமரிப்புக்காக ஒதுக்கப்பட்டு இன்றைக்கு ஏறத்தாழ அனைத்து சாலைகளும் புதுப்பிக்கப்பட்டு நல்ல முறையிலே பாராமரிக்கப்பட்டும் வருகிறது. இன்னும் 1, 2 கிலோ மீட்டர் தொலைதொலை போடி தொகுதியிலே சாலைகள் பராமரிக்கப்படவேண்டிய நிலை இருக்கிறது. இதற்காக பொதுப் பணித்துறை அமைச்சர் மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் சென்ற முறை எங்களுடைய போடி தொகுதியிலே போட்டியிட்டார்கள். அந்தப் போடி தொகுதியினுடைய பிரதிநிதியாக இருந்தபோது, மதுரை மாவட்டத்திலே அனைத்துப்



1992 ஜனவரி 30] [திரு. தேனி பன்னீர் செல்வம்]

பகுதிகளுக்கும் மழை பெய்யாமல் இருந்தது. போடி தொகுதி
யிலே மட்டும் அடிக்கடி மழை பெய்யும். இது கடந்த கால
குறிப்புகளை எடுத்துப்பார்த்தால் மிக நன்றாகத் தெரியும்.
ஆனால் இந்த ஆண்டு யார் செய்த தவறோ, எங்களுடைய இதய
தெய்வம், அந்தத் தங்க மனத் தலைவி, எங்களுடைய போடி
தொகுதியிலே போட்டியிடாமல், வேறு தொகுதியிலே போட்டி
இட்ட காரணத்தினாலேயோ என்னவோ, எங்களுடைய போடி
தொகுதியிலே மட்டும் இந்த ஆண்டு மழையே பெய்யவில்லை.
எல்லா பகுதிகளிலும் மதுரை மாவட்டத்திலே இருக்கக்கூடிய
அனைத்துப் பகுதிகளிலே மழை பெய்கிறது. ஆனால் போடி
தொகுதியிலே மட்டும் போதிய அளவிற்கு மழை பெய்யாமல்
லேசான தூரலோடு நின்றுபோய் இருக்கிறது. அதன் காரண
மாக இன்றைக்கு உத்தமபாளையத்திலிருந்து பூதிபுரம் வரையி
லுள்ள அனைத்துக் கிராமப்புற பகுதிகளும் வறண்டுபோய் இருக்
கின்றன. கிராமப்புறத்திலே இருக்கக்கூடிய கிணறுகள் எல்லாம்
மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்டு மக்கள் குடிநீருக்கே சிரமப்
படுகின்ற நிலைமைகள் உருவாகியிருக்கின்றன. எனவே எங்க
ளுடைய தங்க மனத் தலைவி ஒரு முறை போடி தொகுதியிலே
கால் வைத்து, அந்த வறட்சியை போக்கவேண்டுமென்று இந்த
நேரத்திலே பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதே என்னு
டைய உத்தமபாளையம் தாலுக்காவிலே போடி தொகுதி
உள்ளடக்கி இருக்கக்கூடிய உத்தமபாளையம் தாலுக்காவை
வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே
இந்த அவையின் மூலமாக பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்பு
கிறேன்.

அதேபோல இன்றைக்கு எங்களுடைய மலைப்பகுதியிலே
இந்த ஆண்டு ஆயிரம் மக்கள் தொகைக்கு குறையாமல் வசிக்கின்ற
பகுதிகளுக்கு எல்லாம் பேருந்து வசதி செய்து தரப்படும் என்று
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தெரி
வித்திருக்கின்றார்கள். அதையும் நான் நன்றியோடு பாராட்டி,
அதே நேரத்திலே எங்களுடைய போடி தொகுதியிலே போக்கு
வரத்து வசதியே இல்லாத டாப்டேசன், குரங்கணி, கொழுக்கு
மலை, சென்ட்ரல்டேசன், அகமலை போன்ற கிராமங்கள் மலை
சாதி மக்கள் வசிக்கின்ற பகுதிகள். ஏறத்தாழ பல கோடி

[திரு. தேனி பன்னீர் செல்வம்] [1992 ஜனவரி 30

ரூபாய் வருமானம் உள்ள, காபி, டீ போன்ற விளைபொருள்கள் உற்பத்தியாகின்ற பகுதி, இந்தப் பகுதிகளுக்கு போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கின்றது. ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் தொலைவு நடந்தே போய், நடைசுமையாக தங்களுடைய பொருள்களை சுமந்து செல்கிறார்கள் அல்லது குதிரைகளிலே ஏற்றிக்கொண்டு செல்கின்றார்கள். இப்படிப்பட்ட அவல நிலை இருந்து கொண்டிருக்கிறது. எனவே இந்தப் பகுதிக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முறையான சாலைகளை, சாலை வசதிகளை ஏற்படுத்தி இந்த ஆண்டுக்குள் அவர்களுக்கும் போக்குவரத்து வசதி கிடைக்கின்ற வகையிலே உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு செய்து தரவேண்டுமாய் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல போடி தொகுதியிலே இருந்து தேனியிலே இருக்கக்கூடிய வள்ளுவன் வாசுகி தையல் கூட்டுறவுப் பயிற்சி நிலையம் என்று ஒன்று இருக்கிறது. அந்தக் கூட்டுறவுப் பயிற்சி தையல் நிலையத்திலே சில முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த முறைகேடு என்னவென்றால், என்னுடைய போடி தொகுதியிலே இருக்கக்கூடிய ஏழை தாய்மார்கள், சகோதரிகள் அந்தத் தையல் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராகச் சேரவேண்டும் என்பதற்காக ரூ. 105 கட்ட வேண்டிய உறுப்பினர், கட்டணத் தொகை ஏறத்தாழ ரூ. 500-லிருந்து ஆயிரம் ரூபாய் வரை கட்டியிருக்கிறார்கள் என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சகோதரிகள் எழுத்து மூலமாக எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சொல்லி இருக்கிறேன். இது குறித்து முழு விசாரணை செய்து சம்பந்தப்பட்ட தையல் கூட்டுறவுச் சங்கத்தின் தனி அலுவலர் மீதும், இந்த மாவட்டத்தினுடைய சமூகநல அலுவலரிடம் முறையான விசாரணை செய்து, தவறு யார் செய்திருந்தாலும் அல்லது அவர்களோடு சேர்ந்து அரசியல்வாதிகள் யாராவது தவறு செய்து இருந்தாலும் அவர்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பணிவோடு கேட்டு, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.



1992 ஜனவரி 30]

பிற்பகல் 1-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் நடை பெறும்போது அருள்கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் ; மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது உரையாற்ற அனுமதி தந்த தங்களுக்கு என் உரையை துவக்கு முன் என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்கி கிறேன்.

அமைதிப் பூங்காவாக இருந்த தமிழகத்தை ஆயுத கலாச்சாரத்துக்கு உட்படுத்திய அந்தத் தீய சக்திகளை பொன்மனச் செம்மலின் மறுபதிப்பாக, ஒரு புதிய யுக பிரதிபலிப்பாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள், திட மனதோடு செயல்பட்டு இன்றைக்கு மீண்டும் அமைதிப் பூங்காவாக தமிழகத்தை மாற்றியிருக்கிறார்கள் என்றால் இதற்கு முன்னாலே தமிழகத்திலே இருந்த எந்த முதலமைச்சருக்கும் இல்லாத ஒரு துணிவு புரட்சித் தலைவி அவர்களுக்கு இருக்கிறது என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.

சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக, காவல்துறையினை நவீனப்படுத்த இன்றைக்கு நிதிநிலையினை ஒதுக்கி தந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. காவிரி ஆற்று நீர் தகராறுமீது நடுவர் மன்ற இடைக்கால ஆணையை மத்திய அரசு அரசிதழில் வெளியிட விடாமுயற்சியோடு செயல்பட்டு, வெற்றி கண்ட மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் எங்கள் இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு தமிழகமே கடமைப்பட்டிருக்கிறது. இந்த ஆணையை உரியவாறு செயல்படுத்த உறுதிசெய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற அந்தக் கொள்கையும் பாராட்டத்தக்கது.

அப்பாவி கர்நாடக தமிழர்கள் கர்நாடகத்திலிருந்து தமிழகத்திற்கு வந்தபோது அந்த 1 லட்சத்து, 50ஆயிரம் தமிழர்களுக்கும் உதவிகளை உடனுக்குடன் வழங்கி, அவர்களுக்கு உணவு துணிமணிகள் என்று கொடுத்து, அவர்களுடைய துயரைப் போக்கக்கூடிய அந்தத் தாய் உள்ளத்தைப் பாராட்டுகிறேன். அதேநேரத்

[டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்] [1992 ஜனவரி 30

தில் இந்த உணவு, உடைகளை எல்லாம் கொடுக்கிறபோது, என்னுடைய தொகுதியில் வந்திருக்கிற அந்த கர்நாடக அகதிகள், என்னிடத்திலே சில கோரிக்கைகளை வைத்தார்கள். அதிலே முக்கியமான ஒரு கோரிக்கை என்னவென்றால், நாங்கள் இங்கே அகதிகளாக வந்திருக்கிறோம். "எங்களுக்கும் சில தொழில்கள் தெரியும். ஆனால் இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் நாங்கள் மீண்டும் கர்நாடகாவிற்குத் திரும்பி செல்ல முடியுமா என்ற நிலை சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது. எங்களுக்கு அரசு எவ் வளவு உதவி செய்தாலும் நாங்களே ஒரு தொழிலை செய்து, ள்றிது சம்பாதித்து எங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற விரும்புகிறோம்" என்கிற கோரிக்கையை அவர்கள் வைத்த பொழுது நிச்சயமாக உங்களுடைய கோரிக்கையை அரசின் கவனத்திற்கு தவறாமல் கொண்டு செல்வேன் என்று கூறி யிருக்கிறேன். ஆகவே, அதுபோல இங்கே வந்திருக்கிற கர்நாடக தமிழர்களுக்கு என்ன தொழில் தெரியும் என்பதை பதிவு செய்து, அந்தத் தொழில் மூலமாக அவர்களுக்கு வருமானம் வருகிற வகையிலே அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல பாமர மக்கள் பயன்படுத்தும் பொருட்கள் விலை உயராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்கிற கொள்கை பாராட்டத்தக்கது . இன்றியமையாத பண்டங்களின் விலையை உயர்த்துவதற்கு முன்பு மாநில அரசுகளை கலந்து ஆலோசிக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் வலியுறுத்துவது மிகவும் பாராட்டத்தக்கது. அதன்விளைவாக தான் மாநில அரசை கலந்து ஆலோசிக்காமல் மத்திய அரசு எடுக்கிற முடிவினால்தான் அரிசி, பெட்ரோல், டீசல், சமயல் எரிவாயு, நிலக்கரி போன்ற பொருள்களுடைய விலை உயர்ந்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது. இதன் விளைவாக மாநில பொருளாதார வளர்ச்சியை பாதிக்குமா என்கிற ஐயப்பாடு உள்ளது என்று குறிப்பிட்டுள் ளதை மத்திய அரசு தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டுமெறு கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசி விலை உயர்த் தப்பட்டால்கூட சாதாரண அரிசி விலையை உயர்த்தாமல் இன்றைக்கு ஏழைகளைப் பற்றி சிந்தித்துக்கொண்டிருக்கிற



1992 ஜனவரி 30] [டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்]

புரட்சித் தலைவியினுடைய முடிவு பாராட்டத்தக்கது. ஏழை களுக்கு உணவு, உடை, உறைவிடம் போன்ற அனைத்து அடிப் படை வசதிகளையும் வழங்க மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு பொறுப்பேற்றிருப்பது பாராட்டத் தக்கது.

வடக்கு மாவட்டங்களில் புயல், பெருமழை காரணமாக ஏற்பட்ட சேதங்களுக்கு விரைந்து செயல்பட்டு, நிவாரணப் பணி யாற்றியது பாராட்டத்தக்கது. அழிக்கப்பட்ட மற்றும் தானே அழிந்துபோன காடுகளை மீண்டும் உருவாக்க மேற்கொள்ளப் படும் முயற்சிகளும் பாராட்டத்தக்கன.

1990 ஆம் ஆண்டுக்குள் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு தொழில் வளர்ச்சியில் முன்னிலை நிற்கத் தூண்டுதல் அளிக்கும் ஊக்க உதவிகள் வசதிகள் பாராட்டத்தக்கது. 20 ஆண்டுகளுக்கு மேலாக புதிதாக புதிய மத்திய திட்டம் ஒன்று கூட தமிழ் நாட்டில் தொடங்கப்படவில்லை என்பது உண்மையிலேயே வருந் தத்தக்கது. இந்தக் குறைகள் களையப்பட்ட வேண்டும் என்கிற அரசின் எண்ணம் பாராட்டத்தக்கது.

பிற்பகல் 1-20

தொகுதிக்குள்ளே செல்கிறபோது மக்கள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே என்னிடத்திலே கேட்பது எல்லாம் எங்களுடைய கிராமங்களுக்கு பஸ் வசதி வேண்டும், எங்களுடைய கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி வேண்டும் என்கிற அடிப் படை கோரிக்கைகளை தான் எப்போதும் வைக்கிறார்கள். 1992 டிசம்பர் இறுதிக்குள் ஆயிரம் மக்களுக்கு அதிகமாக உள்ள கிராமங்களுக்கு எல்லாம் பஸ் வசதி செய்து தரப்படும் என்ற இந்த அரசின் திட்டம் பாராட்டத்தக்கது. நடப்பு ஆண்டு இறுதிக்குள் குடி நீரே இல்லாத கிராமம் இல்லாத நிலை உருவாகும் என்பதும் பாராட்டத்தக்கது. புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் மூலமாக 10,000 இலவச மருத்துவ முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டிருக்கிறது. அதிலே முதல் முகாமிற்கு நானே சென்று, காலை முதல் மாலை வரை நோயாளி களைப் பார்த்தேன். அப்படிப் பார்க்கிறபோது கிராமங் களிலே இருக்கிற நோயாளிகள், பெரிய மருத்துவ மனைக்குச்

[டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்] [1992 ஜனவரி 30

செல்ல வசதியற்றவர்கள் எல்லாம் அங்கே பரிசோதனைக்கு உட்பட்டபோது அவர்களிடத்திலே மலிந்திருக்கிற பல நோய்களை, டியூபர்குலோசிஸ் போன்ற நோய்களை எங்களால் கண்டு பிடிக்க முடிந்தது. அவர்கள் எல்லாம் உரிய மருத்துவ வசதிக்காக எந்தெந்த அரசு மருத்துவ மனைக்கு அனுப்பப்பட வேண்டுமோ அங்கே அனுப்பப்பட்டதை எண்ணிப் பார்க்கிறபோது உண்மையிலேயே எவ்வளவு பயனுள்ள திட்டமாக அந்தத் திட்டம் இருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்து, பாராட்டுகிறேன்.

ஒருங்கிணைந்த மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு லட்சம் மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிப்பது பாராட்டத்தக்கது. பட்டா பாஸ் புத்தகம் வழங்கும் திட்டம் பயனுள்ளது. கூட்டுறவுச் சங்கங்களில் போலி உறுப்பினர்களை ஒழித்து, 1992 மே இறுதிக்குள் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை நடத்த அரசு பொறுப்பேற்றுள்ளது பாராட்டத்தக்கது. மத்திய அரசு பொருளாதார வகையில் பற்றாக்குறையை ஈடுசெய்ய நடவடிக்கை எடுக்கலாம். ஆனால் ஏழை மக்களைப் பாதிக்கக்கூடாது என்னும் நம்முடைய அரசினுடைய கொள்கை பாராட்டத்தக்கது. (மணி அடிக்கப்பெற்றது).

ஓரே ஒரு முக்கிய கோரிக்கையை இங்கே வைக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு அரசினுடைய நிதிநிலை காரணமாக புதிய கல்லூரிகள் துவங்க இயலாத நிலை இருந்தாலும், என்னுடைய தொகுதியிலே எஸ். வி. நகரம் என்ற இடத்திலே 40 எக்கர் நிலத்தில் ஜாகீர் அரண்மனை ஒன்று சும்மா இருக்கிறது. அந்த இடத்திலே அரசு தன்னுடைய நிதிநிலையிலிருந்து அதிகம் செலவு செய்யாமல் ஒரு கல்லூரியைத் துவக்க வாய்ப்பு இருக்கிறது. அதைப்போல வேலூரிலே இயங்கிக் கொண்டிருக்கிற அரசு பொறியியல் கல்லூரியை திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கு மாற்றுகிறபோது அதை என்னுடைய தொகுதியிலே இருக்கிற, எஸ். வி. நகரத்திலே இருக்கிற ஜாகீர் அரண்மனைக்கு அரசுக்கு அதிகச் செலவு இல்லாமல் மாற்ற முடியும் என்று தெரிவித்துக்கொண்டு, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.



1992 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. வி. கே. லட்சுமணன்.

* **திரு. வி. கே. லட்சுமணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் தனது உரையில் பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியத் திருநாட்டை 21 ஆம் நூற்றாண்டுக்கு அழைத்துச் செல்வேன் என்று சூளுரைத்த நேருவின் பேரனைத் தமிழ் மண்ணிலே இழப்பதற்கு காரணமாக இருந்த பயங்கரவாதத்தை உறுதியோடும் துணிச்சலோடும் ஒடுக்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொண்டு, அதில் பெருமளவிற்கு வெற்றி கண்டிருக்கிற இந்த அரசுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நான் எனது நன்றி கலந்த பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அளவுக்குக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்காவிட்டால் தமிழகத்தின் சட்டம், ஒழுங்கு, அமைதி இவை அனைத்தும் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கும் என்பதைக் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. இந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து தீவிரப்படுத்த வேண்டுமென்று தமிழக முதல்வரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் இந்த அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கை நல்ல பலனைத் தந்துள்ளது. கர்நாடக மாநிலத்தில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட தமிழருக்காக சிறப்பான முறையில் நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு உத்தரவிட்ட மாண்புமிகு தமிழக முதல்வரவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் நடுவர் மன்றத்தினுடைய ஆணையைக் காலந்தாழ்த்தாது அதன் அரசிதழில் வெளியிட்ட மத்திய அரசுக்கும் எனது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கர்நாடக மாநிலத்திலிருந்து குறிப்பாக கோவை மாவட்டத்திற்குக் குடிபெயர்ந்து வந்திருக்கிற கர்நாடகத் தமிழர்கள் அங்கே அவர்களுடைய சொத்துக்களையும், வீடுகளையும், நிலபுலன்களையும் இழந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய குழந்தைகளையும், பெண்களையும் அழைத்துக் கொண்டு செல்வதற்கு இலவசமாக பஸ் பாஸ் வழங்கப்படுவதில்லை. தமிழக எல்லை வரை

[திரு. வி. கே. லட்சுமணன்] [1992 ஜனவரி 30

தான் பஸ் பாஸ் வழங்கப்பட்டிருக்கிறது. தமிழக எல்லையைத் தாண்டி கர்நாடகம் செல்லுமளவுக்கு அந்தப் பாஸ் வழங்கப்படவில்லை. எனவே அவர்கள் தமிழக எல்லைவரை மட்டுமல்ல, எல்லையைத் தாண்டி பல மைல் தூரம் உள்ள இடங்களுக்குப் போகவும் பஸ் பாஸ் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

பிற்பகல் 1.25

**மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடக மாநிலத்திலிருந்து வந்துள்ள பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு தமிழகத்தில் பேருந்து வசதிகளை இலவசமாகச் செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும், கர்நாடக மாநிலத்தில் நம்முடைய பேருந்துகள் ஓட முடியவில்லை. உங்களுக்கே தெரியும். பேருந்துகள் தாக்கப்படுகின்றன. ஆகவேதான் பேருந்துகள் விடவில்லை. கர்நாடக மாநிலத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த முதலமைச்சர்தான் இருக்கிறார். அவருக்கு அறிவுரை வழங்கி, அங்கேயிருக்கிற தமிழர்களை பாதுகாக்க நீங்கள் சொல்லவேண்டுமென்று பேரவை சார்பாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. லட்சுமணன் :** இந்த அரசின் தீவிர மதுவிலக்குக் கொள்கையை நான் பெரிதும் வரவேற்கிறேன். கள்ளச் சாராயம் எந்த அளவுக்கு குறைந்திருக்கிறது, எத்தனை சதவீதம் குறைந்து இருக்கிறது என்று நான் விவாதிக்கவில்லை. காரணம் ஆளுநர் அவர்கள் பேசுகிறபோது,

"The policy has been implemented so successfully that there has been a dramatic drop in the flow of illicit liquor".

என்றுதான் சொல்லியிருக்கிறார்களே தவிர, முழுவதுமாக குறைந்துவிட்டது என்று கருத்து தெரிவிக்கவில்லை. நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், தமிழக முதல்வர் அவர்கள்,



1992 ஜனவரி 30] [திரு. வி. கே. லட்சுமணன்]

இப்போது இருக்கிற பிராந்திக் கடைகளையும் மூடிவிட உத்தரவிட்டால், எந்த அளவுக்கு நஷ்டம் ஏற்படுகிறதோ அதற்கு சரியான நஷ்ட ஈட்டை மத்திய அரசு கொடுக்க சித்தமாக இருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலப் பதிவேட்டு முறையை நவீனப் படுத்துவும், பட்டா பாஸ் முறையை கணனி மயமாக்கவும் அரசு முன்வந்திருப்பது, வேளாண் பெரு மக்களுக்கு பெரிதும் பயன் அளிப்பதாக இருக்கும் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களை வருகின்ற மே மாதம் 30-ந் தேதிக்குள் நடத்தி முடிப்பதாக அரசு அறிவித்திருப்பது நல்ல செய்தியாக இருந்தாலும்கூட இந்தக் கூட்டுறவுத் துறையில் இருக்கிற பல்வேறு குறைபாடுகளை களைவதற்கு ஒரு உயர் மட்டக்குழு அமைக்கவேண்டும். அதன் பரிந்துரையின் அடிப்படையில் இந்தத் தேர்தல்கள் நடந்தால், கூட்டுறவுத் துறைக்கு நல்ல பயனை ஏற்படுத்தும், இல்லையென்றால், இந்தக் கூட்டுறவுத் துறை மேலும் பலவீனப்படுவதற்குத்தான் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே நல்ல முறையில் சட்டவல்லுநர்களைக் கலந்து ஆராய்ந்து, தேர்தல்களைக் கொண்டுவர வேண்டுமென்று முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையில், கடந்த 20 ஆண்டு காலத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில், மைய அரசு எந்த முதலீடும் செய்யவில்லை என்ற ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். தமிழகம் நீர் வளத்தைப் பொறுத்தவரையில் எப்படியிருக்கிறது என்பதை நாம் தெரிந்து கொண்டாகவேண்டும். கோவைக்கு குடிநீர் வேண்டுமென்று சொன்னால் கேரளாவை நம்பியிருக்கிறோம். சென்னைக்கு குடிநீர் வேண்டுமென்று சொன்னால், ஆந்திராவை நம்பியிருக்க வேண்டும். தஞ்சைக்குத் தண்ணீர் வேண்டுமென்றால், கர்நாடகத்தை நம்பியிருக்கவேண்டும். அந்த அளவுக்கு நம்முடைய நீர் வளம் குறைந்து அமைந்திருக்கிறது. ஆனால் 1967-லிருந்து இன்றுவரை ஒட்டுமொத்தமாக நாட்டிலே மைய அரசு முதலீடு செய்திருக்கிற சதவீதத்தைப் பார்த்தால், இந்தக் குறிப்பிட்ட ஆண்டு காலத்தில் அது தமிழ்நாட்டில் எந்த அளவுக்கு முதலீடு செய்திருக்கிறதோ அதைவிட ஒன்றும் அதிகமாக இல்லை. தமிழ்நாட்டில் நீர் வளம்

இன்மை காரணமாகவும் மின்சாரம் இன்மை காரணமாகவும் இங்கே முதலீடு செய்பவர்கள் குறைந்து போனதை நாம் மறுக்க முடியாது. கடந்த 10 ஆண்டு காலமாக, இந்தியாவிலே மைய அரசு இரண்டு துறைகளில்தான் அதிகமான முதலீடு செய்து இருக்கிறது. (1) எஃகு, (2) மின்சாரம். இந்த இரண்டு துறை களிலும் 40 சதவிதத்திற்கு மேலாக மைய அரசு முதலீடு செய் திருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டில் அந்தத் துறைகளில் முதலீடு செய்ய முடியாது. எஃகு உற்பத்திக்கும் வாய்ப்பு இல்லை. அதேபோல், புனல் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும், அதிகமான வாய்ப்பு இல்லை. இவைகள்தான் முக்கிய காரணமாக இருந்திருக் கிறது. இருந்தாலும், ஒட்டுமொத்தமாக முதலீடு குறைந்தது என்று சொல்வதற்கு நாங்கள் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறோம். புதிய தொழில்கள் துவங்குவதில் ஒரு வேளை எண்ணிக்கை குறைந்திருக்கலாம். நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம், இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ், இந்தியன் டிரக்ஸ் அண்ட் ஃபார்ம சூட்டிக்கல்ஸ், பி.எச்.இ.எல். போன்ற. . . .

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அவையின் அனுமதியோடு சிறிது நேரம் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**திரு. வி. கே. லட்சுமணன் :** இதுபோன்ற பெரிய நிறுவனங் களில் கூடுதலாக முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் இதைப்பற்றியெல்லாம் ஒரு குறிப்பு இருந் திருந்தால் அது பயன் உள்ளதாக இருந்திருக்கும். மாநில அரசு தொழில்களைத் தொடங்க எத்தனை விண்ணப்பங்களை மைய அரசுக்கு அனுப்பியிருந்தார்கள், எத்தனை விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன என்பது போன்ற செய்திகளைத் தெரி வித்திருந்தால் அதற்காக நாம் மைய அரசோடு தொடர்பு கொள்ள ஏதுவாக இருந்திருக்கும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் எங்களுக்குக் கிடைத்த



தகவல்—கடந்த ஆண்டுகளிலே மற்ற மாநிலங்களைப் போலவே நம்முடைய மாநிலத்திலேயிருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன என்பதுதான். ஆனால் அதேபோல பல விண்ணப்பங்களுக்கு அனுமதியும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

விலைவாசி இன்றைக்கு ஏறியிருக்கிறது என்பதை தோழமை உணர்ச்சியோடு நான் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. அந்த உயர்வுக்குக் காரணம் மத்திய அரசுதான் என்று சொல்லு வதும், டீசல் விலை உயர்வின் காரணமாக எல்லா விலைகளும் உயர்ந்துவிட்டன என்று சொல்லுவதும் பொருத்தமாக இருக் காது. காரணம், டீசல் விலை உயர்ந்தால் கடுகின் விலை உயர முடியாது. டீசல் விலை உயர்ந்ததால் ஏனைய பொருள்களின் விலை உயர்ந்துவிடும் என்று சொல்லுவது அவ்வளவு சரியான வாதமாக இருக்காது. அண்மையில் 'மலையாள மனோரமா' என்ற பத்திரிகையில் ஒரு செய்தி வெளி வந்துள்ளது. உத்திரப் பிரதேசத்திலும், மேற்கு வங்கத்திலும், தமிழ்நாட்டிலும் விலை உயர்வுக்குக் காரணம் பதுக்கல் என்ற செய்தியை அவர்கள் வெளி யிட்டிருந்தார்கள். ஆகவே இந்த விலை உயர்வுக்கு பதுக்கல் தான் ஒரு காரணமாக இருக்க முடியும். இதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக் கிறேன். வணக்கம்.

### 7. அரசினர் தீர்மானம்.

### விதி 32-ஐத் தளர்த்துதல் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

*** மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ, 31—1—1992 அன்று தளர்த்தி அந்த நேரத்தை இதர அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்."

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

[1992 ஜனவரி 30

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறை வேறியது.

### 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

**(ஈ) முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவப்படம் 31—1—1992 ஆம் நாளன்று பேரவையில் திறக்கப்பெறும் விழா நடைபெறுவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நாளை காலை 10 மணிக்கு பேரவையில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் திருவுருவப்படம் நமது முதல்வர் புரட்சித் தலைவி அவர்களால் திறந்து வைக்கப்படும் விழா நடை பெறும். உறுப்பினர்கள் இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன். இதற்கான அழைப்பிதழ்கள் தனித்தனியே உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.33 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



1992 ஜனவரி 30]

### 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 4—3—1991 ஆம் நாளிட்ட 66 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

2. முன்னாள் பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் படுகொலை செய்யப்பட்ட இடத்தை பாதுகாப்பது, மற்றும் நினை வாலயம் ஏற்படுத்துவதற்காக ஸ்ரீ பெரும்புதூர் அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் மற்றும் அருள்மிகு பாஸ்கரசாமி கோயி லுக்கு சொந்த (சர்வே நெ. 734) கோயில் நிலங்களை செங்கை-அண்ணா மாவட்ட ஆட்சியருக்கு விற்பனை செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 19—6—1991 ஆம் நாளிட்ட 334 ஆம் எண் அரசாணையில் வெளி யிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. இராஜா அண்ணாமலைபுரம், ஸ்ரீஐயப்பசாமி கோயில் அறக் கட்டளைக்கு இந்து சமய அறநிலையச் சட்டத்தில் சில பிரிவுகளி லிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 13—12—1990 ஆம் நாளிட்ட 719 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 116 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர் வாணையக் குழு (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்தமை குறித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் 12—7—1991 ஆம் நாளிட்ட 246 ஆம் எண் அர சாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

[1992 ஜனவரி 30

5. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் சில திருத்தங்கள் செய்தமை குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 28—2—1991 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

6. கோவை, திருவாளர்கள் சிவானந்தா மில்ஸ் லிமிடெட்டால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியினை 23—4—1991 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11—7—1991 ஆம் நாளிட்ட 353 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

7. கடம்பாடி, திருவாளர்கள் கடம்பாடி கனி எண்ணெய் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்தினால் செலுத்தப்பட வேண்டிய 1983-84 முதல் 1988-89 ஆம் ஆண்டு வரைக்கான விற்பனை வரியினை தள்ளுபடி செய்தமை குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—4—1991 ஆம் நாளிட்ட 186 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

8. திருப்பூர், திருவாளர்கள் திருப்பூர் பருத்தி நூற்பாலை மற்றும் நெசவாலையினால் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரியினை ஆலை திறக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளி வைப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25—2—1991 ஆம் நாளிட்ட 99 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



1992 ஜனவரி 30]

9. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட
அயல்நாட்டு சாராவிகள் (உற்பத்தி) விதிகளில் திருத்தமொன்று
செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத்
துறையின் 18—1—1991 ஆம் நாளிட்ட 2 ஆம் எண் அரசாணையில்
வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது
விலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

10. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி விதிகளில் சில
திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய
அறக்கட்டளைகள் துறையின் 12—2—1991 ஆம் நாளிட்ட 69 ஆம்
எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம்
ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்
10/1939) 10(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

11. 1990 ஆம் ஆண்டு சர்வதேச திரைப்பட விழாவில் செய்தி
மற்றும் சுற்றுலாத் துறையினால் சிலைடு அல்லது திரைப்படங்கள்
மூலமாக காண்பிக்கப்படும் ஒவ்வொரு விளம்பரங்களுக்கும்
விளம்பர வரியிலிருந்து விலக்களித்தமை குறித்து வணிகவரிகள்
மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 24—12—1990 ஆம்
நாளிட்ட 745 ஆம் என் அரசாணையில் வெளியிடப்பட்ட
அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பரங்கள் வரிச்
சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1983) 7(3) பிரிவின்கீழ்
பேரவை முன் வைக்கப்பெற்றது].

12. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின்
அட்டவணையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக
வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11—2—1991
ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறி
விக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்
டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) 16(4) பிரிவின்கீழ் பேரவை
முன் வைக்கப்பெற்றது].

13. குதிரைப் பந்தய காப்பாளரால் சென்னை குதிரைப் பந்தய
திடலில் நடைபெறும் ஒவ்வொரு பந்தயத்திற்கும் திருத்தி
யமைக்கப்பட்ட வரிகளை நிர்ணயிப்பது குறித்து வணிக வரிகள்
மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 5—11—1990 ஆம்

நாளிட்ட 640 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1935 ஆம் ஆண்டு தமிழ்நாடு பந்தயம் கட்டுதல் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1985) 10(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

14. மன்னார்குடி, அரிமாச் சங்கத்தினால் நடத்தப்பட்ட கண்தானம் பற்றிய பொருட்காட்சியை சிலைடின் மூலமாக காண்பிக்கப்படுவதற்கு விளம்பர வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 20—2—1991 ஆம் நாளிட்ட 89 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1983) 7(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

15. சிலைடு மற்றும் திரைப்படங்களின் மூலம் சமூக குற்றங்களைப் பற்றிய விளம்பரத்திற்கு விளம்பர வரியிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 8—11—1990 ஆம் நாளிட்ட 646 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1983) 7(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

16. 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரி விதிகளில் திருத்தமொன்று செய்தமை குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 10—4—1991 ஆம் நாளிட்ட 205 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1839) 16(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

17. 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி மன்றம் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் பெண்களை உறுப்பினர்களாக மன்றங்களில் இசைந்து சேர்த்துக்கொள்ளுதல்) விதிகளில் சில விதிகளை உருவாக்குவது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 20—7—1991 ஆம் நாளிட்ட 210 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.



[1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

18. 1944 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகு பிடிப்பவர்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 5—6—1991 ஆம் நாளிட்ட 191 ஆம் எண் **அரசாணையில் வெளியிடப்பட்ட** அறிவிக்கை. [1943 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகு பிடிப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1943) 22(4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

19. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 5—6—1991 ஆம் நாளிட்ட 192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு வட்டிக்கு கடன் கொடுப்பவர்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 26/1957) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 5—6—1990 ஆம் நாளிட்ட 486 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராயங்கள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 24—10—1990 ஆம் நாளிட்ட 964 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[1992 ஜனவரி 30

22. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரணம்) விதிகள் இயற்றுவது குறித்து வருவாய்த்துறையின் 10—10—1990 ஆம் நாளிட்ட 2151 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடு குத்தகையாளர்கள் குத்தகை நிலுவை (நிவாரணம்) சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 38/1990) 15(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

23. சென்னை, திருவொற்றியூர் திருவாளர்கள் சொன்திக் சர்பேக்டென்ஸ் லிமிடெட்டால் செலுத்தப்பட வேண்டிய வரியை தள்ளி வைத்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 18—7—1991 ஆம் நாளிட்ட 363 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

24. திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கடம்பார் கோயில், மணப்பாறை மற்றும் சம்பட்டு கிராமங்களிலுள்ள சோதனைச் சாவடிகளை மாற்றுவது குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 8—11—1990 ஆம் நாளிட்ட 647 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

25. செங்கை-அண்ணா மாவட்டம், திருவாளர்கள் வீரராகவ நெசவாலை லிமிடெட்டால் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரியை 24—1—1991 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளி வைத்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 6—6—1991 ஆம் நாளிட்ட 308 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



1992 ஜனவரி 30]

26. மதுரை, திருவாளர்கள் வள்ளல் கேஸ்டிங்ஸ் லிமிடெட்டால் செலுத்தப்பட வேண்டிய வரியை 1—1—1991 முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிவைத்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 29—4—1991 ஆம் நாளிட்ட 235 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

27. சென்னை, திருவாளர்கள் அன்ராஜ் லாட்டரீஸ் மற்றும் ஜிதேந்திரா லாட்டரீஸினால் செலுத்தப்பட வேண்டிய 1982-83 ஆம் ஆண்டிற்கான விற்பனை வரியைத் தள்ளுபடி செய்தமை குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 28—5—1991 ஆம் நாளிட்ட 272 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

28. பழனி, திருவாளர்கள் பழனி ஸ்ரீமுருகன் நெசவாலை லிமிடெட்டால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியை 2—4—1991 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளி வைத்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25—6—1991 ஆம் நாளிட்ட 339 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

29. சென்னை-31, லிட்டில் சிஸ்டர்ஸ் ஆப் தி புவர் மற்றும் முதியோர் இல்லத்தின் உபயோகத்திற்காக வாங்கப்பட்ட ஒரு டெம்போ டிராவலருக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 16—4—1991 ஆம் நாளிட்ட 214 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகளின் நுழைவின்மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 19(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

30. சிறப்பு அனுமதியுடன் அயல் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட பொதுத் துறை வாகனங்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தல் குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 29—5—1991 ஆம் நாளிட்ட 894 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

31. 1991 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (ஆதி திராவிடர் மற்றும் மலைவாழ்குடியினர் மகளிர் ஆகியோருக்கு வார்டுகள் ஒதுக்குதல்) விதிகள் இயற்றுவது குறித்து நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 20—7—1991 ஆம் நாளிட்ட 211 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

32. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிப்பாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 31—12—1990 ஆம் நாளிட்ட 1025 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

33. 1966 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (மிகையான நிலத்திற்கு பணம் கொடுத்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 28—3—1990 ஆம் நாளிட்ட 51(2) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தம் (நிர்ணயித்தல் மற்றும் நிலத்திற்கு உச்சவரம்பு) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 58/1961) 112(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

34. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அயல்நாட்டு சாராவிகள் (மொத்தமாக வழங்குதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும்





சமய அறக்கட்டளைகள் துறையின் 16—11—1990 ஆம் நாளிட்ட 989 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

35. காரைக்குடி திரு. ஆர். நடராஜனுக்குச் சொந்தமான வண்டி எண் டி.என்.ஆர். 3459, 1—1—1983 முதல் 31—1—1983 வரை செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் தண்டத் தொகை குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 12—8—1991 ஆம் நாளிட்ட 1255 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

36. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 7—1—1991 ஆம் நாளிட்ட 44 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறைகள்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

37. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து கல்வித் துறையின் 12—6—1991 ஆம் நாளிட்ட 660 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1974) 57(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

38. 1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 24—7—1990 ஆம் நாளிட்ட 803 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[1992 ஜனவரி 30

39. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தினால் செலுத்தப்பட வேண்டிய வரியிலிருந்து வரி சதவீதம் குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 21—3—1991 ஆம் நாளிட்ட 518 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

40. தர்மபுரி திருவாளர்கள் சிவமணி நூற்பாலை லிமிடெட் டால் செலுத்தப்பட வேண்டிய வரியை 1—4—1991 முதல் மூன்று ஆண்டு காலத்திற்குத் தள்ளிவைத்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25—6—1991 ஆம் நாளிட்ட 340 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

41. கோயம்புத்தூர் மற்றும் குன்னூர் ஆகிய மையங்களில் ஏலத்தில் விற்கப்படும் தேயிலைக்கு 1—4—1991 முதல் 31—3—1992 முடிய மேலும் ஓர் ஆண்டு காலத்திற்கு 6 சதவீத விற்பனை வரியினை 5 சதவீதமாகக் குறைத்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11—4—1991 ஆம் நாளிட்ட 206 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

42. 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு சர்க்கரைப் பாகு கட்டுப்பாடு மற்றும் முறைப்படுத்துதல் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மது விலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறையின் 29—5—1991 ஆம் நாளிட்ட 145 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].



[1992 ஜனவரி 30

43. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் 1988-89 ஆம் ஆண்டிற்கான திருத்திய ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது (தமிழ், ஆங்கிலம்).

44. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1989-90 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

**ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.**

1. சட்ட விதிகள் ஆய்வுக்குழுவின் பரிந்துரையின் மேல் உள் துறையின் 7—12—1979 ஆம் நாளிட்ட அறிவிக்கைக்கு பிழை திருத்தமொன்று செய்தமை குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 7—12—1979 ஆம் நாளிட்ட 3010 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை.

2. 1991 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 6/1991).

3. 1991 ஆம் ஆண்டு பச்சையப்பா அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொது அறக்கட்டளைகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மை மேற்கொள்ளுதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 7/1991).

4. தமிழ்நாடு 1992 ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/1992).

5. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக் கழகச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/1992).

6. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில குடிசை மாற்று வாரியம் (திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 3/1992).

7. 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 4/1992).

8. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் இணைப்பு '2'-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிறுவனங்கள் பட்டியலில் தமிழ்நாடு மின்சக்தி நிதி மற்றும் அடிப்படைத் தேவைகள் வளர்ச்சிக் கழகத்தினை சேர்ப்பது குறித்து 3—1—1992 ஆம் நாளிட்ட சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

9. 1992 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

D
V211, 31 N92
N92.14.1
600 008.
161508

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore. Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.